CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கழுக்குன்றம்

தல வரலாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

C.S.S.

அருளாசியுடன்
திருவாவடுதுறை ஆதீனம்

உ
சிவமயம்

திருக்கழுக்குன்றம் தலவரலாறு

திருவாவடுதுறை ஆதீனம்
13 SEP 2005
திருவாவடுதுறை



சித்தாந்த செல்வர். கணித ஜோதிட அறிஞர்.
முதுபெரும் புலவர்.
தி.ச. வேதாசல முதலியார்

பதிப்பு உரிமை வெளியீடு
B. நவீன் வசந்த்
நவீன் போட்டோஸ்
36, தெற்குமாடவீதி
திருக்கழுக்குன்றம்-603109.
காஞ்சிபுரம் மாவட்டம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்

முகவுரை

குரு மரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போத நெறி காட்டும் வெண்ணெய்
பயில் வாய்மை மெய்கண்டான் சந்ததித்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழீற் திருவாவடுதுறை வாழ்
குரு நமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடைபோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ

திராவிட மாபாடிய கர்த்தர்
ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23-வது குருமகா சந்நிதானம் சீர்வளர்-சீர்-சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் திருவடி மலர்களை வணங்கி, திருக்கழுக்குன்றம் தலவரலாறு எழுதுகிறேன்.

திருக்கழுக்குன்றம் புராணம் கவியரசு அந்தகக் கவி வீரராகவ முதலியார் இயற்றியது. அவர் பிறவிக் குருடர். திருக்கழுக்குன்றம் வேதகிரி பெருமான் பேரருள் பெற்ற தெய்வீகப் புலவர். ஆன்றோர் பலரால் பாராட்டப்பெற்றவர்.

அவரே "தன்னை புகழ்தலும் தகும் புலவோர்க்கு" எனும் இலக்கணப்படி ஒரு சீட்டுக் கவியில் "ஏடாயிரங்கோடி எழுதாது தன் மனத்தே எழுதிப் படித்த விரகன், இமசேது பரியந்தம் இணையிலா கவி வீரராகவன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

திருக்கழுக்குன்றம் புராணத்திற்கு காஞ்சிபுரம் சபாபதி முதலியார் சிறந்த பொழிப்புரை எழுதியுள்ளார். அவர் புராணத்தின் இடையே உள்ள திருநீற்றின் பெருமை ருத்திராக்கம், லிங்கம் மற்றும் பிரதோஷ வழிபாடு முதலியவற்றை சிறப்பாக எழுதியுள்ளார் குறிப்புரையில்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



அருள்மிகு

திரிபுரசுந்தரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அருள்மிகு

வேதகிரீசுவரர் சுவாமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

வாழத்தான் அனத்தான் மகவான் கடல்
ஆழத்தான நத்தான் அருமாதவர்
சூழத்தான தானச்சுரர் தொழும்
வேழத்து ஆனைத்தான் பதமேற் கொள்வோம்

வாழ்த்து

வையகம் விளைக யாண்டு மதியின்மும் மாரி பெய்க
செய்யதண்டக நன்னாடும் சிவன் கழுக்குன்றம் வாழ்க
மெய்ய கம் வளர்க சைவ வெண்ணீறு சிறக்க வேள்விக்
கையகம் தழைக்க செங்கோல் காவலும் மலிக மன்னோ

வண்டீர மலர்த்தேன் மாந்தும் பெண்ணையின் வடபால், வேழம்
கண்டீரவங் கண்டார்க்கும் காளத்தி வரையின் தென்பாற்
கண்டீர புணரி மேல்பால் பவளமா சயிலக் கீழபாற்
றுண்டீரத் திருநாடென்னும் அதன் வளம் தெரியச் சொல்வோம்.

தொண்டை நாடு, பெண்ணை நதிக்கு வடக்கு காளத்தி மலைக்கு தெற்கு கடலுக்கு மேற்கு பெரியபவளமலைக்கு கிழக்கில் உள்ளது.

அறநெறி யுளாத்த ஆசானா முதற்கடவுள் போந்து
மறைநெறி மலை யொன்றீட்டி மலைக்கொழுந்தாகி வைகும்
புறவணி நகரு மீண்டு புகழொடு பொலிந்திந்நாடு
திறல் கெழுநாட்டிற் கெல்லாந் தேசிகன் நிகர்த்தம்மா

ஆரண முதல்நூல் யாவும் அண்டமும் பயந்த அன்ன
பூரணி யுகள நாழி நெற் களாற் புரந்து எண்நான்கு
காரண அறமும் போற்றும் காஞ்சியும் படைத்திந்நாடு
தாரணி நாட்டுக் கெல்லாம் தாயெனத்தனகத்து மாதோ

<u>தொண்டை நாட்டு பெண்கள்</u>

ஊடும் போதும் வழாத உரையினர்
நீடும் கேள்வர் செயற்கு நிழலனார்
சூடும் முல்லை தோகையர் மண்ணிடை
கோடி சாலி பிறந்தன்ன கொள்கையார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

<u>ஆண்கள்</u> கொழிக்கும் நூலினர் கோட்டமில் சிந்தையர்
பழிக்கு மாநிலம் நல்கினும் பற்றிலார்
மழிக்க நீட்ட வெனச் செயும் வன்மையை
யொழிக்க மாதவதர் ஒத்துளர் மாந்தரே

நிறையும் கல்விக்கு அகன் கடல் நேர்பவர்
பொறையு மாற்றலும் பூமகள் போல்பவர்
மறையும் ஊழியும் அன்னதோர் வாய்மையர்
உறையு மண்ணுயிர்க்கு அன்னையர் ஒத்துளார்.

செறுப்பம் என்றொரு சிந்தை செய்வாரையும்
கறுப்ப மென்ன கனவிலும் சிந்தியார்
மறுப்பயின்றுயிர் வைகலின் வைகலும்
வெறுப்பர் திங்களை வேறென்தொல் கூறுகேன்

விருந்தோம்பல்

காணிற்றுண் ணென்றெழுந்து கலந்தெதிர்
பேணிச் சென்று பைந்தேனுகய் பேசிப்பின்
பாணிக்கேந்தன வீந்து பழிச்சுமை
நாணித்தாழ்வர் அந்த நாட்டு மாந்தரே

இத்திறத்தவர் யாரும் இடந்தொறும்
மொய்த்த தொண்டை நன்னாட்டிடை முக்கணான்
மெய்த்தவர்க்கு வெளிப்படு கின்றதோர்
உத்தமபதியுண்டது இயம்புவாம்

இத்தன்மையுள்ள தொண்டை நாட்டில் பரமசிவம் உண்மையான தவம் உள்ளவர்களுக்கு தரிசனம் கொடுக்கும் படியான உத்தம தலம் ஒன்று உண்டு அதன் சிறப்பினைக் சொல்கிறோம்.

<u>திருக்கழுக்குன்று நகரம்</u>

<u>வீடுகள்</u> பளிங்கு கற்களினாலும், சந்திர காந்த கற்களினாலும், சூரிய காந்த கற்களினாலும், தன் ஒளியினால் இருள்நீங்கச் செய்யும் பொன்னாலும் தெளிவுள்ள சிற்ப நூல்படி அமைந்திருக்கின்ற செல்வமுள்ள வீடுகள் அனந்தம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

கொடிகள்

வேதவெற் பென்பது வெற்பனந்தமாய்த்
தீதறக் கொழுந்து விட்டெழுந்து தேவரைப்
பாதகத்து இடர் துடைக்கின்ற பான்மையே
யாதல் ஒத்தன கொடியாடு மாடமே

சைவர்கள்

வேதத்திற் பொருப்பை யன்னார் ஆகம வேலைக் கொப்பார்
போதத்தில் பரிதி நேர்வா புனிதத்திற் கங்கை போல்வார்
சாதத்தின் அரனை யொப்பர் தானத்தின் முகில் கடுப்பார்
நாதத்திற் கடந்த சைவக் குரவர் அந்நகரின் மிக்கோர்

தவசிகள்

இந்திரன் பதத்திற்கேனும் எண்கனான் உலகிற்கேனும்
சுந்தரப்புவியோரேமும் தொழுதெழும் அரசிற்கேனும்
செந்திருக் கடைக் கண்ணோடும் செங்கை எட்காறுநீறு
தந்தருள் செய்யிற் போதுமெனத்தக்தோர் தவத்தின் மிக்கோர்

விருந்தோம்பல்

கவளமால் கரித்தோல் போர்த்தோன் அனையவர் கடிகையேந்தி
தவள வான்பசியுற்றெய்தக் கன்று காண்சுரபி போன்று
பவளமா தவ்விமீதிற் பரிதியின் மதி சேர்ந்தென்ன
தவள ஒதனமிட்டு ஈவார் கணிப்பில் சைவமின்னார்.

நறுநெய் பாற்றயிர் கருப்பஞ்சாறெனும் நரலைப்பானம்
பெறுமுகில் வெள்ளிக் குன்றிற் பெய்தென வயினிக்குப்பை
செறிய விட்டவையும் பெய்து சிவன்திருத் தொண்டர் யார்க்கு்
நெறி வழா தமுது செய்வித்தறஞ் செய்வார் நியமமெல்லாம்

எய்த நீர் யாண்டையுள்ளீர் ஈண்டெய்தப் பெற்ற தெங்கள்
மெய்த்தவம், கிளயொடுய்ந்தோம் விழுமிதிந்நாள் என்றேந்திக்
கைத்தலந்தழீ இக்கொண்டே கிக் கருத்தறிந்து ஆரவார்த்தி
வைத்திருந்தகன்றும் மீட்சிவேட்குநர் மக்களெல்லாம்

அந்த நகரில்

முழா வொலி யாழொலி முக்கனணாய கன்
விழா வொலி மணத்தொலி வேள்வியாவையும்
வழா லொலி மறையொலி வானையும் கடந்து
எழா லொலி கடல் கிளர்ந்தென வொலிக்குமால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கயிலையில் பரமசிவம் வீற்றிருத்தல்

கயிலாய மலையில் உயரிய சிகரங்களின் மத்தியில் உள்ள ஒரு பெரிய சிகரத்தில் அமைத்த அம்பலத்தில், கற்பகமணித் தீபம் போன்று மகாமேருவைப் பார்க்கிலும் அகன்றதாகிய மண்டபத்தில் பளிங்கினாலாய மேடையில் செம் பொற் சுடர்வீசுகின்ற அரியணையில் கங்காநதியும் இளம்பிறையும் நீண்ட சடாமுடியில் தவழவும், நெற்றியில் அணிந்த திருநீறு இளநிலா வொளிவீசவும், புலித் தோலாடையைப் புலியென எண்ணி மருளும் மான்கன்றும் மழுப்படையும் முக்தியைத் தருகின்ற வரதமும் அபயம் தரித்துள்ள திருக்கரங்களில், நாகக் கூட்டங்கள் விளங்கவும் சிலம்பொலி ஒலிக்கவும் அந்திப்பொழுதில் செக்கர் வானத்தில் தோன்றும் நிலவின் சிறப்பென்று சொல்லும்படி திருநீறணிந்த பவளம் போன்ற மேனி ஒளிவிடவும்அறம் வளர்த்த பார்வதிதேவியார் திருவுள்ளம் மகிழ்ந்து இடப்பாகத்தில் வீற்றிருக்கவும் பரமசிவனார் திருவோலக்கம் கொண்டிருந்தார்.

திருமால் சிவபெருமானைத் தரிசித்தல்

அறநெறி உரைத் தருளிய பரமசிவனார் திருவோலக்கங் கொண்டிருக்கும் திருமுன்னைக் கைதொழ திருமால் பாற்கடலை விட்டுநீங்கிச் சென்று, தானேறிவந்த கருடனைவிட்டு கயிலாயச்சாரலில் இறங்கி மேலே போய், பறவைகளுக்கரசராகிய அந்தக் கருடனை முதற் கோபுர வாயிலின் புறத்தில் நிறுத்தி விட்டு விரைவுடன் உள் சென்றார்.

தொழுதகையினைத் தலைமீது உடையவராய்த், துதிக்கும் நாவினராய், ஆனந்தத்தால் அழுகின்ற கண்ணீரையுடைய வராய் வீழ்ந்து வணங்கி, அரகரவென்றெழுந்து, இறைவனே எல்லா உலகங்களையும் படைத்தலும், காத்தலும், காத்து அழித்தலுமாகிய முத்தொழிலும் பொருத்திய தேவரீருடைய திருவருளின் வல்ல பத்தினால் அல்லது எளியேங்களால் செய்யும்பகுதியுடையதோ என்று பிரமன், உருத்திரன் செயலையும் தன்னுடன் சேர்த்துக் கூறி துதித்தனர். கொத்தாகிய துளசிமாலையணிந்த திருமாலைநோக்கி பரமசிவனார் அருள் கூர்ந்த உள்ளத்துடன் அவர் தம் காத்தல் தொழிலின் குறை நிறைவினை வினவிக் கொண்டிருந்தனர்.

கருடன் பங்கம் அடைதல்

பெரிய விடைத் தேவர் இருக்கின்ற வாயிலினிடத்தில் நின்றமேன்மைபொருந்திய கருடனும் அந்த விடைத் தேவரை வணங்காதவனாய், மேலாக உடைய முதன்மைத் தன்மையும் வெற்றியும் தங்களுக்குத் தாங்களே ஏற்றுக்கொள்ளுகின்றவர்கள் போல் தன் புத்தியில் அகந்தையுடன் நின்றான். இவ்வாறு நிற்கின்ற கருடனைப் பரமசிவனாருடைய வாகனக் கடவுளாகிய நந்திதேவர் கண்களில் தீப்பொறியுண்டாகும்படி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விழித்து நோக்கின அளவில் அந்தக் கருடனானவன் விடைத்தேவரை நோக்கி எங்கும் சென்று இரந்துண்பவனுடைய வாகனமாகிய நீ கோபித்து என்னை என்ன செய்குவை என்று சொன்னான்.

இவன் நம்மை வணங்கிலன் என்னும் குற்றத்தை கருடனிடத்தில் நினைக்கின்றிலர். தகுதியென்பது சிறிதுமில்லாத அந்தக் கருடன் பரசிவத்தை நிந்தித்த சொல்லாகிய தீயானது தவநெறியுள்ள நந்திதேவருடைய செவிகளிற சென்றது. தம்முடைய காதுகளின் வழியாகச் சிவநிந்தை என்னுந் தீக கொழுந்தானது அவியாது உள்ளத்திலிருந்து கொதித்து மேலெழவே குவிந்த நெற்றிக் கொம்புகளை அசைத்து, திமில் குடிக்கும்படி பரமசிவம் சர்வ சங்கார காலத்தில் தோன்றும் வடிவத்தையொத்தார்.

புவனங்கள் அதிர்ந்தன, அண்ட கோடிகள் வெடித்துகளாயின். சந்திர சூரியர் பின்னிட்டோடினர். எங்கும் இருள் கூட்டம் ஊழிக்காலம் இன்றோ என்னும்படி அதிகரித்தது. முனிவர்கள் கலங்கினர். தேவர்கள் இனி என்ன விளையுமோ என அச்சத்தால் வெயர்த்தனர். நந்திதேவர் கருடனைக் கொல்லுகிறேன் என்று சிறிது சுவாசம் விட்டனர். நந்திதேவர் விட்ட சுவாசம் என்னும் வெவ்விய காற்றுடன் கருடன் நின்ற நிலையை விட்டுநீங்கி நூறு யோசனை தூரம் உருண்டு போவான் மறுபடியும் உள்ளுக்கு வாங்கும் சுவாசத்துடன் நந்திதேவருடைய பெரிய நாசியில் புகுவான். இவ்வாறு கருடன் ஒளியுள்ள தேவர்களுக்கு முன்துன்பம் அடைந்ததனால் ஒளி பொருந்திய பொன்மலையை யொத்ததாகிய தன்னுடைய செம்மை நிறமானது வெள்ளிமலை போல் வெளுக்கும்படி வெட்கம் அடைந்தான். நந்திதேவர் விடுகின்ற சுவாசத்துடன் கருடனனானவன் அங்கும் இங்கும் வானில் பறக்கத்தக்க சிறகானது ஓடியும்படி அலைச்சல்பட்டு, சகிக்காதவனாய் இனி கணப்பொழுதில் தனக்குத் தேகம்விட்டுப் போம் என்பதை நினைத்து, மணங்கமழும் துளசிமாலையணிந்த திருமாலைத் தியானித்து முறையிட்டான். பரமசிவத்தின் திருமுன் இருந்த நந்திதேவரானவர் கொண்ட கோபத்தினால் பறவைகளுக்கு அரசனாகிய கருடன் துன்பப்படுகிறான் என்று சொல்லி தள்ளாமல் அந்தக்கருடனை விட்டு விடும்படியான கட்டளையைப் பெற்றுக்கொண்டு திருமால் கருடனுடைய முறையீட்டைக் கேட்ட அளவில் கருடன் கருத்தறிந்து துணைசெய்கின்றவராய், அச்சத்துடன் எழுந்து பரமசிவனாரிடத்தில் நந்திதேவரிடம் வந்து குற்றம் பொருந்திய தன்புத்தியினால் கருடன் செய்த பிழையை மனத்தில் எண்ணாமல் விட்டுவிடுவீராக இது பரமசினார் மொழிந்தபடி நான் சொன்ன முறைமை என்று கூறினார். மேலான சிவபெருமானை நிந்தித்த இந்தப் பாவிக்காக நீர்பரிந்து வந்தது என்னகாரணம். இந்தப்பாவியை இறக்கும்படி செய்வித்தல்லது உயிருடன் விடேன் என்று நந்திதேவர் கூறினார். திருமால் அவ்விடம் விட்டு திரும்பிச் சென்று பரமசிவத்தைப் பணிந்து, நந்திதேவர் கருடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விட்டிலர் என்று விண்ணப்பித்தார். பரமசிவனார் அந்த நந்தியை அழைப்பித்து இப்போது கருடனை விட்டு விடு என்று கட்டளையிட்டருளினார். சினத்துடன் நின்ற நந்தி எம்பெருமான் அடியேன் விண்ணப்பத்தை உவந்து கேட்டருளுதல் வேண்டும். தேவர்களும், முனிவர்களும், இந்தத் திருமாலும் என்னுடன் போரிட்டாலும் சங்கரனே நின்னை நிந்தித்த இப்பாதகனைக் கொன்றல்லது சிறிதும் சகிக்கிலேன் என்று விண்ணபித்தார். இவ்வாறு கருடனைக் கொல்லுகிறேன் என்று கூறிய நந்திதேவரை பரமசிவனார் நோக்கி சுடுகின்ற நெருப்பையொத்த சொல்லினால் கட்டவர்களயையும் அங்கீகரித்துப் பொறுத்துக் கொள்வதே கடமை என்று அறிந்திலையோ? இந்த மட்டில் கருடனை விட்டு விடு என்று கட்டளையிட்டருளினார். பரமசிவம் இவ்வாறு கட்டளை இட்டருளியவுடன் நந்திதேவர் அந்தக் கருடனை விட்டு விட்டுப் பயங்கொண்டவராய் பரமசிவம் கட்டளையிட்டருளியதை மறுத்துரைத்த கொடிய பாவத்திற்கு என்ன செய்வோம் என்று வருந்தினார். நந்திதேவர் மிகவும் பயங்கொண்டு நடுநடுங்கிப் பயந்து மனம் ஒடுங்கி சாபம் சம்பவித்தலை நினைத்துப் பெருமூச்சு விட்டு விம்மி இருகண்களிலும் அருவிபோல் நீர் பெருகும்படி நின்று பரமசிவத்தின் தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பணித்து, பலவாறு துதித்து அறிவில்லாத நான் தங்கள் கட்டளையை மறுத்துரைத்த பாவத்துக்குட்பட்டேன். இப்பாவம் நீங்கும்படி செய்வது பூலோகம் தவிர வேறு வழியில்லை என்றார். நந்திதேவர் பூவுலகில் சென்று தவம் செய்து துன்பம் நீங்கி விரைவில் பெருமானை அடைந்ததற்குரிய தலத்தை அருளுமாறு விண்ணப்பித்தார்.

பரமசிவனார், உருத்திர கோடித்தலப் பெருமையையும், வேத கிரித்தலத்தை தாம் உண்டாக்கிய வரலாற்றையும் கூறி, அத்தலத்தில் சென்று தவம் இயற்றித் தம்மை வந்தடையுமாறு அருளினார்.

வேதகிரி வரலாறு

ஆதியில் பரமசிவத் திடமிருந்து தோன்றி அவர் உருவம் எல்லாமாகி பேதியாமல் அனந்த பேதங்கள் உள்ள வேதங்கள், மிகுந்த அன்புடன் பரமசிவம் எழுந்தருளியுள்ள வெள்ளிமலையை அடைந்து, பரமசிவனாரைத் தொழுதுத் துதித்து இறைவனே தேவரீரையல்லாத தேவர்கள் முனிவர்கள், பிரமதேவன் முதலானவர்களாலும் விரிவாய் இருக்கிற எங்கள் விரிவு அடங்காது போலும் அவர்கள் எங்களைக் காக்க மாட்டார்கள். எல்லோரும் பேதிப்பதால் நடுங்குகிறோம். எந்நாளும் மலையாய் நின்ற எங்களை பிரமதேவன் நான்கு பிரிவாகச் செய்தான். பரத்துவாசன் காயத்திரியாகச் செய்தான், முனிவர்கள் ஓரெழுத்தாகவும், ஐந்தெழுத்தாகவும் எட்டெழுத்தாகவும் செய்தார்கள். இவ்வாறு அடியேம் வெவ்வேறு பட்டோம். எங்களை முழுவதும் ஓதுகின்றவர்களைக் காண்கிலேம். இதுவன்றியும் ஆறங்கங்களோடும் ஒன்று பட்டிருக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தன்மையும் காணோம் திருநீறணிந்த விமனே ! ஊழிப்பிரளயக் காலத்திலும் அழியாத உறுதியுள்ளதாகப் பூலோகத்தினிடத்து நாங்கள் ஆறங்கங்களுடனும் ஒன்றுபட்டு தேவரீருடைய திருவடியின் கீழ்நிலை பெற்றிருத்தல் வேண்டும் என வேண்டித் துதித்தன.

பரமசிவனார் வேதங்களை நோக்கி பூமியினிடத்தில் உங்கள் அங்கபேதங்களுடன் சென்று ஒரு கிரி வடிவமாய் நில்லுங்கள் அவ்வண்ணம் இருந்தால் அங்கே உங்கள் கொழுந்து போல நாம் அடைகிறோம். சிவலிங்கத்தின் வடிவமாய் அடைந்து உங்களாற் செய்யப்பட்ட பூசையை ஏற்று நம்முடைய மாயையினாலே நம்மைத் தொழப் பெறாதவர்களுக்கும் உங்கள் பொருட்டு ஞானசொரூபமாக விளங்கிக்கொண்டிருப்போம் உங்களுக்கு வேதகிரியென பெயருண்டாகும். நீங்கள் போங்கள் என்றருளிச் செய்தார். சிவபெருமான் கட்டளையிட்டருளியபடி அவ்வேதங்கள் பூவுலகில் வந்து வேதகிரியாகியது.

இருக்குவேதம் வேராகவும், யசுர்வேதம் மத்தியாகவும், சாமவேதம் அழகு விளங்கும் முடியாமவும், அதர்வணவேதம் சிகரமாகவும் சந்தமென்பது அம்மலையின் தாதுவாகவும், கற்பமென்பது அதின் குகையாகவும், மீமாங்கிசையென்பது அதின் தாழ்வரையாகவும், உபநிடதமென்பது அதின் தருக்களாகவும், நிருத்தம் என்பது அருவிகளாயும் சோதிடமென்பது அதில் பல மணிகளாயும், சிவாகமங்களின் கூட்டம் அதில் நாலுபுறத்திலுமுள்ள சாரல்களாயும் வியாகரணம் கற்களாயும், பதிபுணென்ராணங்களும் அகத்தங்திரங்களும் வனங்களாயும், தீட்சை என்பது பசிய தளிருள்ள கொடிகளாயும் தங்களுடன் ஒன்றுபட்டு சேர்ந்திருக்கும்படி வேதங்கள் கிரி வடிவாகியது. அவ்வேதகிரியின் உச்சியில் மலைக்கொழுந்தாய் இறைவன் எழுந்தருளினார்.

உருத்திர கோடித்தலம்

பல புவனங்களையும் துன்புறுத்தி வந்த அரக்கர்களைக் கொன்றழிக்க சிவபெருமான் தம் மேனியினின்று உருத்திரகோடியரைத் தோற்றுவித்தனர் அந்தகோடி உருத்திரரும் தாழ்ந்த சடைமுடியும் காளகண்டமும் எலும்பு மாலையும் நாகாபரணமும் உடையவர்களாய், முத்தலைச்சூலம் ஏந்தியவர்களாய், நான்கு கரத்துடன் வில், அம்பு, சக்கரம் முதலியவற்றுடன் விளங்கினர். அவர்கள் சிவபெருமானை வணங்கி நின்றனர். சிவபெருமான் அவர்களை நோக்கி, தேவர்களையும் பல அண்டங்களில் உள்ளவர்களையும் துன்றுறுத்தும் அவுணர்களைக் கொன்று அண்டங்களைக் காத்து வாருங்கள் என்று கட்டளை இட்டருளினார். அவர்களும் அவ்வாறே அவுணர்களைக் கொன்று அண்டங்களைக் காத்து வந்தனர்.

திருமால் தேவர்களுக்குப் பாற்கடலைக் கடைந்து அமுதம் தருதற்குமத்தாக மந்திரகிரியைப் பெயர்த்தெடுத்தார். பெயர்த்த பாளத்தில் இருந்து பல முகங்களுடன் பல வடிவங்களுடைய அரக்கர் பலர் தோன்றினர். அவர்கள் எங்கும் பரவி யாபருக்கும் துன்பம் விளைவித்தார்கள். சிவபெருமான் உத்திரகோடியரை அழைத்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவ்வரக்கர்களை அழிக்குமாறு கட்டளையிட்டருளினர். உருத்திரகோடியர் சிவபெருமானை வணங்கி இறைவனே இவர்கள் இப்பொழுது இக்கொடிய செயலைச் செய்யினும் இவர்கள் மின் மிகுந்த தவஞ்செய்தவர்கள். இவர்களைக் கொல்வதால் வரும் பாவத்திற்கு அஞ்சுகிறோம் என்று வணக்கத்துடன் கூறினர். சிவபெருமான் இவர்களைக்கொல்லும் பாவம் பூலோகத்தில் வேதகிரித்தலத்தை அடைந்து நம்மைப் பூசித்தால் நீங்கும் என்றருளிச்செய்தார்.

உருத்திரகோடியர் அவ்வுணர்வுகளுடன் பலநான் பல வகைப் போரிட்டு அவர்களை அழித்தனர். அதனாலுண்டாகிய பாவம் தீர சிவபெருமான் உரைத்தருளியபடி வேதகிரியைத் தேடி வந்தனர். தூரத்தே வேதகிரியின் சிகரத்தைக் கண்டு பூமியில் விழுந்து வணங்கி, அரகரவென்னு துதித்துக் கொண்டு வேதகிரியை அணுகினர். வேதகிரியின் தோற்றமும் அருவியில் விழும் மணித்தொகுதிகளின் ஒளியும், சந்தனம் அகில் போன்ற தருக்களின் மணமும், சந்திர காந்தமும் வெண்பளிங்கு மேடைகளும் அவர்களை ஆனந்த பரவசராகச் செய்தன.

அவர்கள் வேதகிரியை நெருங்கின அளவில் சிவபெருமான் அவர்கள் எதிரில் கோடி சிவலிங்கமாகத் தோன்றினார். உருத்திரகோடியர் ஒவ்வொருவரும் ஒரு சிவலிங்கத்தை முறைப்படி மலராலும் நன்நீராலும் திருமஞ்சனம் செய்து பூசனை செய்தார்கள். சிவபெருமான் அவர் முன்கள் தோன்றினார். அவர்கள் பாவங்கள் நீக்கப்பெற்று அடி வணங்கி எம்பெருமானே நாங்கள் வழிபட்ட இத்தலத்திற்கு எங்கள் பெயர் வழங்குமாறு அருள் செய்ய வேண்டும் என்று துதித்து வேண்டினர். சிவபெருமான் அவ்வாறே அருள் செய்தார். அந்த நாள் முதல் இத்தலம் உருத்திரகோடித்தலம் என்றும், கிரி உருத்திர கோடிகிரி என்றும் தீர்த்தம் உருத்திர கோடி தீர்த்தம் என்றும், இறைவன் பெயர் உருத்திர கோடீசுவரர் என்றும், இறைவி பெயர் பெண்ணினல்லாள் எனும் உருத்திரகோடீசுவரி என்றும் சிவபெருமான் அருளியவாறு வழங்கலாயின. உருத்திரகோடித்தலத்தின் நாட்டெல்லை ஐந்துயோசனை நகரத்து நாற்பால் ஒரு யோசனை இரண்டு குரோசம் (யோசனை பத்தரை நாழி தூரம், குரோசம் கூப்பிம் தூரம்)

நந்திதேவர் தவஞ்செயல்

நந்திதேவர் பரமசிவத்தின் திருவடிகளை வணங்கி விடைபெற்று இமயமலையைக் கடந்து கங்கையில் மூழ்கி, வழியில் உள்ள தலைங்களை வணங்கி, வேதகிரியை நோக்கி வந்தனர். தூரத்தே வேதகிரியின் சிகரத்தைக் கண்டு, பூமியில்விழுந்து வணங்கி, அரகரவென்று துதி செய்து, அடியேன் பாவங்கள் நீங்கி விட்டன என்றும் ஒலியை எழுப்பிக் கொண்டு வந்தார். வழியில் பாலி நதியைக் கண்டு அதில் மூழ்கி வேதகிரியை அடைந்தனர். அம்மலை வேதமலை என்றும் இது நம்மையாளுடைய பரமசிவனாரது திருமேனி என்றும் அதன் மீது ஏறாது பலமுறை வலம் வந்து, அம்மலையின் சாரலின் அருகே போய் அதன் மேற்றிசையில் ஒரு தடாகம் இருக்கக் கண்டு அதனை அடைந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அத்தாடகம், சுற்றிலும் தருக்கள் சூழப் பெற்றதாய், தாமரை மலரையுடையதாய், குளிர்ந்த நீர்ப்பரப்பினதாய், பரமசிவம் மலையுமாகிய இரண்டு காட்சியினையும் குறைவில்லாத சைவர்கள் உட்கொண்டிருக்கும் தன்மை போல, வேத சொரூபமாகிய மலையின் நிழலும் பெருமை பொருந்திய அம்மலையில் வீற்றிருக்கும் சிவலிங்கப் பெருமானுடைய நிழலும் சேர்ந்து விளங்கியது. நந்திதேவர், உருத்திரகோடியர் அருசித்த தீர்த்தம் அத்தீர்த்தம் என்பதுணர்ந்து இத்தீர்த்தத்தில் மூழ்கி, இப்புனலில் உள்ள மலரை எடுத்து நம் பெருமானுடைய திருவடிகளைப் பூசித்தால் யாவரும் சிவபதம் சேர்வார்கள் எனக்கருதி அத்தாடகத்தை வணங்கினார்,அவர் அத்தீர்தத்தில் மூழ்கி, நீரினாலும் மலர்களினாலும் பூசை செய்து, தடாகத்துடன் சாரலையும் வலம் வந்து அரகரவென்று துதித்து, அத்தடாகக்கரையில் அமர்ந்து ஓவியம் போலிருந்து ஆறு தேவவருடம் தவம் இயற்றினர்.

திலோத்தமை சாபம் அடைதல்

கயிலையங்கிரியில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் இந்திரனை அழைத்து உன் உலகத்து தேவமாதர்களை ஏவி நந்தியின் தவத்தை அழித்துவிடு என்று கட்டளையிட்டருளினார்

இந்திரன் இறைவன் கட்டளையை சிரமேற்கொண்டு பொன்னுலகடைந்து தன் அவையிலிருந்து சிவபெருமான் ஆணைக்கு அஞ்சுவதும், நந்திதேவரிடம் கருடன் பட்ட துன்பத்திற்கு அஞ்சுவதுமாக இருந்தான், இவ்வாறு இரண்டிற்கும் அஞ்சி முடிவில் இரம்பை, ஊர்வசி, மேனகை திலோத்தமை முதலியவர்களை அழைத்து நந்திதேவரின் தவத்தை அழித்து வர உங்களில் யார் சென்று வருகிறீர்கள் என்று வினவினான், யாவரும் அஞ்சினர். ஊழ்வினை நாவையசைத்ததால் திலோத்தமை தம் தோழியருடன் செல்வதாகக்கூறி இந்தரனிடம் விடைபெற்று வேதகிரியின் சாரலையடைந்தாள்.

திலோத்தமை, வேதகிரிச் சாரலில் நீங்காமல் தவம் செய்து கொண்டிக்கும் நந்திதேவர் அருகு தன் தோழியர்களுடன் சென்று, பசுவைப்போல் உருவங்கொண்டு, அவர்திருமேனி முழுவம் நக்கியும், அவர் கொம்பினைத் தன் கொம்பினால் உராய்ந்தும் அவர் இரண்டாம் சம்பு என்பதையும் மறந்து மோந்து அவர் மெய்யுடன் தன் மெய்யைச் சேர்த்தாள். திலோத்தமை செய்கை உணர்ந்த நந்திதேவர் விழித்து நோக்கினார், செய்பவர் செய்யும் தவத்தை அழித்தவர்கள் உய்யமாட்டார்கள், பாவிகள் செய்கின்ற செயலைச் செய்கின்ற திலோத்தமையே என்தவத்தைக் கெடுக்க இம் மாய பசு வடிவம் கொண்டனை, இப்பசுவடிவுடன் ஓயாமல் இந்த காடெல்லாம் மேய்ந்து கொண்டிருக்கக்கடவை என்று சாபங் கூறினார்.

திலோத்தமை வணங்கி, இச்செயல் நானே செய்திலன். இந்திரன் கட்டளையை யான் எவ்விதம் மறுப்பது? மேலானவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏவ அடியவர்கள் மறுக்க இலலுமோ? எனப் பல கூறி துதித்து இச்சாபம் நீங்குமாறு அருள் செய்யுமாறு விண்ணப்பித்தாள்.

நந்திதேவர் மனமிரங்கி கலியுகத்தில் மல்லை என்னும் நகரில் இருந்து சூரியகுலத்தரசன் இந்த வேதகிரி எல்லையில் வந்து வில்லை எடுத்து விலங்கினங்களைக் கொல்ல எய்யும் அம்பு உன் மீது பட்டு உன் உடல் அழிந்துபோகும் அவ்வமயம் உனக்கு பழைய உருவம் வரும் என்றருளிச்செய்தார்.

திலோத்தமை அவர் சாபத்தையேற்றுச் சென்றாள். காட்டுத் தழையையும் புல்லையும் மேய்ந்து, சுனை நீருண்டு இது முன்செய்தவினை என்று கண்ணீர் விட்டு கலியுகந்தோன்றும் நாளை எதிர்பார்த்துக் கொண்டு அங்குள்ள பசுக் கூட்டத்துடன் திலோத்தமையாகிய பசு திரிந்து கொண்டிருந்தது.

நந்திதேவர் இறைவனை அடைதல்

பிறகு நந்திதேவர் மீண்டும் கண்களை மூடி கொண்டு முன் போல் நிட்டைக் கூடி இருந்தனர். நந்திதேவரின் தவத்தையுணர்ந்து சிவபெருமான், திருமால், பிரமன், இந்திரன் மற்றும் முனிவர்கள் சூழ நந்திதேவர் முன் எழுந்தருளினார். நந்திதேவர் இறைவன் திருவடிகளில் விழுந்து வணங்கி பலவாறு துதித்தார். வேதகிரீசர் இவ்வண்ணம் காட்சியளித்து அவ்விடம் தேவர் மேல் ஏறி இறைவியுடன் வேதகிரியில் எழுந்தருளினார்.

நந்திதேவர் இரண்டாவது முறை தவஞ்செய்தல்

அதன் பின் ஒரு காலம் நந்திதேவர் கோவுலகிற் சென்று கோவின் புணர்ச்சியைப் பிரியாமலிருக்க, பரமசிவம் திருவுள்ளத்தில் உணர்ந்து பூலோகம் செல்லக்கடவை என்று கட்டளையிட்டருளலும். வேதகிரியிற் சென்று, தவம் இயற்றி பரமசிவத்திடம் சென்ற தொழுது வாழ்ந்திருந்தார்.

மாயீகன் பன்றியானது

மலையை யொத்த தோள்களையும் ஊழித்தீப்போன்ற சிவந்த கண்களையுடைய மாயிகன் எனும் அரக்கன், நிணங்களையும் பிணங்களையும் திண்பவன். தன் மனத்தில் எண்ணிய மாய வடிவெடுக்கும் ஆற்றலுடையவன். வனங்களில் திரியும் விலங்கினங்களுடன் தானும் ஒரு விலங்கினமாய் வடிவங்கொண்டு மற்ற விலங்கினங்களைக் கொன்று தின்பவன். நீலகண்டப் பெருமானாகிய பரமசிவம் வீற்றருந்தருளும் மறைக்கிரியைச் சூழ்ந்துள்ள வனத்தில் ஒரு நாள் பெரியபன்றி ஒன்றினைக் கண்டு அணுகி அதனைக் கொல்ல தானும் ஒரு பன்றி வடிவம் கொண்டான். அம்மலைச் சாரலில் தவமியற்றிக் கொண்டிருந்த மார்க்கண்ட முனிவர் இதனைக் கண்டு மனம் பதைத்தார்.

புலாலை உண்ணதலாகிய அவாவினால் இந்த மாய வடிவங் கொண்ட அவனை நோக்கி, வஞ்சகனே பல உயிர்களைக் கொல்ல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

என் எதிர் வந்தனை, இறப்பு உனக்கு வரும் போது உன்மனம் அஞ்சாதோ? பிறவுயிர் தம் உயிரையொக்கும் என்றுணராதவர்கள் நமனுக்கு அஞ்சுவர். அளவில்லாத உயிரைக் கொன்றுண்ண மாயத்தினால் உன் உடலை மறைத்தாய், இத்தலம் மறைமலை இறைவருடைய தலம் என்று மனம் அஞ்சுகின்றிலை. இங்கே இப்போது நீ கொண்ட பன்றி வடிவுடன் இப் பெரிய வனத்தில் அலைந்து திரிவாயாக என உரைத்தார். அதனைக் கேட்ட மாயீகன் அஞ்சி வணங்கி. பெரியோரே நான் செய்த குற்றத்தைப் பொறுத்து இந்தப் பன்றி வடிவம் நீங்கும் காலத்தைக் கூறும் என்று வேண்டினான். மார்க்கண்டர் அழகியமல்லை நகரத்து மன்னனாகிய சுரகுருவென்பவன் இவ்வனத்து விலங்கினங்களைக் கொல்லும்படி ஏவும் கணை உன் மேல் படுமானால் பழைய வடிவம் பெறுவாய் என்று கூறினார். கொல்லத் தக்க பற்களையுடைய பன்றி வடிவுடன் மாயீகன் மறை மலையைச் சூழ்ந்துள்ள காட்டிடைத் திரித்துக் கொண்டிருந்தான்.

இந்திரன் வழிபட்டது

தேவேந்திரனிடம் தேவமங்கை ஒருத்தி தன் பந்தினை ஒரு ஆடவன் பறித்துக் கொண்டு வெள்ளிமலையை அடைந்தான் என்று கூறி முறையிட்டாள். இந்திரன் அவள்பால் இரக்கங்கொண்டு அவ்வாடவன் அடியை குறித்துக் கொண்டு, நாடி கயிலையை அடைந்தான். பரமசிவனார் ஓர் இளைஞன் போலவும், பார்வதி ஒரு கன்னி போலவும் வடிவங் கொண்டு சூதாடும் தன்மைபேர் அம்மா தின் பந்து தங்கள் அருகு இருக்கும்படி திருவிளையாடல் புரிந்தார்.

பரமசிவத்தின் மாறுவேடத்தை அறியாத இந்திரன், பந்தினை அவர் கவர்ந்ததாகக் கூறி பந்தினைக் கேட்டான். பரமசிவம் அவன் வார்த்தைகளைத் திருச்செவியில் ஏற்றுக் கொள்ளாமல் சூதாட்டத்தில் நாட்டம் உடையவர் போல் இருந்தார். இந்திரன் கோபங்கொண்டு அவரை அடிக்க தன் வச்சிராயுதத்தை ஓங்கினான். சிவபெருமான் திருவுள்ளத்திலறிந்து அவன்மீது கடைக்கண் பார்வை செலுத்தினார். இறைவனின் கடைக் கண் பார்வையினால் இந்திரன் அசைவற்று கையசைக்க முடியாமல் ஓவியம் போல் நின்றான். பரமசிவம் சூதாடிய பின் அங்கிருந்த தோழியை, இந்திரனை மலைக்குகையில் சிறைபடுத்தும்படி கட்டளையிட்டருளினார். அவளும் அவ்வாறு செய்தாள்.

அதனாள் இந்திரன் மிகவும் வருந்தினான். தேவவுலகில் இந்திரனைக் காணாது தேவர்களும் தேவகுருவும் கயிலையை அடைந்தனர். சிவபெருமானை க்வணங்கி வந்த நாரதர் தேவகுருவிற்கு இந்திரன் சிறை இருக்கும் இடத்தைக் காட்டி நிகழ்ந்ததையும் கூறினார். தேவகுருவும் தேவர்களும் மிகவும் அஞ்சி, செய்வதறியாது திகைத்து. ஒருவாறு தெளிவு பெற்று சிவபெருமானை பலவாறு துதி செய்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்திரனைப் பொறுத்தருளுமாறு வேண்டினார். சிவபெருமான் இந்திரனை அழைப்பித்து வரச் செய்து அவனை நோக்கினார். இந்திரன் தலை கவிழ்ந்த முகத்துடன் நிறமழிந்த மேனியனாய் தனக்கு நேரிட்ட வினையை நினைத்து அழுது அடிவணங்கி எழுந்திராது இருந்தான். இறைவன் திருவுள்ளத்தில் உணர்ந்து, நீ வேத கிரித்தலத்தை அடைந்து நம்மைப் பூசித்தால் இத்திவினை நீங்கும் ஆதலின் அங்குச் செல்வாயாக என அருள் செய்தார். இந்திரன் அவ்வாறே வேதாசலத்தை அடைந்து பூசனை செய்து, தன்னுடைய குற்றங்கள் நீங்கப்பெற்று வானுலகடைந்தான். அந்தக்கால முதல் ஐந்து யோசனை தூரமுள்ள இந்த வட்டம் இந்திரபுரம் எனப் பெயர் பெற்றது.

நாராயணன் வழிபட்டது

திருமால் உபேந்திர பதவியில் இருக்கும் போது தேவர்கள் அவரிடம் வந்து, அரக்கர்கள் தங்களைத் துன்புறுத்துவதினின்றும் காக்குமாறு வேண்டினர். திருமால் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அவுணர்களைக் கொல்வதற்குச் சென்றனர். அவுணர்கள் பயந்து ஓடி வனத்தில் புகுந்தனர். வனத்தில் இருந்த பிருகு முனிவரின் ஆசிரமத்தை அடைந்து பிருகுமுனிவரின் பத்தினியிடம் தங்களைப் பாதுகாக்குமாறு பாதங்களைப் பற்றி வேண்டினர். அவ்வம்மையார் அவர்களை ஆசிரம்தில் ஒளித்துவைத்து வாயிற்படியில் ஒரு சட்டுவத்தைக் கையில் வைத்துக் கொண்டு நின்றனர். அரக்கர்களைத் தேடி வந்த திருமால், பிருகுமுனிவரின் மனைவியை நோக்கி, அரக்கர்கள் உங்கள் ஆசிரமத்தினுள் இருக்கிறார்கள். உள் செல வழிவிடுங்கள் என்றார். அவ்வம்மையார், அடைக்கலமாக வந்தவர்களை விடுவது அறமன்று என்றார் திருமால். அறிவுள்ள பிருகு முனிவரின் பத்தினியே நீ அரக்கர்களை விடாமல் தடுத்னை எனக் கோபித்து அவ்வனம் முழுவதும் தீ மூடும்படி சக்கரத்தை ஏவினார். அந்தச் சக்கரம் அந்தக் காடும். அரக்கர்களும் பிருகுமுனிவரின் பத்தினியும் வேம்படி கோபத்துடன் சுட்டது. சிவபெருமான் அம்பினால் முப்புரத்தவர்கள் இறந்ததுபோல் அவ்வரக்கர்களும் முனிவரின் மனைவியும் அழிந்தார்கள்.

அவ்வமயம் பிருகு முனிவர் அங்குவந்தார். தன் மனைவியும் பெரியவனமும் அழிந்தது திருமால் ஏவிய சக்கரப்படையால் என்றறிந்து, தன் மனைவியிடத்து வைத்த அன்பினால் மனம் வாடுவர். மனைவியின் எலும்பினை நோக்குவர். மிகுந்த கோபங்கொள்வர். மீண்டும் தணிவர். இத்திருமால் திருமகளை விரும்பிய காதலையுடையவன். பின்வருவதையறிகிலன் பெண் கொலையையும் கருதவில்லை. அடைக்கலமாக வந்தவர்களைக் காப்பது அறமாகும். அச்செயலைச் செய்த என் மனைவியைக் கொன்றது அறமாகுமோ வெனத் திருமாலை நோக்கி, நீ சக்கரமேந்தியது அனைவரையும் காப்பதற்காகும். தேவர்களுக்கு நன்மையும் மேன்மையும் செய்யும் தவத்தினரைக் கொல்வத்கன்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

என் மனைவியைக் கொன்று துன்பத்தினை விளைவித்த நீ எடுக்கும் பத்துப் பிறவியில் ஊரையும் விட்டு, அறிவு மயங்கி உயர்வனத்திற்குப் போய் மனைவியைப் பிரிந்து நீயும் தவிக்கக் கடவை எனச் சாபமிட்டார்.

திருமால் பிருகுமுனிவரை நோக்கி உமது மனைவியை இப்போ எழுப்பித்தருகிறேன் என் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் என்று அவர் மனைவியைக் கொன்ற சக்கரத்தை எதிரில் வைத்து, தன் கால் பெரிய விரலைப் பூமியில் ஊன்றினர். ஊன்றிய இடத்தில் குளிர்ந்த நீருண்டாகியது. அந்த நீரைப் பிருகுமுனிவரின் மனவைியின் எலும்பு கூடுமீது தெளித்தார். தெளித்தவுடன் அவள் உயிர் பெற்றெழுந்தாள். பிறகு முனிவர் மகிழ்ந்து பலவாறு புகழ்ந்து இந்த நாளிள் நீ செல்லுங்கானகத்தில் உன் மனைவி நானிட்ட சாபப்படி அந்த நாளில் தேவர்களுக்கு உதவியாய் பிரிவாள். பிறகு நீ அரக்கர்களைக் கொன்று உன்மனைவியை அடைவை. நீ முனிபத்தினியைக் கொன்ற பாவம் நீங்க வேதகிரியை அடைந்து பூசிப்பாயாக எனக் கூறினர். பிறகு திருமால் வேதகிரியை அடைந்து திருப்பள்ளித்தாமம். திருமஞ்சனம் முதலியவற்றைக் கொண்டு வேதநெறிப்படி பூசனை செய்து வேதகிரீசன் திருவருளைப்பெற்று தம்பதம் சென்றார். அன்று முதல் இத்தலம் திரு.நாராயணபுரம் எனும் பெயரும் பெற்றது. திருமால் பிறகும் முன்காலத்தில் திரிபுரத்தில் இருந்த அவுணர்கள் செய்யும் சிவபூசை வழுவும் படி செய்த மாயத்தால் விளைந்த பாதகம் தொலையும் படியும், கிருட்டிணனாகப் பிறந்த போது மாமனைக் கொன்ற பாதகமும் தொலைய இருமுறை வேதகிரி வந்து பூசித்துத் தொழுது சென்றார். (பக்தவற்சலேசுவரர் ஆலயக் கற்றூணில், ஆலயக் கற்றூணில், திருமால் கழுகாசலத்தை வழிபடும் உருவமும் கண்ணன் சிவலிங்கத்தை வழிபடும் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன)

பிரமன் வழிபட்டது

பிரமன், சாவித்திரி, சரசுவதி எனும் இருமனைவியரில் சாவித்திரியை நீங்கி சரசுவதியை பிரியாமலிருந்தான். சாவித்திரி தன்னைவிட்டு நீங்கி வெண்மை நிறமுடைய பாரதியை விட்டு நீங்காதிருத்தலைக் கண்டு வெறுத்து, வேதங்கள் உபநிடதங்களின் பகுப்புடன் உன்னை விட்டு நீங்கக்கடவது என்று சாபம் இட்டு ஏழு முனிவர்கள் இடத்திற்குசென்று, ஓவியம் போல் அசைவற்றிருந்து தவம் இயற்றினாள். சாவித்திரியிட்ட சாவத்தினால் பிரமனால் ஒளி செயலும் இழந்திருந்தான். அவ்வாறு இருந்த பிரமனை மதுகயிடவர்கள் எனும் அரக்கர்கள் துன்புறுத்தத் தொடங்கினர். பிரமன் மனத்திலு் நினைக்கமுடியாத துயரங் கொண்டு பாற்கடலினிடத்துச் சென்று, திருமால் துயிலுதற்கேதுவாகிய மாயா சக்தியைத் துதித்துத் தொழுதார். அவள் நீங்கியவுடன் கண்விழித்த திருமாலைத் தொழுது மதுகயிடவர்களினால் தான் துன்புறுத்தலைக் கூறி முறையிட்டார். திருமால் வில்லை எடுத் மதுகயிடவர்களுடன் பல ஆண்டுகள் போர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்து அவர்களைக் கொன்றார். பிறகு பிரமனிடமிருந்து சாவித்திரி பிரிந்தமை முதலிய உணர்ந்த பிரமன் செய்த அறியாமையை உணர்த்தி, வேதகிரியில் சிவபெருமான் உமையுடனும் இரு மைந்தர்களுடனும் வீற்றிருக்கின்றார். அங்குச் சென்று வழிபடுக என்று அனுப்பினார். பிரமன் அவ்வாறே வேதகிரியை அடைந்து சிவபெருமானை பூசித்து பலவாறு புகழ்ந்துத் துதித்து, அப்பெருமான் அருளால் சாவித்திரியின் சாபம் நீங்கி, அச்சாவித்திரியுடன் சத்திய லோகம் சென்றார். அன்று முதல் இப்பதிக்கு பிரம்மபுரி எனும் பெயரும் உண்டாகியது.

வசுக்கள் எண்மர் வழிபட்டது

பொன் மயமான மேருமலைச் சாரலில் வசிட்ட முனிவரால் ஆதரிக்கப்படுவதாகிய காமதேனு பசுக்கூட்டங்களுடன் மேய்ந்து கொண்டிருந்தது. அக்காமதேனு செம்பவளம் போன்ற திருமேனியையும், நெற்றியில் பிறை போன்ற வெண்மை நிறத்தையும். பொன்மயமாய் விளங்குகின்ற கொம்புகளையும் ஒளி விளங்குகின்ற குளம்புகளையும் கவுரிமானுடைய மயிரைப் பார்க்கிலும் அழகிய வெண்மை நிறமுடைய வாலையும் உடையது. பசுக் கூட்டங்களிடையே இருந்த அவ்வழகிய காமதேனுவை, வசுக்கள் எண்மரும் அவர்தம் மனைவியரும் கண்டனர்.

வசிட்ட முனிவர் நினைத்தபடியெல்லாம் நல்ல தவப் பயன்போலக் கொடுத்துக் கொண்டிருக்கும் காமதேனுவின் ஆற்றலையும், அக்காமதேனுவைப் பெற்றிருக்கும் வசிட்ட முனிவரின் அருந்தவத்தையும், அம்முனிவருக்கு அக்காமதேனுவைத் தந்தருளிய உமையொரு பாகரின் கருணையையும் புகழ்ந்தனர். வசுக்களில் இளையவசுவின மனைவியாகிய மாலினி என்பவள் தன் கணவரிடம் அக்காமதேனுவின் பாலைக் கறந்துண்ணும் விருப்பம் தனக்கு மிகுவதைக் கூறினாள். அவளிடம் கொண்ட காமத்தால் அவ்விளையவசு அவள் விருப்பத்தை நிறைவு செய்யக் காமதேனுவின் மார்பகத்தை வலியப்பற்றினான். காமேதேனு, இவன் நம்மைப் பிறர் பொருள் என்றுணரவில்லை வசிட்ட முனிவரின் அருளைப் பெறவும் இல்லை நம்மை இரந்து கேட்டுக் கொள்ளவும் இல்லை. இவன் செய்யக்கூடாத செயலைச் செய்தான் என்று நீங்கிய செயலைச் செய்த நீயும் குற்றமான செயலை நீ செய்வதனைத் தடுக்காத உன் தமையன்மார்களும் வருத்தம் தரும் வறுமையுற்று. காசிச் சுடலையில் அடுக்கும் பிணத்தினைப் புசித்துக் கொண்டிருங்கள் என் சபித்தது. அதனைக் கேட்ட வசுக்கள் அஞ்சி காமதேனுவைப் பணிந்து. இளையவன் செய்த தீமையால் நேர்ந்ததைப் பொறுத்தருளுமபடி வேண்டினர். காமதேனு பாபம் வந்தடையும் வழிகள் பலவற்றையும் கூறி, தன் மனைவியின் ஏவலைக் கடந்திலனாய் உங்கள் பின்னவன் பண்பில்லாத செயலைச் செய்ததால் நீங்கள் பூலோகம் போகும்படி சபித்தேன். இந்த சாபம் அனுபவித்தல்லாமல் தீராது. நீங்கள் காசிச்சுடலையில் வலிய பிணத்தினைப் புசித்து நூறாண்டு கழித்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிறகு அவ்விடம் வரும் நாரத முனிவர் சொல்லின் வழி உங்கள் துன்பம் நீங்கும் என்று கூறிச் சென்று விட்டது.

பிறகு வசுக்கள் எண்மரும் காசிச்சுடலையில் பிணக்குவியல்களையுண்டு நூறு ஆண்டு கழித்தனர். அருமையாகிய தவஞ் செய்யும் நாரதமுனிவர், பெருந்தவம் நிறைந்த காசியில் விசுவநாதரைப் பணிந்து செல்லும் அளவில் வசுக்கள் நாரதரைக் கண்டு வழிபாடு செய்து துதித்தனர். நாரதர் அவ்வசுக்களில் இளைய வசு செய்த செயலையும் காமதேனு அளித்த சாபத்தினையுமுணர்ந்து, தம் கமண்டலத்தில் இருக்கும் நீரை அவர்கள் மீது வீசித் தெளித்தனர். தெளிந்த அளவில் அவ்வசுக்கள் சாபம் நீங்கி முன்னிருந்த மேனி பெற்றார்கள். அவ்வசுக்கள் தாங்கள் மகிழ்ச்சியின்றிப் பிணங்களையுண்ட பாபத்தைக் குறித்து மனம் அஞ்சி அருகில் வந்து பலமுறை தொழுதார்கள். நாரதர் அவர்களுக்குத் தத்துவ விளக்கம் பலவற்றை கூறி உயிர்கள் செய்த தீவினைகள் யாவும் சிவபெருமானைப் பூசித்தால் தீயில் பட்ட சருகு போல் மாய்ந்தொழியும். சிவபெருமானை வழிபடுந்தலங்களில் சிறந்தது தேவர்களுக்குப் பரமசிவத்தால் எடுத்தியம்பப் பெற்றது வேதகிரித்தலம். அந்த வேற்பில் தவம் செய்யும் மார்க்கண்ட முனிவரை அணுகுங்கள் என்று அவ்வசுக்களை அழைத்துக் கொண்டு வந்து மறைமலைச் சாரலில் தவமியற்றும் மார்க்கண்டரின் ஆசிரமத்தைக் காட்டிவிட்டு நாரதர் வேதகிரீசனை இறைஞ்சி சென்றார்.

அவ்வசுக்கள் மார்க்கண்டரின் தாள்களை வணங்கி தங்கள் துன்பங்களைக் கூறினர். மார்க்கண்டர் அவர்களை நோக்கி, தீவினை செய்யாதவர்கள் யார்? இந்திரன், பிரமன், நாராயணன் முதலியவர்களம் தீவினை செய்து இத்தலத்தைப் பூசித்துப் பேறு பெற்றவர்கள் என்று அம்மூவர்களுக்கு நேர்ந்த பாபமும் அவர்கள் இத்தலத்தில் வந்து புசித்தமையும் கூறினர். மார்க்கண்டர் பிறகு அவ்வசுக்களுக்கு, திருநீற்றின் பெருமையினையும், உருத்திராக்கதின் பெருமையையும் விரிவாக விளக்கி பூசனைப்புரியும் வழிமுறைகளையும், ஆலயத்தினை வணங்கும் முறையினையும் தெளிவு படக் கூறியருளினர். அவ்வசுக்கள் அவ்வாறே திருநீறணிந்து, உருத்திராக்கம்பூண்டு, ஐந்தெழுத்தோதி முறையே சிவபெருமானைப் பூசித்து தங்கள தீவினை நீங்கப்பெற்று தம்மிடம் போய்ச்சேர்ந்தார்கள். அன்று முதல் இப்பகுதிக்கு வசுவபுரம் எனும் பெயரும் உண்டாகியது.

தினகரர் வழிபட்டது

வைகருந்தன், விசவரன், மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, உலகப்பிரகாசன், சாக்கி, சுவிக்கிரமன், ஆதித்தன், சூரன், அஞ்சுமாலி, திவாகரன் ஆகிய கதிரவர்கள் பன்னிருவரும் தினங்களை யுண்டாக்குவதில் நான் வல்லவன், நான் வல்லவன் என்று தம்முட் பிணக்குற்று பிரமதேவனை அடைந்தனர். பிரமதேவர் சிவபெருமானைத்தியானித்த அவர் திருவருள் குறிப்பையுணர்ந்து பன்னிரண்டு மாதங்களில் மாதம் ஒருவராக நாள் செய்யுமாறு கட்டளையிட்டனுப்பினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவர்கள் அவ்வாறு உதிக்கையில் கிழக்கு மலையில் தோன்றி ஒழியாமல் போர் செய்கின்ற மந்தேகர் முதலிய அவுணரால் தடையுண்டு மீண்டும் பிரமதேவரிடம் சென்று முறையிட்டனர். அவர் அவ்வரக்கர்களை வெல்லும் பலம் உங்களுக்குண்டாக வேதகிரி சென்று சிவபெருமானை வழிபடுங்கள் என்று அனுப்பினார். அப்பன்னிரு தினகரரும் வேதகிரியடைந்து சிவபெருமானைப் பூசித்தனர். இடப வாகனத்தில் பெண்ணினல்லாள் எனும் பார்வதியுடன் கோடி சூரியர்களின் ஒளியை ஒத்து பெருமான் எழுந்தருளினர். பன்னிருசூரியர்களும் சிவபெருமானின் ஒளி வெள்ளத்தில் மூழ்கிப் பணிந்து, தங்கள் உதிக்கா வண்ணம் தடுக்கும் அரக்கர்களுடைய வலியைத் தடுக்கத்தக்க வரம் அருளுமாறு வேண்டினர். சிவபெருமான், இந்த வேதகிரிக்கும் நமக்கும் திருமேனி வேறில்லை. இவ்வேதகிரியுடன் நம்மை உள்ளத்தில் இருத்திக்கொள்ளுங்கள். அரக்கர்கள் உங்களுடன் போர் செய்ய அஞ்சுவார்கள் என்றருள்செய்து, பார்வதியுடன் சிவலிங்கத்தில் எழுந்தருளினார். சூரியர் பன்னிருவரும் தினங்களைச் செய்து இருளைப் போக்கி உலகத்தைக் காத்து வந்தனர். அன்று முதல் இப்பதிக்குப் பரிதிபுரி எனும் பெயரும் உண்டாகியது.

முனிவர்கள் பாணினியம் உணர்ந்து

பாணினியம் என்னும் வியாா கரணத்தை முறையாக அறிய, பல முனிவர்கள் தில்லையில் கூடி இரந்தனர். ஆதிசேடன் செருக்குடன் தான் பதஞ்சலியாம் வடிவெடிக்கும் போது அவர்களுக்கு அவ்வியாகரணத்தை விளக்குவதாகச் சிவபெருமானிடம் கூறினான். சிவபெருமான் யாதொன்றும் கூறாது திருமுடியசைத்தனர். அதுவே கட்டளை என ஆதிசேடனின் கருதி பதஞ்சலியாம் வடிவெடுத்த பின் அம்முனிவர்களுக்குப் பலகாலம் கூறியும் அவர்களுக்கு விளங்காமையால் சிவபெருமானை நோக்கி நெடுநாள் தவம் இயற்றினர். பரமசிவம் அவர்கள் முன் தோன்றி அகரமுடன் அகரமாகிய பரவிந்து நாதத்தில் குற்றம் அறக் கலந்திருக்கும் தலம் வேதகிரி. வேதகிரியின் சிகரம் பிரணவத்தின் சொருபமாகும். நீங்கள் அவ்விடத்திற்குச் செல்லுங்கள் என்று கூறியருளினார்.

அம்முனிவர்கள் அவ்வாறே வேதகிரியை அடைந்து பூசை செய்து தவமும் இயற்றினர். எம்பெருமான் அவர்கள் உள்ளத்தில்தோன்றிப் பாணினியத்தின் பொருளைத் தெரிவித்து அவர்கள் வேண்டும் வரமும் தந்தருளினார். அன்று முதல் இத்தலத்திற்கு முனிகணப்புரி எனும் பெயரும் உண்டாகியது.

பார்வதி திருமணம்

இமயமலை மன்னன், பார்வதியை சிவபெருமானுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பி, சிவபெருமானின் சம்மதம் பெற ஏழு முனிவரையும் வேதகிரி மலைக்கு அனுப்பினான். அம்முனிவர்கள் வேதகிரியின் உச்சியில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி, மலையரையன் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். பரமசிவனார் உலகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உய்யும் பொருட்டு திருமுடியசைத்தளினார். ஏழு முனிவர்கள் மலையரசனுடன் அளவளாவி முகூர்த்தநாள் நியமித்த அளவில் இந்திரன், பிரமன், திருமால் முதலியவர்களும் தேவர்களும் யாதவர்களும் வேதகிரியில் வந்து குழுமினர். முகூர்த்தம் குறித்த நாளில் யாவரும் புடை சூழ வேதகிரிப் பெருமான் இமயமலைக்கு எழுந்தருளி உலகுய்யப் பார்வதிதேவியை மணமுடித்து, பார்வதிதேவியாருடன் வேதகிரித்தலத்தை அடைந்து யாவருக்கும் அருள் பாலித்தார்.

சண்டன், பிரசண்டன்

சான்மலி என்னும் நாட்டில் வாழ்ந்த விருத்த சிரவரன் என்கிற முனிவருக்கு சண்டன், பிரசண்டன் என்கிற இரு மைந்தர்கள் தோன்றினர். அவ்விருவரும் முன் செய்த தீவினைத் தொடர்பால் கழுகுப் பறவைகளின் உருவம் பொருந்தினார்கள். கழுகு உருவமாக உள்ள மைந்தர்களை விருத்த சிரவரன் நீங்கள் பறவைகளுக்கு அரசாக விளங்கி இருங்கள் என்று கூறினான். அவர்கள் எங்களுக்கு அரசாட்சி செய்திலும் இல்லற வாழ்க்கையிலும் விருப்பம் இல்லை. ஞானமுறையால் பரமசிவனை அடையத்தக்க முத்திப் பேற்றினை சொல்லுங்கள் என்று வேண்டினார்கள். மைந்தர்களின் உயரிய உணர்வை அறிந்த விருத்தசிரவரன் மகிழ்ந்து, அவர்களை அன்புடன் தழுவி தாய் தந்தையர் உய்யும் வண்ணம் நன்மை செய்கிறவர்களே மைந்தர்கள் ஆவர்கள். நீங்கள் நினைத்த செயல் எளிதானதன்று. சிவபூசையைச் சிந்தித்த சிந்தையால் நம் குடியில் பிறந்தவர்கள் யாவரும் பாவச் செயல் செய்தவர்களாயினும் வீடடைதல் உறுதி எனக்கூறி பரமசிவத்தின் பூசை முறையினை அவர்களுக்குக் கூறினான். அவர்கள் பூசை முறையினை உணர்ந்த பின் தந்தையை வணங்கி, பரமசிவத்தை வழிபவதற்குரிய தலம்யாதென வினவினர். அவர், சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற பழைமையாகிய வேதகிரியிற் சென்று பரமசிவத்தை வாழ்த்தி வணங்குங்கள். பின் நீங்கள் பெறாத பேறில்லை என்று கூறினர்.

சண்டன் பிரசண்டனாகிய கழுகுருவமுடைய அவ்விருவரும் வேதவெற்பை அடைந்து நறுமணம் உள்ள மலரினாலும் நீரினாலும் பரவுதல் செய்து பூசித்தனர். கோடி சூரியர் கலந்தெழுந்தது ஒத்த அழகுடன் நடனம் செய்யும் திருவடியையுடைய பரமசிவம் அவர்கள் முன் எழுந்தருளி, உங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள் என்றார். அவர்கள் ஒப்பில்லாத முத்தியே அடியேங்களுக்கு வேண்டியது என்றார்கள். சிவபெருமான் இந்தக்கிரேதாயுகம் சென்ற பின் உங்களுக்கு முத்தியை அளிக்கிறோம் அதுகாறும் நம் பேரவையில் சிவ கணங்களுக்குத் தலைவராய் இருங்கள் என்று அருள் பாலித்தார். அவர்களும் அவ்வாறிருந்து முத்தி எய்தினார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கழுகு முனிவர்கள் வழிபட்டது
சம்பாதி, சடாயு

திரேதாயுகத்தில், ஒளி பொருந்திய திங்களைப் போன்ற வெண்மைநிறம் உடைய கழுகுகளுக்கு இறைவர்களாகிய சம்பாதி, சடாயு என்னும் கழுகுகள், மிகுந்த பலத்துடன் விளங்கி இருந்தனர். அவர்கள் தங்களுக்குள் பலத்தால் நான் பெரியவன் நான் பெரியவன் என்று பகைத்தனர். மூத்த சம்பாதியும், பலம் பொருந்திய சடாயு வென்கிற தம்பியும் கதிரவனுக்கு மேல் போய்த் திரும்புவோம் திரும்பும் போது பார்க்கின்றவர்களுக்கு நம் உடல் பலம் தெரியும்? என்று சபதம் செய்து, முனிவர் கூட்டத்தை சான்று வைத்து மேருகிரியினின்றும் வானையெட்டி எண்ணில் காலம் பறக்கலாயினர். அளவில்லாத காதங்கள் இவர்கள் பறத்தலைக் கண்டு, தேவர்களும் முனிவர்களும் மயங்கி ஓடினார்கள்.

அவர்களுடைய சிறகுக்காற்றினால் மலைகளெல்லாம் உலர்ந்த சருகு போலாயின. இவர்கள் இறக்கைகளை அடித்துக் கொண்டு செல்லுந் தன்மையினால், வித்தியாதரர்கள், சித்தர்கள், கின்னரர்கள் என்றும் இவர்கள் செல்லுகின்ற அளவற்ற தேர்களும் விமானங்களும் வழி தப்பி ஓடின.

இவர்கள் சிறகிலுண்டான காற்றினால் அரம்பையர் அணிந்த அணிகளும், கற்பகச் சோலையும் வீழ்ந்தன. கங்கை வெள்ளம் சிந்திற்று. வானம் நடுங்கிற்று. மேகங்கள் ஒதுங்கின விண்மீன்களும் கதிர்மண்டலத்துப் பச்சைக் குதிரைகளும் பறந்து செல்கின்றவர்களைக் கண்டு மனங்கலங்கி கண்களை மூடின. இவர்கள் இவ்வாறு கதிரவன் மண்டலம் நாடி வருவதைக் கண்ட கதிரவன் மண்டலத்திலிருக்கும் கணங்கள் பயந்து ஓடி கதிரவனிடம் கூறினர். இவ்வாறு இவர்கள் கதிரவன் மண்டலத்தில் புகுந்த அளவில் அங்கிருந்த வாய்மையில் சிறந்த அஞ்சனன் என்றும் முனிவன் அக்கழுகுகளை நோக்கி நீங்கள் ஆயிரங்கதிர்களையுடைய கதிரவன் கோயிலை அணுகும்படி செல்கிறீர்கள். ஆதலால் நீங்கள் தீயை எடுத்து ஆடையில் அடக்கிக்கொள்ளவும் எண்ணங் கொள்வீர்கள். தம்மில் தகுதியுடையவர்களுடைய வெம்மையைக் கண்டஞ்சாதவர்கள் இப்பிறப்பில் மட்டும் அன்றி மறுபிறப்பிலும் துன்புறுவார்கள். நெறியில் செல்லுங்கதிரவனைத் தடுத்த தன்மையால், உங்கள் தருக்கை உங்கள் தீமையே அழித்துவிடும். கதிரவனுடைய நெருப்பினால் நீங்கள் இருவரும் மனம் வெந்து மேனி கரிந்து வெந்து ஒன்றாய் வீழக் கடவீர் என்று சாபம் மொழிந்தார். முன் சென்றவனாகிய சம்பாதி, சிறகு வெந்தனன் அது வெந்த பின் சிறகு எல்லாம் சிந்திப்போய் பூமியில் விழுந்தான். பின் வந்த தம்பியாகிய சடாயு, ஒளி பொருந்திய சிறகுவேகாதவனாய் பொலிவுள்ள உடல் பெரிந்து துன்பத்தடன் அழுதான். இவ்வாறு விழுந்த இருவரும் வருந்தி வானில் இருக்கும் அம்முனிவனை அழைத்து, வெந்த இக்குறை நீங்கும் முறைமையை அய்யனே சொல்லும் என்று வேண்டினர். பெரிய வேதாசலத்தில் வீற்றிருக்கும் பரமசிவத்தைப் பூசித்தால் இந்தக்குறை அறிவில்லாதவர்களாகிய உங்களை விட்டோடும் என்று அவர்களை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அம்முனிவர் அனுப்பினார். அவ்வஞ்சன முனிவன் கூறிய வண்ணம் சம்பாதி, சடாயுவாகிய இருவரும் வேதகிரியினிடத்திற் சென்று அங்கு இருக்கும் வேதகிரியினிடத்திற் சென்று அங்கு இருக்கும் தடாக நீராலும் மலர்களாலும் இறைவனைப் பூசித்தனர். அந்தத் திரேதாயுகத்தில் அவ்விருவருக்கும் பரமசிவம் தரிசனம் கொடுத்தருளி, அவர்கள் உடலிற் பொருந்திய வெப்பத்தைத் தணித்தருளிப் பழைய பலம் உண்டாகக் கிருபை செய்து அதன் பின்பு சம்பாதியை நோக்கி சீதையைத் தேட இராமன் விடுக்கும் தூதர்களால் உனக்குச் சிறகு உண்டாகும் என்றருள் செய்தார். அத்திருவருளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் சென்றார்கள்.

(சடாயுவின் பலத்தை, இராவணனுடன் போரிட்ட செய்தியாலும். சம்பாதி சிறகில்லாதிருந்தான் என்பதை. சீதையைத் தேடிவந்த அனுமன் முதலியோர் கூறிய இராமத்துதியால் சிறகு வளர்ந்த செய்தியாலும். மற்றும் இருவரின் சிறகுவன்மையையும் பரப்பையும் இராமகதையால் அறிகிறோம்.

சம்புகுத்தன், மாகுத்தன்

துவாபரயுகத்தில், பார்வதி தேவியாருக்கு ஒரு பாகம் தந்தருளிய பரமசிவம் வீற்றிருந்தருளுகின்ற உருத்திர கோடியில் சம்புகுந்தன், மாகுத்தன் எனும் பெயரினையுடைய இருவர் நெடுங்காலம் தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். இரண்டு உடலுக்கு ஒருயிர் போல் இருந்த இவர்களில் மூத்தவன் "சிவமேபெரிது" என்றனன். அது கேட்ட இளையவன் ஒரு முறையும் அறியாமல் "சக்தியே பெரிது" என்று கூறினான், இதனால் இவர்களுக்கு ஒழியாத பகையுண்டாகியது, இதனை எந்த முனிவர்களிடம் சொன்னாலும்அவர்கள் நம் போலியர்களாதலின் சொல்வதரிது என்று கோபந்தணியாமல் இதற்குப் பரமசிவமே சான்றாகும் என்று, முனிவர் இருவரும் கூடிச்சென்று பரமசிவத்தின் முன் பணிந்து விண்ணப்பம் செய்ய, சிவபெருமான் "சிவம், சக்தி என்கிற இருமொழியும் ஒரு மொழியொடாக்கும், ஆதலின், உங்கள் கோபத்தை விடுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். சிவபெருமான் கூறியும் இருவரும் ஒருவரோடொருவர் பொறுமை இழந்து சக்தியே பெரியதென்றும் சிவமே பெரிதன்றும்வாதிட்டனர். அவ்விருவரின் மாறுபாட்டினையும் பரமசிவமும் பராசக்தியும் ஒருவர்முகத்தையொருவர் பார்த்து புன்சிரிப்புக் கொண்டனர். ஒளியும் மாணிக்கமும், கடலும் அலையும், அமுதமும் சுவையும், எள்ளும் எண்ணெயும் பொன்னும் அணியும் போல் பிரியாமலிருக்கிற தங்களைப் பிரித்துரைத்த அவர்களை சத்தி பெரிதென்றவனைச் சத்தியும், சிவம் பெரிதென்றவனைச் சிவமும் நோக்கி, "நீங்கள் இருவரும் கழுகுகளாய்ச் சுழலக் கடவீர்கள்" என்று சபித்தார்கள், அவர்கள் இருவரும் அப்பொழுதே கழுகுகளாகி, நடுநடுங்கி "அய்யனே எங்கள் குற்றங்களைப் பொறுத்தருளி, இக்கழுகுருவம் நீங்கும் இடமும் காலமும் கட்டளையிட்டருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய "இந்த யுகம் நீங்கும் போது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்த வரம் உங்களுக்குத் தந்தருருளுகிறோம். அப்படித் தருகிற வரைக்கும் தவமும் பூசையும் நீங்கள் இவ்வேதகிரித்தலத்தில் செய்யுங்கள்" என்று இளையவனுக்குப் பராசக்தியும், மூத்தவனுக்குப் பரமசிவமும் கட்டளையிட்டருளினார். அவ்விருவரும் அவ்வாறே ஒழியாத தவமும் பூசையும் அன்புடன் செய்து பழைய உருவம் பெற்றுய்தார்கள்.

பூடா, விருத்தா

கலியுகத் தோற்ற முதல் வேதவெற்பினிடத்து பூடா, விருத்தா என்கிற இரு முனிவர்கள் நெடுங்காலம் தவஞ் செய்தார்கள். இளைவனும் மூத்தவனும் அரிய தவஞ்செய்த அளவில் சிவபெருமான் திருவுளம் மகிழ்ந்து உங்களுக்கு நம்முடைய திருமேனியருள் செய்தோம். ஒரு கற்பக் காலம் அந்தப் பதவியில் இருங்கள். அவ்வாறிருந்தால் பிறகு முத்தியை அளிக்கிறோம் என்றருளிச் செய்தார்.

அவர்கள் அதுவரைக்கும் ஐம்பொறிகள் நன் மார்க்கத்திலிருப்பதை யார் கண்டார்கள்? நிருமல மூர்த்தியே இப்போதே எங்களுக்கு முத்திப் பேற்றினை அளித்தருளள் வேண்டும் என்றார்கள். சிவபெருமான் நம்முடைய திருமேனிபோல் உருவந்தரித்திருத்தலையும் விரும்பாதவர்களாய், நம்முடைய திருவருளால் உரைத்த ஏவலையும் ஏற்றுக் கொள்ளாது நீக்கிவிட்டீர்கள். ஆதலால்,உங்கள் உருவம் கழுகுருவமாகப் பிறந்து கடல் சூழ்ந்த உலகில் திரியுங்கள் என்று சபித்தார். அந்த இருவரும் பயந்து எங்கள் குறையைப் பொருத்தருளும் எனப் பணிந்து, கழுகுருவமாகப் பிறந்தாலும் உம்முடைய திருவடித் தொண்டில் மயக்கம் இல்லாமையும் இந்தச் சாபத்தின் முடிவுங்கட்டளையிட்டருள வேண்டும் என்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் நீங்கள் காசிபமுனிவரிடத்தில் கழுகுகளாய்ப் பிறந்து, உங்களுடைய மூக்குகளால் இந்த மலையினைக் கீறினால் அதில் ஆகாய கங்கை அலைவீச உண்டாகும். அந்தத் தீர்த்தத்தில் முழுகி விருப்பத்துடன் எம்மைப் பூசை செய்யுங்கள். அவ்வாறு பூசித்து கலியங்க முடிவில் முத்தியடையுங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறு அருளியவுடன் அவ்விருவரும் கைகுவித்துத் தொழுது, காசிய முனிவரிடத்தில் போய் சம்பு, ஆதி என்னும் பெயருடன் கழுகளாய்ப் பிறந்து, பரமசிவம் கட்டளையிட்டப்படி வேதகிரியில் தம் மூக்குகளால் கீறினர். தடாகமுண்டாகியது. அதில் மூழ்கி மலையை வலம் வந்து இறைவனைப் பூசித்துக் கொண்டிருக்கலாயினர். கழுகு முனிவர்கள் முறையே பூசித்துக் கொண்டு வருவதால் இப்பதிக்குத் திருக்கழுக்குன்றம் எனும் பெயர் நிலை பெறுவதாயிற்று.

திலோத்தமை, மாயீகன் சாபம் நீங்குதல்

தேவர்கள் சூழ்கின்ற திருக்கழுக்குன்றத்தின் எல்லையாய் கிழக்குத் திக்கில் ஒளிவீசும் அழகிய மாளிகைகளையுடைய மல்லை என்னும் பெரிய நகரமொன்றுண்டு. அந்த நகரத்தைச் சுரகுருவெனும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

பெயருடைய சோழ மன்னன் கலியுகத்தின் முதலில் அரசு செய்து வந்தான். நீதியினையும் ஞானத்தையும் எங்கும் நிறைத்து ஒளிவிடும் தன் ஆணையாகிய ஆழியால் பகைவரைப் போரில்வென்று, பிறமன்னர்கள் தன்னடி வணங்க, தண்டக நாட்டின் சிறந்த காவல் மன்னனாகத் திகழ்ந்தான்.

இத்தகைய காவல் மன்னனாகிய சுரகுரு மன்னன் ஒருநாள் கொடிய விலங்கினங்களை வேட்டையாட எண்ணி வேடர்களை அழைத்தனன். புலித்தோலாகிய கச்சையும் சிங்கத்தோலாற் செய்யப்பட்ட செருப்பும் அணிந்தவர்களாகிய வேடர்கள், மலையை ஒத்த வில்லுடனும், முதுகிற் பொருந்திய அம்புப் புட்டிலுடனும், வாரால் ஆகியவலையுடன், விலங்கினங்களின் நாற்றமுணரும் மூக்கினையும் விரைந்து ஓடும் கால்களையுமுடைய நாய் கூட்டங்களுடனும் குழுமினர். அவ்வேடர்களும் காலாட்படையினரும்முன் செலவும், அமைச்சன் குதிரைக் கூட்டத்துடனும் யானைக் கூட்டத்துடனும் பின் வரவும், விற்கொடியும் மற்ற கொடியும் தாழ்ந்து வர, புலிக்கொடி ஒன்று ஆடையுமுடைய பெண் உருவாகியது. அப்பெண் மன்னனை நோக்கி, நீயஞ்சவேண்டாம். நான் உயர்ந்து வர அம்மன்னன் தேரின் மீதேறி வந்தான்.

சட்டையணிந்த மெய்க்காவலர் தீயுமிழும் கண்களையுடையவர்களாய்க் கையில் வெள்ளிப் பிரம்பு ஏந்தி வந்தனர். அங்கி என்னும் நீண்ட சட்டையணிந்த பல வீரர்கள் வில், வாள் முதலிய ஆயுதங்களுடன் எண்டை வில்லும் உடையவர்களாய் நெருங்கி வந்தனர்.

அவ்வரசன் வேதகிரி எல்லையில் சேர்ந்து புறமெங்கும் வீரர்களை ஏவினான். வேடர்கள் விலங்கினங்களின் காலடிச் சுவடுகளை அறிந்து பல இடங்களில் வலைகளைச் சூழக் கட்டினார்கள். காட்டினை மூடியபின் வாளைப் போன்ற பற்களையுடைய நாய்களையும் அம்புகளையும் ஏவி பல விலங்குகளைக் கொன்றனர். புலிகள், யானைகள் முதலியவற்றைக் கொன்று குவித்தனர். கொடிய விலங்கினங்களின் ஒலிகளைப் போன்றெழுப்பும் ஒலியும், விலங்கினங்களைப் பற்றுகின்ற நாய்களின் குரைப்பொலியும் உலகை நடுக்கம் செய்தது.

அவ்வாறு அவர்கள் வேட்டையாடுகையில் ஒரு பன்றியானது கண்களில் தீப்பொறி பறக்க, இருள் இரண்டு பிறையுடன் வந்ததோ என்று வேடர்கள் அஞ்ச அவர்கள் கட்டிய வலைகளையறுத்து, பல நாள்களைக் கொன்று வேடர்கள் மீது பாய்ந்தது. வேடர்கள், இது பன்றியன்று என முறையிட்டனர். அது நம்மைக் கொல்ல பந்த எமன் என்று அஞ்சி ஓடி மன்னனிடம் கேட்ட மன்னன் அப்பன்றி எங்கிருக்கிறது? எங்கிருக்கிறது? அது ஓடிப்போகுமுன் ஓடுங்கள்? என்று கூறி சொன்ன சொல்லுக்கு முன் மின்னல் தோன்றி மறையும் அளவில் அதி விரைவாகத் தேரைச் செலுத்தி அப்பன்றியினைக் கண்டு, வில்லை நன்றாக வளைத்து ஒரு பெரிய கணையை அப்பன்றியின் மேல் ஏவினான். அந்தப் பாணமானது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலையருவிபோல குருதியானது அலைத்துப் பெருகியோடும்படி பன்றி பயந்து விழக்கொன்று, முன்னே நந்திதேவர் சாபத்தினால் அங்கு மேய்ந்து கொண்டிருந்த பசுவின் உடலையும் உருவிச் சென்றது. பன்றி வேட்டையில் ஒரு பசு இறந்து விட்டதே என்று மன்னனும் அவனுடைய சேனையும் மனம் திடுக்கிட்டனர். மன்னன் வெற்றிப் பொருந்தியவில் கீழ் விழும்படி கை சோர்ந்து மெய் தளர்ந்தான்.

அங்கிருந்த பசுவானது பொன் நிறமுள்ள திலதமும், தேன் பொருந்திய குழலும், நீலமலர் போன்ற கண்களும் அணிகலன் அணிந்த மார்பும், பூங் கொம்பையொத்த இடையும் உடுத்த பசுவன்று. திலோத்தமை. நந்திதேவர் சாபத்தினால் இவ்வனத்தில் பசு உருவில் திரிந்தேன் உன் பாணத்தினால் அந்த சாபம் நீங்கிப் பிழைத்தேன் என்று கூறி அம்மன்னனை வணங்கி, தேவர்கள் மலர்மாரி பொழிய வேதகிரியைப் பணிந்து வானுலகடைந்தாள்.

பன்றியானது மாயீகன் எனும் அரக்கன் உருவம் பெற்றது. அம்மாயீகனும் மன்னனை நோக்கி அய்யனே நீங்கள் எங்களுக்கு கதி கொடுத்தீர்கள். உங்களால் நாங்கள் பிழைத்தோம் என்று புகழ்ந்து சொன்னான். நாயும், அமைச்சனும் குட்ட நோய் நீங்கியது.

(தீரத்த விசேடம்)

சூரிய குலத்தில் வந்த சுர குருவாகிய அம்மன்னன் இச்செய்கைகளைக் கண்டு வியந்து, தேரைச் செலுத்திக் கொண்டு சென்ற பொழுது வேட்டை நாய்களில் குட்ட நோயுடைய ஒரு நாயானது நீருண்ண விருப்பங் கொண்டு, அம்மலையில் ஏறிச் சிறப்புள்ள சம்பாதி தீர்த்தத்தில் முழுகி நீருண்டெழுந்தது. துன்பம் உள்ள குட்டம் நீங்கி பொன் வடிவமாய் ஒளிவிடத்தக்கதாக விரைவில் திரும்பிவந்தது. அதனைக் கண்டதிசயித்த இரணியசேதாவெனும் பெயருடையவனும் வெண் குட்ட நோயுடையவனுமான அமைச்சன் அந்த நாய் சென்ற வழியே சென்று சம்பாதி தீர்த்தத்தைக் கண்டான். அந்தச் சுனையில் அநேக புழுக்கூட்டம் நிரம்பி இருப்பதைப் போல இறைவன் காட்டியதால் மிகவும் அருவருப்புடன் வாயை மூடிக்கொண்டு அந்த நீரில் மூழ்கினான். மூழ்கிய அளவில் அவன் உடல் முழுவதும் இருந்த நோய் தீர்ந்து உதடு வாய் மட்டும் வெள்ளைக் குட்டம் நீங்காதிருந்தது. அவ்வமைச்சன் மீண்டும் வாயைத் திறந்து மூழ்கியும், அந்நீரையுண்டும் நீங்கவில்லை. பரமசிவனுடைய திருவருளைச் சந்தேகிப்பவர் எவ்விதத்தவம் செய்யினும் உய்யார் என்பதனை விளக்கிற்று அவ்வமைச்சன் செயல் பிறகு பலரும் அவ்வமைச்சனின் இயற்பெயரை மாற்றி முத்து வெள்வாயன் என அழைக்கலாயினர். அவ்வமைச்சனின் உடல் மாணிக்கம் போல ஒளிவிடுவதனை மன்னன் கண்டு மகிழ்ந்தான். வியப்படைதற்குரிய திருக்கழுக்குன்றத்தின் எல்லையை வணங்கி அவ்வெல்லையைக் கடந்து மன்னன் நீங்கின அளவில் கழுகுருவமாக இருக்கும் சம்பு, ஆதியாகிய இருமுனிவரும் அம்மன்னன் எதிரில் சென்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அவர்களைத் தடுத்து இத்தலப் பெருமையைக் கூறிக் கதி பெறச் செய்வோம் என்று, அவனுடைய சேனைகளை வழி மறித்தார்கள். சேனைக்கடல் கழுகு முனிவர்களிடம் தோற்றன. மன்னன் கழுகு முனிவர்களை அணுகி நீங்கள் கழுகுருவுடன் இருந்தும் என் சேனைகளைத் தடுத்தீர்கள். நீங்கள் தேவர்களோ? முனிவர்களோ? அறிகிலேன் என்று நிமிர்ந்து நோக்கினன். அக்கழுகு முனிவர்கள் தங்கள் வரலாறு கூறி, நீ இத்தலத்தில் பசுவதை செய்து யாதொரு பரிகாரமும் செய்யாமல் போவதால் தடுத்தோம் என்றனர். அம்முனிவர்கள் அவ்வாறு சுறியதும் மன்னன், தம் பொருட்டு வலிய வந்து தடுத்து போரிட்டு தன்னுடைய பாபத்தைப் போக்க வந்த அவர்களின் கருணையை வியந்து, அவர்களை வணங்கி, என் விளை நீங்கி நன்மையடையும்படி இத்தலமகிமையைச் சொல்லுங்கள் என்று இரந்து கேட்டான். இவ்வாறு வினவய சுரகுர மன்னனுக்கு அம்முனிவர்கள் தீர்த்த விசேடமும், தலவிசேடமும், தலத்தை வழிபடும் முறையும், வரும் பயனும் விளங்கக் கூறலாயினர்.

தீர்த்த விசேடம்

[கங்கை முதலிய நதிகள் சங்கு தீர்த்ததில் நீராடுதல்]

கங்கைநதி, காளிந்தி நதி, சரசுநதி, வைதரணி நதி, கவுதமைநதி, மலப்பிரதரணி நதி, துங்கபத்திரை நதி, கம்பைநதி, பினாகிநதி, பம்பைநதி, கோமுகைநதி, பொன்முகிரிநதி, தென்குமாரிநதி, தேவிகைநதி, சிங்கைநதி, கண்டகிநதி, வேத்திரவதிநதி, பிராமிநதி, பாலிநதி, பொருணைநதி, சோவநதி, சிந்துநதி, சோமநதி, அளகைநதி, மந்தாத்திரிநதி, பெண்ணைநதி, அம்பைநதி இந்திரபுத்திர நதி, காவேரிநதி, உருத்திரநதி சரயுநதி, வைகை நதி, மணி முத்தாநதி முதலாயிருக்கும் பெரிய தேவ நதிகள் எல்லாம் கடலுக்கிறைவனாகிய வருணனை அணுகி, தங்களை அணையுமாற அவனைவேண்டி, அவன் தன்னை அணையும் நாள் இந்த நாள் எனக்கெனக்கு என்று முறைமாறி நின்று ஒருவருக்கொருவர் கோபித்து நின்றார்கள். இவர்கள் இவ்வாறு நின்ற நிலையைக் கண்டு வருணன் மிகுந்த அச்சங் கொண்டவனாய், இதற்கென் செய்வதென்று கலக்கங் கொண்டு அவர்களைப் பார்த்து நான் உங்கள் அனைவரையும் அலைகளாகிய கரங்களால் அணைத்து அன்பு செலுத்தி வந்தும் நீங்கள் இவ்வா மாறுபட்ட காரணம் என்ன என்று வினவினான் கங்கை முதலிய பெரிய நதிகள் தம் தம் பெருமைகளைக் கூறி தங்களையே மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினர். ஒவ்வொரு நதியும் யான் சிறந்தவள், நான் சிறந்தவள் என்று வாதிட்டதனால் வருணன் கோவித்து உங்களைக் காட்டிலும் பெருமைமிக்க தீர்த்தங்கள் உலகில் அனந்தமுண்டு, கோதாவரி என்று ஒரு தீர்த்தமுண்டு. அத்தீர்த்தக் கரையில் சுயம்பு வடிவாக சிவலிங்கமுண்டு. அதன் பெருமை சிறந்தது என்று கூறியும் அந்த நதிகளின் கோபம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீங்காமையின் அந்த நதிகளுடன் கோதாவரி நதிக்கரையில் உள்ள கோடீசுரேசுவரரின் கோயிலை அடைந்து, இறைவனைப் பணிந்துத் துதித்து முறையிட்டான். கோடீசுரலிங்கத்தில் அருள் கொண்டிருக்கும் சிவபெருமான் வருணனை நோக்கி நீ மனம் வாடி வருந்தாதே என்று தேற்றி, அந்த நதிகளைப் பார்த்து நீங்கள் உங்களுக்குள் நாம் பெரியம் நாம் பெரியம் என்று பெண் புத்தியில் நினைத்து ஊடிய வழக்குடன் வந்தீர்கள். உங்களுக்கு என்ன பெருமை இருக்கிறது? நம்முடைய உருத்திர கோடியில் குளிர்ச்சி பொருந்திய அநேக தீர்த்தங்கள் இருக்கின்றன. அந்தத் தீர்த்தங்களில் வீசுகின்ற தூய்மையான வெண்மை நிறமுள்ள ஒரு துளியினுடைய நூற்றிலொன்றுக்கும் உங்கள் பெருமை போதாது. அந்தத் தீர்த்தங்களில் தேவர்களும் முனிவர்களும் மூழ்கித் தங்கள் பாவங்களைத் தீர்ப்பார்கள். கன்னியா இராசியில் குரு பிரவேசிக்கும் சிறந்த நாள் இன்று ஆகையால், இன்று நாம் அங்கு எழுந்தருளுகிறோம், நீங்களும் வாருங்கள் என்று சிவபெருமான் எழுந்தருளினார். வருணனும் நதிகளும் விரைந்து உருத்திரகோடிதலத்தை அடைந்தனர். பரமசிவம் எழுந்தருளி அங்கிருக்கும் பல தீர்த்தங்களையும் காட்ட, அந்த நதிகள் சங்குதீர்த்தங்களையும் காட்ட, அந்த நதிகள் சங்குதீர்த்தம் முதலான தீர்த்தங்களில் மூழ்கி, சங்குதீர்த்தத்தில் தங்கி இருந்து தங்கள் பாவங்களையும் நீங்க, மனத்தில் இருந்த பொறாமையும் மாறிப் பணிந்து தங்கள் தங்கள் இடத்தில் போய்ச் சேர்ந்தார்கள். இத்தகைய தீர்த்தங்கள் இங்க அனேகம் உண்டு.

பன்னிரண்டு தீர்த்தங்கள்

சிறப்புள்ள வேதகிரிக்குக் கீழத் திசையில் ஒரு தீர்த்தம் இருக்கிறது அதன் பெயர் இந்திர தீர்த்தம். தென் கிழக்கில் சம்பு, தீர்த்தம், உருத்திரதீர்த்தம் என்றிரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. வடக்கு திக்கில் வசிட்ட தீர்த்தம் என்று ஒன்றிருக்கிறது. தென்மேற்குத் திக்கில் மெய்ஞ்ஞானம், அகத்தியம், மார்க்கண்டம், கோசிகம் என நான்கு தீர்த்தங்கள் உள. மேற்குத் திக்கில் நந்தி வருணம் என இரண்டு தீர்த்தங்கள் உள்ளன். வடமேற்கில் அகலிகை என்றொரு தீர்த்தம் உண்டு இந்த மலையின் உச்சியில் நாங்களிருவரும் கண்டதாகிய சம்பாதி தீர்த்தம் என்று எங்கள் பெயரால் ஒன்றிருக்கிறது. மன்னனே ! இத் தீர்த்தங்களைப் பார்த்தாலும், அள்ளித் தெளித்துக் கொண்டாலும் கணப்பொழுது மூழ்கினாலும் அங்கே போய் கால் சறுக்கி வீழ்ந்தாலும் பரந்த அத்தீர்த்ததில் ஒரு துளி தெளித்தாலும் அதில் பறந்து வருகின்ற காற்று மேலே பட்டாலும் உண்மையாகிய பாதகங்கள் எல்லாம் குடிபோகும் தேவர்கள் தொழத்தக்க இந்தத் தீர்த்தங்கள் தோறும் நீர் மொண்டுகொண்டு ஒரு அடி எடுத்து வைத்ச் செல்லுதல் ஒரு அசுவமேதயாகப் பலத்தை யொப்பாகும். விரதம் அனுட்டிப்பவர்கள் இந்தத் தீர்த்தத்தில் மூழ்கி அனுட்டித்தால் ஒன்று அன்நதமாகப் பலன் அளிக்கும். இந்தத் தலத்தில் சிவம் என்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீர்த்தம் என்றும் இரண்டில்லை இரண்டும் சமமாகும் என்று கழுகு முனிவர்கள் கூறினர்.

தல விசேடம்

வேதங்களும், உருத்திர கோடியரும், நந்தி தேவரும் தேவேந்திரனும், மேன்மை பொருந்திய நாராயணமூர்த்தியும். பிரமதேவனும், வசுதேவர்களும் ஒளிசெய்கின்ற சூரியர்களும் எங்களுடன் பொருந்திய எட்டுக் கழுகுருவமாய் வந்தவர்களும் குற்றம் பொருந்திய இருவினை தீரும்படி இங்குவந்து பூசித்தார்கள். இத்தலமும் சிறப்புள்ள இவர்களுடையபெயரை தரித்திருக்கிறது. அதுவன்றியும் சிவபுரம், தென்கயிலை, கதலிவனம், தருமகோடி என்னும் இந்தப் பெயர்களாலும் சொல்லப்படும். இத்தலத்தை உருத்திரர்களும் ஏழுமங்களையர்களும், முருகக் கடவுளும், சந்திரனும் பூசித்தார்கள். இவர்களும் அல்லாமல் உண்மைத்தவமுள்ள மார்க்கண்ட முனிவர், சம்பு முனிவர் அகத்தியர், தவபலமுள்ள வசிட்டமுனிவர், விசுவாமித்திர முனிவர், வாய்மையுள்ள சனகமுனிவர், அகலிகை வருணன் மற்றும் அனேகம் பேர் வணங்கினார்கள். அன்றித் தேவர்களும் முனிவர்களும் தங்கள் தங்கள் குறையை போக்கிக் கொண்டார்கள். ஒப்பற்ற பிரமதேவனை ஒத்தவர்கள் தனித்தனி வந்தது பூசை செய்து பணித்தார்கள். இத்தன்மையுள்ள வேதகிரியைச் சூழந்துள்ள ஏழரைக்காத எல்லையிலும் செய்கின்ற பந்தமாகிய பாதகங்கள் செய்ததெவ்வளவோ அஃவ்வளவில் பொருந்தும். தருமமோ என்றால் ஒன்று செய்தாலும் அது கோடியாய் பெருகும். அந்தக் காரணத்தினால் இது தரும கோடித்தலம் என்று பெயர் பொருந்தும். கங்கா நதி நீங்காத சடாமுடியையுடய பரமசிவம் வீற்றிருந்தருளும் காரணத்தால் சிவபுரம் என்று சொல்லப்படும்.

திருவரையில் அரவக் கச்சணிந்த பரமசிவம் இவ்வுலகத்தில் இருக்கும் யாவருக்கும் கிருபை செய்தருளத் திருவுள்ளத்தில் கருதி இக்கயிலாயகிரியின் சிகரங்களில் மூன்று சிகரங்கொண்டுபோய் வைத்து வை என்று நந்திதேவருக்குக் கட்டளையிட்டருள, நந்திதேவர் அந்தக்கட்டளையைப் பெற்றுக்கொண்டு குற்றம் நீங்கிய திருப்பருப்பதத்திலும், திருக்காளத்தியிலும், மேன்மை விளங்கும் இந்த வேதகிரியிலும் கொண்டுவந்து வைத்துச் சென்றார். கயிலாயகிரியின் சிகரங்களுக்குள் மூன்று சிகரங்கள் திரிக்காளத்தியிலும், திருப்பருப்பதத்திலும், வேதகிரியிலும் ஒவ்வொன்றாய் இருக்கும் முறைமையினால் இவை முருகப்பெருமானுடைய திருத்தாதையாகிய பரமசிவத்துக்கு எந்தநாளும் திருக்கயிலையாய் விளங்கிக் கொண்டிருக்கின்றன

சிவபெருமான் திருவாலங்காட்டில் காளியினுடைய வாதாட்டத்தினைக் கொடுத்து, ஊர்த்துவதாண்டவம் செய்து இந்த வேதகிரியில வந்து இளைப்பாரினார். உருத்திரகோடி என்று மகிழ்ச்சியுடன் ஒரு தரம் உரைக்கினும் மனத்தில் பொருத்த நூறு கோடி முறை ஐந்தெழுத்தோதியதற்கு ஒப்பாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தலத்தை வழிபடும் முறை

இந்த வேதகிரியைக் குறித்து எவர்கள் செல்லத் தொடங்கினாலும் தங்கள் மனையிடத்தில் இருந்து குளிர்ந்த நீரில் முழுகி, திருநீறும் உருத்திராக்கமுந்தரித்து, வேதகிரியில் செல்லும்போது கொடுமையாக யாதொரு இடையூறும் உண்டாகாத வண்ணம் காக்கக்கடவதென்று ஐந்தெழுத்தோதிக் கொண்டு செல்ல வேண்டும்.

தூய்மையான உணவு ஒரு வேலையுண்டு மாறுபாட்டவர்கள் வீட்டுணவு, பெண்கள் சேர்க்கை, தீய எண்ணம் தீயசொல் இவைகளை நீக்கி, மிதியடி, ஊர்தி, குடை, வெற்றிலைபாக்கு, எண்ணெய் முதலியவைகளையும் நீக்கி நித்திய நியமங்களை முடித்துக் கொண்டு, தங்களுடைய சுற்றத்தாருடன் சென்றாகிலும் தான் தனியே சென்றாகிலும் பெருமை பொருந்திய இத்தலத்திற் சேர்ந்து உடல் தூய்மை செய்து நந்தி தீர்த்தத்தில் நடுவில் எள்போட்டு, வயிரவருடைய நல்ல அருளைப் பெற்றுக் கொண்டு மூழ்கி, தென்புலத்தார் கடன் செய்து, கரையில் வந்து, தானம் செய்து, ஐந்துமுறை அல்லது மூன்று முறை வலம் வந்து மலைமேலேறியாவது-மலையிலேற அஞ்சி தரையின் நின்றாவது வேதகிரீசருடைய திருவடிகளுக்கு பூசை செய்து செய்வித்து அவ்வமயம் தம் கையில் உள்ள பொருளை மனத்தில் ஒளிக்காமல் சிவபணிக்காகக் கொடுத்து பரமசினாருடைய திருமுன்எதிரிலிருந்து ஐந்தெழுத்தோதி, உணவும் உறக்கமும் நீக்கி, இரவைக் கழித்து, விடியற்காலையில் சங்கு தீர்த்தத்தில் மூழ்கி, நித்திய நியமங்களை முடித்து சிவபெருமானின் ஆலயத்தினுடைய மதிலின் புறத்தே வல்ம செய்து உள்ளே போய் சிவபெருமானின் திருவடிகளை வணங்கித் துதிசெய்து, நல்லொழுக்கமுள்ள மறையவர்களுக்கு உணவு படைத்தல் செய்து சிவனடியார்களுக்கும் உணவளித்து அவர்கள உண்ட பிறகு உணவருந்த வேண்டும்.

இம்முறை வணங்கிச் செல்கின்றவர்கள் கடல் சூழ்ந்த உலகை அரசாண்டு இன்பங்களை அனுபவித்து அதற்குமேல் இருவினை ஒப்புவந்து உய்யும் நெறியில் முத்தியும் அடைவார்கள்.

இவ்வாறு தரிசனத்தின் பொருட்டுச் செல்வோர் வேதகிரீசர் தலத்தில் சேரும்போது அத்தலத்தின் அருகிலிருக்கும் குற்றம் இல்லாத பழமையாகிய உருத்திரகோடித் தலத்தில் விருப்பத்துடன் சென்றாலும் பரமசிவத்தின் வண்ணமாகிய சாரூபம் கிடைக்கும், சென்று பணிந்தால் இழிதொழில் உடையவனாயினும் முத்தியடைவான், வலம் செய்யும் போது கையசைக்காமல் ஐந்தெழுத்தன்றி மற்றென்றும் கருதிடாமலும், பெயர்த்து வைக்கும் இரண்டடியின் மத்தியில் ஒரு அடியின் பரப்பிற்கு மிகாவண்ணம், சொவ்விதான கருவானது வயிற்றில் நிறைந்து நடக்கா நின்ற செல்வமுள்ள பெண்ககளுடைய சோர்வுள்ள் கால்நடை போல மென்மையாக வலஞ் சூழ்ந்து வருகின்றவர்கள் முத்தியடைவார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மன்னனே இதுவன்றியும் இவ்வாலயத்திருப்பணிக்கு. பொருள் அளிப்போர் பெருமை சொல்வதற்கரிது.

வேதசொரூபமான வேதகிரியின் எல்லையில் வந்து இமைப்பொழுது இளைப்பாற்றிக் கொண்டு செல்லுகின்றவர்கள் சிவபதம் சேர் என்றால் வேதகிரீசரைப் பல காலமுந்தொழு தெழுந்து அவ்விடம் விட்டு நீங்காமல் வாசமாயிருப்பவர்களுக்குப் பொருந்தும் பதவியினுடைய அளவை யார் சொல்லத்தக்கவர்கள்.

"அறிஞனே காசியில் இறந்தால், திருவாரூர் எல்லையில் பிறந்தால், சிதம்பரத் தரிசித்தால் முத்தியடைவார்கள். சிறப்புடைய இத்திருக்கழுக்குன்றச் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் தரிசனம் ஆனாலும் அங்கிருந்தபடியே கைகளால் தொழுதால் அப்பொழுதே முத்தியை அடைவார்கள்.

சுரகுரு மன்னன் வழிபட்டது.

மன்னனே திருமால், பிரமன், இந்திரன் பதவியிலிருப்பதைப் பார்க்கிலும் இத்தலத்தைச் சூழ்ந்த சோலையில் பழுவாய்ப் பிந்திருந்தாலே சிறந்தது. இத்தகை தலத்தில் பசுவதை செய்துவிட்டு யாதொரு பரிகாரமுஞ்செய்யாமல் செல்கின்றனை ! நீ சூரிய குலத்துதித்த மன்னனாதலின் உம்மீது இரக்கங்கொண்டு பேர் செய்து உன்னையும் மறித்துச் சொல்லவேண்டும் என்பதை விரும்பிவந்தோம் ஆதலால் வேதகிரீசரைத் தொழுது பூசித்தல் வேண்டும் வா என்று சம்பு ஆதி எனும் முனிவர்கள் மீட்ப சுரகுரு மன்னன் திரும்பினான் சேனையும் திரும்பி நடந்தன.

மன்னன் திருக்கழுக்குன்றத்திற் சென்ற அளவில் அத்திருக்கழுக்குன்ற மலையைக் கடல் சூழ்ந்தது போல் மன்னனின் தானைக்கடல் சூழ்ந்தது. சுரகுர மலையைச் சூழ்ந்துள்ள காட்டினைக் கடந்து, தேரை விட்டிறங்கி கழுகு முனிவர்களின் அருளாகிய நிழலைப் பெற்றுக் கொண்டு, வானில் நிழல் செய்யும் தன் குடைநிழலை மாற்றிப் பின்னாலே சேனையை நிறுத்தி விட்டு, அமைச்சனுடன் மலைமீதேறினான். முன்னாளில் வேதகிரீசன் திருவடிகளைப் பணிந்த பன்னிரு சூரியர்களும் தங்கள் குலத்தில் ஒரு மன்னன் வடிவாயப் பின்பும் வேதகிரியைப் பூசிக்க வந்தது போல் அணிகள் விளங்கும்படி போனான்.

கழுகுருவமாயிருக்கிற முனிவர்களால் சொல்லக் கேள்விப்பட்டு அந்தப் பெரிய மலையினுடைய அடி, நடு, முடி என்னும் மூன்றிடத்திலும் மூன்று சிவலிங்கம் தாபித்து ஆகமவிதிப்படி பூசை செய்து வணங்கினான். அன்பு பொருந்த துதி செய்கின்ற அவ்வரசனுடைய பாதகமானது இன்பம் அடையும் படி சிரசில் நின்றும் காக்கை வடிவமாய் எழுந்து வன்மையுறப் பறந்து வேதகிரியின் தென்திசைமலையில் போய்விழுந்தது. (சுரகுரு மன்னனின் பாவம் காக்கை வடிவமாய் எதிரில் உள்ள குன்றில் விழுந்ததால் அக்குன்று காக்கை குன்று எனும் பெயர் பெற்றது.) தேவர்கள் பூமாரி மிகுதியாக பொழிந்தார்கள். அளவில்லாத முனிவர்கள் வாழ்த்து வழங்கினானர்கள். தேவதுந்துபிகள் ஒலித்தன. மன்னனுடைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சேனைகள் களிப்படைந்தன. அப்போதுகண்ட உலகத்தாரும் அவர்களும் அன்றி அவர்களுடைய இருபத்தொரு தலைமுறையாரும் வெந்தெரிகின்ற நரகத்தினின்றும் நீங்கினார்கள்.

அத்தன்மையக் கண்டதிசயித்த அமைச்சனானவன் அப்போதே ஒரு சிவலிங்கம் தாபித்துத் தூய்மையுள்ள நீரினாளல் திருமஞ்சனம் செய்து துதித்தனன் அப்பொழுதே அவனுடைய பாவங்கள் எல்லாம் பெரிய தீபத்துக்கெதிரில் இருள்மாய்வது போல் மாய்நதன.

சுரகுரு மன்னன் அவ்வேத கிரியினின்றும் இறங்கி, மேலே கொடிகள் அசைந்து கொண்டிருக்கும்படியாகிய பொன்மயமான வீடுகளும், மதில்ளும் கோபுரங்களும் பொன்னினாற்கோயில்களும் வீதிகளும் திருமாளிகையும் ஏற்படுத்தி, பழைமையாகிய அத்தலத்தில் பொருந்திய முன் வளங்களை எல்லாம் புதிய வளமாகச் செய்வித்துத் தைப்பூச விண்மீனில் திருவிழா நடத்தித் தரிசித்துப் பாவியேனாகிய நான் உய்ந்தேன் என்று சம்பு ஆதி என்றும் அவ்விரண்டு முனிவர்களுடைய பாதங்களில் வணங்கினான். தங்களுடைய இரண்டு திருவடிகளையும் பணிந்த சுரகுரு மன்னனைச் சம்பு ஆதி என்னும் முனிவர்கள் நோக்கி, திங்கள் என்று சொல்லும்படியான ஒரு குடை நிழலில் இவ்வுலகத்தைக் காத்துப் பின்பு பரகதியைச் சேரக்கடவை என்று வாழ்த்தி விடை கொடுக்க, சுரகுரு மன்னன் கடல்போன்ற தன் சேனையுடன் தன்னுடைய தலைநகரமாகயி மல்லை நகரத்திற்கு அமைச்சனுடன் சென்று, மங்களமுள்ள மும்முரசங்கள் எந்நாளும் முழங்க அரசாட்சி செய்து முடிவில் இறைவன் அருகுறையும் சாமிப்பியபதம் பெற்று வாழ்ந்தான்.

இத்தலத்து வந்து தங்கினால் உயர்பதவி வரும்

மறைமயக்கிரி யெல்லையில் வந்து இமைப்பொழுது
பொறை யுயிர்த்து இருந்து ஏகுவர் பரபதம் புகுந்தால்
இறைவனைப் பல காலமுந் தொழுது எழுந்திரவாது
உறைபவர்குறுங் கதியினது அளவை யாருளாப்பார்

எங்கு இறந்தாலும் அவர்கள் எலும்பு முதலியவற்ற இங்கிட்டால் அவர்கள் முத்தியடைவார்கள்.

எந்நிலத்தாழி இறப்பினும் இறந்தவர் பெயராற்
புன்னலங் குசை முடிந்து வேதப்பொருப்பு எல்லை
தண்ணில் வைத்து நீராட்டினும் நகம் மயிர் எலும்பைக்
தொன்றிலத்தினால் ஆங்கிடுகலும் முத்தராய்த்தொடுவார்

மன்னு ருத்ர கோடியின் மார்கழி முழுதும்
அன்ன முத்தராய் ஆறிரு தீர்த்தமும் ஆடி
மின்னை யொத்த வேணிக்கே ராயிரங் கிளைவில்லந்
தன்னை இட்டவர் சுற்ற நூற்றொருந் கதி சார்வார்

அவையின் மாதவரை வைதல் அரசர்பால் கோளே கூறல்
சுவையநீர்க்கெய்துங் கோவை தடுத்தல் அச்சுரவி மாய்த்தல்
நவையுற அறவோர் உண்டி மாற்றல் நல்குவோர்க்கு ஈதும்
இவைகள் என்று ஈயாதேதல் யாகத்தர் வதையோ டொத்தும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

ஆற்றிய நியமஞ் ஞான மகற்றுதல் அருளார் அன்பர்க்
ஏற்றும் அன்பிலாதிருத்தல் எதிர்ந்து பொய்ச்சான்று கூறல
மாற்றியுள்ளனர் கைத்து உண்ணல் மதுநுகர் மாதர் துமணமப்
போற்றி மெய்புணர்தல் எல்லாம் கண்ணுண்ணும் புரையோடொக்கும்

எவை யெவை செய்யும் பாவத்திவையிவைக் கிணையா மென்றும்
அவையவை யெல்லாமிந்த ஆரணக்கரியைச் சார்ந்தால்
அவை அறகிதறு மீண்டு நன்னிர் தீயோர் எனும்
சுவை நல்த்தூயோர் நன்னார் தூரேனுந்தீயோர்

இத்தலத்தின் பெருமை கட்டுரைக்கு அடங்காது மலையை வலம்வருவோர் எண்ணிக்கை கணக்கில் அடங்காது.

தாழக்கோயிலில் ருத்திரர் கோயிலிலும் பிரதோஷம் விழா விழா நிகழ்ச்சியில் வழிபடுவோர் எண்ணிக்கையும் அளவிடற்கரிது.

சங்குதீர்த்த புட்கர விழா பலநூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. புட்கரத்தன்று பலநதிகள் சங்குதீர்த்தத்தில் சங்கமமாகிறது. இங்குள்ள தீர்த்தங்களின் பெருமையை சிவபெருமான் நதிகளுக்கு எடுத்து இயம்பியுள்ளார். அன்று குறிப்பிட்ட நேரத்தில் சிவபெருமான் வேதகிரீசர் நந்திதேவர் மீது ஆரோகணித்து சங்குதீர்த்தக்கரைக்கு எழுந்தருளி பக்தர்களுக்குத் தரிசனம் தரும் காட்சி காணக்கிடைக்காத காட்சி. அவ்வமயம் சங்குதீர்த்தத்தில் நீராடும் பக்தர்கள் வினகைள் நீங்கி இறைவனருள் பெறுவார்கள்.

இலட்சதீபவிழாவில் இறைவன் எழுந்தருளியுள்ள வேதமலை சோதிமலையாக விளங்கும் நகரமும் சோதியாக திகழும். இவ்விரு தரிசனமும் காண்போர் செய்த தவமாகும்.

இத்தலத்தில் செய்யும் அறப்பயனைப் புராணம் கூறுவது காண்போம்

சிறார் விளையாட்டின் மண்ணிற் சிவாலயமியற்றினால்
சிவலோகத்தை யடைவர். உருத்திரகோடீசர்க்கு
மாறாது இரந்தேனும் கோயில் வகுத்தவர் முத்திதன்னிற்
பெறா நிலை இல்லை யென்னா பெருமறை முறையிட்டோதும்

உருத்திர கோடீசன் திருப்பணிக்கு உவந்தே தேனும்
கருத்துடன் கொடுக்கும் மாந்தர் கல்வியும் தவமும் காண்பர்
திருத்தலைவருமாய் வாழ்வார் செல்லும் எத்திசையும் வெல்வர்
வருத்திய பிணிக்கும் அஞ்சார் மறுமை முத்தியும் சேர்வர்

திருமலைச் சொக்கிபாகன் திருப்பணிக்கென ஏதேனும்
அரிவையர் உதவிற் காந்தர்க்கு அணிகலம் போல்வார் யாண்டும்
உரிமை மங்கலமும் நீங்கா ஒளியுடை மதாரப் பெற்றுய்வார்
பெருமனை வெறுக்கை யறார் கற்பினும் பிழைத்தல் எய்தார்

வேத வெற்பிறைவன் கோயில் பணிக்கென விழைந்தே தேனும்
ஈதலின் மறைஞர் வேள்வி யிருந்தவம் முடிப்பர் வேந்தர்
பூதலம் புரப்பர் இப்பர் பொற்குவை குவிப்பர் வெண்மைத்
காதமும் விளைய துய்ப்பர் ஏணையர் தாமும் உய்வார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் திருவாவடுதுறையில் தமிழ்வகுப்பு நடத்திக் கொண்டிக்கும்போது, தனிப்புலமையில் செருக்குற்ற ஒருவர். வகுப்பைக் கவனியாமல் பிள்ளை அவர்களிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு, தாம் அறிந்த பொருள் தெரியாத செய்யுள் ஒன்றைச் சொல்லி பொருள்வினவினார். அப்பாடலின் இறுதிச்சீர் கால்காட்டும் கழுக்குன்றென்பது.

கால், அரை, முக்கால், ஒன்று என்னும் மேலா லக்கம் போல் ஒன்று, முக்கால், அரை, கால் என்பது கீழா லக்கம். காணி என்பது ஒன்றில் என்பதில் (80ல்) ஒன்று. இருபது காணி. கால் அச்செய்யுள் அச்செய்யுளில் 20 காணி கூறி (கால்) காட்டும் கழுக்குன்றே என முடிந்துள்ளது.

இச்செய்யுள் கட்டளைக்கலித்துறை. பாடல் வருமாறு

காணியுங் காணியுங் காணியுங் காணியுங் காணியுங்காற்
காணியுங் காணியுங் காணியுங்காணியும் காணிமுக்காற்
காணியும் காணியுங் காணியும் காணியும் காணிநாற்
காணியும் காணியும் காணியும் காட்டும் கழுக்குன்றமே

(முதல் வரியில் 5 காணி, இரண்டாவது வரியியில் முதலில் இருப்பது கால் காணி பிறகு நான்கு காணி மூன்றாவது வரியில் முதலில் இருப்பது முக்கால் காணி. பிறகு நான்கு காணி. நாலவது வரியில் முதலில் இருப்பது நாலு காணி பிறகு இரண்டு காணி ஆக இருபது காணி=கால் எனவே கால் காட்டும் கழுக்குன்றம்=கழுக்குன்றம் கால் காட்டும்) கால் பாதத்தைக் குறிக்கும். திருக்கழுக்குன்றத்தை அடைந்தால் அத்தலம் சிவபெருமானின் திருவடியைக் காணச் செய்யும் என்பது கருத்து. பிணக்கிலாத பெருந்துறைப் பெரும் பித்தனே எண் வினையொத்தபின் கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே என்பதை நினைத்துப் பாடல்பெற்றது என்று பிள்ளை அவர்கள் விடையளித்தார். இது வரை பொருள் தெரியது மனணம் செய்திருந்த அந்தப் புலவர் கேட்டு பிள்ளை அவர்களின் புலமையை வியந்து வாழ்த்தி மகிழ்ந்து சென்றார். இச்செய்தி மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் 118 அவர்தம் ஆய்வு மாலை 2000 தொகுதி 2 பக்கம் 398, 399-ல் உளது.

சிவபெருமான் பாத்தைக் கண்டால் சிவ சாயுக்கியம் அடையலாம். சிவனடியார்கள் காலைப் பிடித்தாலும் சிவலோகம் கயிலையை அடையலாம் என்பதனை கீழ்வரும் செய்தியால் அறியலாம். டாக்டர். உ.வே. சாமிநாத அய்யர் தலவரலாறு மற்றும் இவ்வூர் உலா முதலியவற்றில் எழுதியது. இத்தலத்தில் முற்காலத்தில் நாச்சிமுத் தென்னும் கணிகை ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் ஒரு வைணவரால் பாடல்பெற்ற திருக்கழுக்குன்றம் மாலை என்னும் நூலில் ஒரு செய்யுலைத் தினந்தோறும் கூறி வேதகிரீசனை வழிபட்டு வந்தாள். ஒரு நாள் பெருங்காற்றும் மழையும் வந்தமையின் திருக்கோயிலுக்குச் செல்ல இயலவில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஐயோ இன்று எம்பெருமானை வழிபட முடியவில்லையே ! என் செய்வது ! நான் அவர் சந்நிதியில் சென்று தொழும் வகையின்றி திகைக்கிறேன். எம்பெருமான் இவ்வீட்டு முற்றத்தில் எழுந்தருளினால் எவ்வளவு ஆனந்தமாகப் பாடி மகிழ்வேன் ! இந்தக் தடைகளைப் பொருட்படுத்த வேண்டாமே ! "என்று வருந்தி "முற்றத்தில் வந்து முன்நிற்கிலோ" என வரும் செய்யுளைப் பாடத் தொடங்கினார்.

இச்செய்யுளிற் பாதி முடிந்தவுடன் வேதகிரீசர் இடப வாகனரூடராய் முற்றத்திலே முந்தருளினார்.

(சிவபெருமானைக் கண்டு விம்மிதமடைந்த கணிகை மற்றப் பாதியைப் பாடி முடிந்து அவரை வணங்கி மகிழ்ந்தாள். பிறகு இறைவா எழுந்தருளும்போது அவரது பிரிவாற்றாமல் இடப வாகனத்தின் திருவடியைப் பிடித்தாள். அப்படியே இறைவா அவளை கைலாயத்திற்கு அழைத்துச் செல்வதை அங்கே நின்ற மாலையின் ஆசிரியராகிய வைவ்வர் நாச்சிமுத்தின் காலைப் பிடித்து தாமும் கயிலைப் புக்கனர்.

இவ்வரலாறு விளக்கமாக சேந்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில்

"உருக்கமுள வொருதாதி நாச்சிமுத் தென்னுமவள்
ஒரு வயிளவன் பாடிய
உயர் கழுக்குன்ற மாலை பிரபந்தத் தின் நாள்
ஒன்றிலுந் கொரு கவிதையாய்ச்
சருக்கரை கலந்தபா வமுதமென மலையின் மேல்
தம்பிரான் முன்பு பாடச்
சண்ட மாருத மழையினாற்றப்ப வொருதினம்
தாதி தான் பாட வீசன்
அருக்கனா யிரகொடியேன விடையில்ரச விடையின்
அடியைப் பிடிக்கும அவளோடு
அவளடி பிடிக்கும் அவ் வயிணவனையும் கொண்டு
போய்க் கயிலை வாழ்வைக்கும்
திருக்கழுக்குன்ற மெனும் வேதகிரி வருமுருக
சிறுபறை முழக்கியலே
சிறியனேன் கேட்கவே அருள்நாத வொலியெனும்
சிறுபறை முழக்கியருலே"
(காஞ்சிபுரம் ஸ்ரீ சிதம்பர முனிவர் இயற்றிய
சேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்)

இப்பாடலில் அருமை - பெருமை யறிந்து திருவாவடுதுறை ஆதீனம் சீர் வளச்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இப்பாடலை திருக்கழுக்குன்றம் முருகர் ஆலயத்தில் வடக்குப் பக்க உள் சுவரில் எழுதி வைத்துள்ளார்கள். மற்றும் கால் காட்டும் செய்யுளை திருவாவடுதுறை மடத்தின் சுவர்களில் எழுதி வைத்துள்ளார்கள்.

இத்தலத்தில் பிறந்த வைத்தியநாத தேசிகர் திருவாவடுதுறை ஆதினத்தில் 18-வது குருமகா சந்நிதானமாக சுப்பிரமணிய தேசிகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எனும் தீட்சா நாமத்துடன் (கி.பி.1920-1922)ல் சிறப்புற அருளாட்சி செய்து இருக்கிறார். அதனைக் கருத்தில் கொண்டு சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரியார் அவர்கள் இத்தலத்தை நேசித்து , ஆவன செய்கிறார். வாரம் இருமுறை 100-க் கும் மேற்பட்டவர்களுக்கு அன்னம் அளித்து மகிழ்கிறார். மற்றும் ஆலயத்திற்கு சில திருப்பணிகள் செய்து வருகிறார்கள்.

திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் திருமயிலையில் எலும்பைப் பெண்ணுருவாகச் செய்து திருவான்மியூர் இறைஞ்சி திருவிடச்சுரம் வந்து மரகத வண்ணணைக் கண்டதிசியத்து போற்றி "இவர் வண்ணம் என்னே" என்று துதித்து பதிகம்பாடி "நிறைந்தாரா வேட்கையினால் நின்றிறைஞ்சி புறம்போந்தங்கு உறைந்தருளி பணிகின்றார் உமையொருபாகர் அருள் பெற்றுச் சிறந்த தொண்டருடன் எழுந்தருளி "செந்துருத்தி அறைந்தளிகள் பயில்சாரல் திருக்கழுக்குன்றினை அணைத்தார்".

சென்றனையும் பொழுதில் திருத்தொண்டர் எதிர்கொள்ளப்
பொன்திகழும் மணிச் சிவிகை இழிந்தருளி உடன் போந்து
மன்றல் விரி நறுஞ்சோலை திருமலையை வலங்கொண்டு,
மின்றயங்குஞ் செஞ்சடையாரை விருப்பிடனும் பணிகின்றார்.

நிறைந்து ஆராத அன்பினுடன் திருவிடைச்சுர நாதரின் அருள்பெற்று செந்துருத்தி என்னும் பண்ணை பாடும் வண்டினங்கள் உறையும் சாரல்களையுடைய கழுக்குன்றினை அடைந்தார். அவ்வாறு அடையும்போது திருக்கழுக்குன்றத்தில் உள்ள திருத் தொண்டர்கள் எதிர் கொண்டு வணங்கினர். அவர்களைக்கண்டு திருஞானசம்பந்தர் தாம் ஏறி வந்த சிவிகையினின்றும் இறங்கி, அத் திருக்கழுக்குன்றத் தொண்டருடன் தம் தொண்டர்கள் புடைசூழ மணங்கமும் சோலைகள் சூழ்ந்த திருமலையை வலம் வந்து,

ஒளியையுடைய திருக்கழுக்குன்றத்தில் அமர்ந்த செம்பொன் மயமான ஒப்புயர்வற்ற குன்று போன்ற இறைவரை மிகுந்த அன்புப் பெருக்கினால் பணித்தெழுந்து தமக்கு ஞானப் பாலூட்டிய ஞான்று தாம் துதித்த ஓங்கார ஒலியினையுடைய தோடு எனும் சொல்லினை நினைவு கூர்வார் போல், இறைவன் அம்மை அப்பனாய் விளங்கி, மிகவும் அன்பு கொண்டு வுறையும் இடம் கழுக்குன்றே என்று வலியுறுத்தும் தமிழ் மாலை பாடி அருளினார்.

வேதகிரிப் பெருமானை கள்ளம் வல்லான் என்று குறிப்பிட்டுள்ளார். இப்பெருமானுக்கு, கள்ளம் வல்லான் எனும் பெயருண்டு.

மற்றும் திருஞானசம்பத்தர் திருப்பெருவேலூர் திருப்பதிகத்தில் அண்ணாவும் கழுக்குன்றம் ஆயமலை அவை நினைவு கூர்ந்துள்ளார்.

திருஞானசம்பந்தர் வேதகிரிப் பெருமானைக் கண்டு தரிசித்து ஒரு காதில் தோடு உடையவன் மற்றொரு காதில் தூய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

குழையுடையவன் என்று உமையொடு பாகவனாகத் துதித்து, இறைவன் மிக்க அன்பு கொள்ளும் இடம் கழுக்குன்ற் என்று தெளிவுபடபாடியுள்ளார். "தோடுடையான் ஒரு காதில் குழை தாழ ஏடுடையான் தலை கலனாக இரந்துண்ணும் நாடுடையான் நள்ளிருள் ஏம நடமாடும் காடுடையான் காதல் செய் கோயில் கழுக்குன்றே.

விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் துதிக்கின்ற கொன்றை மாலையும் சூடிய இறைவன் மிகுந்த அன்பு கொளும் இடம் கழுக்குன்றே என்று

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ் கொன்றை
நாணகத்தார் தண் மதிகுடித் தலை மேலோர்
வானகத்தார் வையகத்தார் தொழுதேத்தும்
கானகத்தார் காதல் செய் கோயில் கழுக்குன்றே

என்று அறிவுறுத்தியுள்ளார்.

"பொன் மகன் தன்னை ஒரு பாகம்
பிணையல் செய்தான்'
என்றும்
பெண்ணின் நல்லாளை ஒரு பாகம்
இணையல் செய்ய (செய்து)
என்றும்
பெண் மகள் தன்னோடு ஒரு பாகம்

காதல் செய்தான் காதல் செய் கோயில் கழுக்குன்றே என்றும் அருளிதால் ஞானசம்பந்தர் இங்கு இறைவனை உமையொரு பாகனாகவே தரிசித்தார் என்று தெரிகிறது. நிப்பதி உமையில் பெயர் பெண்ணின் நல்லாள்

திருஞானசம்பந்தர் சீர்காழி குளக்கரையில் அழுதபோது இறைவன் அம்மையுடன் எழுந்தருளி வந்தார். அம்மை ஞானப்பாலூட்டினார். ஞானப் பாலூண்ட பிள்ளையார் முதலில் தந்தையிடம் பாலூட்டியவர் இவர் என்று சுட்டிக்காட்டும் பதிகத்தில் பாலூட்டிய அம்மையினது கருணையை நினைத்து அம்மையின் தோடுடைய செவியையே முன் வைத்து ஈருருவம் ஒருருவமாக இறைவனைத் துதித்தார்) மற்றும் ஆறு தலங்களில் தோட்டினை நினைவு கூர்ந்து பாடினார்.

1. தோடுடைய செவியர் என்று சீர்காழியிலும்
2. தோடொர் காதினன் என்று திருவிடைமருதூரிலும்
3. தோடுடைய காதினன் என்று திருநள்ளாற்றிலும் பாடியுள்ளார். தோடுடன் குறையும் சேர்த்து
4. தோடுடையான் குழையுடையான் என்று திருச்செங்காட்டிம்
5. தோடுடைய தொர்காது சேர்ந்த குழையாள் என்று திருநாரையூரிலும்
6. தோடனி குழையள் என்று திருவிடச்சுரத்திலும்
7. தோடுடையான் ஒரு காதிற் தூய குழை தாழ என்று இத்திருக்கழுக்குன்றத்திலும் பாடியருளினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தோடு ஓலைச் சுருள் போன்றது பெண்கள் அணிவது. இறைவன் இட பாகத்து செவி குழைவளையும் போன்றது ஆண்களணிவது இறைவனின் வலபாகத்து செவி இரு காதணிகளையும் இப்பதியில் குறிப்பிட்டதால் இறைவன் உமையொரு பாகனாய் திருஞான சம்பந்தருக்குக் காட்சி தந்தார் என்று அறியத் தோன்றுகிறது.

திருநாவுக்கரசர்

திருஞான சம்பந்தர் திருக்கழுக்குன்றம் வருமுன் திருநாவுக்கரசர் திருக்கழுக்குன்றம் வந்தார்.

திருஞானசம்பந்தர் மதுரை சென்றதும் திருநாவுக்கரசர் திருவண்ணாமலை; திருவோத்தூர், காஞ்சியம்பதி வந்து திருக்கழுக்குன்றம் வந்தார். பிறகு திருவான்மியூர், திருமயிலை, திருவொற்றியூர், திருக்காளத்தி, திருப்பதம், திருக்கயிலாய யாத்திரை சென்று திருவையாறு வந்து திருப்பூந்துரத்தியில் திருஞானச் சம்சந்தரைச் சந்தித்தார். பிறகு திருஞான சம்பந்தர் சீர்காழி சென்று, திருவண்ணாமலை, திருவோத்தூர், காஞ்சி வழியே திருக்காளத்தி சென்று திரும்புகையில் திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர், திருவிடைச்சுரம் வந்து திருக்கழுக்குன்றம் வந்தார். திருநாவுக்கரசர்.

"திருக்கச்சி ஏகம்பம் பணிந் தேத்தித் திங்களார்
நெரக்கச் செஞ்சடைக் கணிந்தார் நீடுபதி தொழநினைவார்
வருக்கைச் செஞ்சுளை பொழிதேன் வயல்வினை நாட்டிடைப் போய்
படுக்கைத் தின் களிற்றுரியார் கழுக் குன்றில் பாங்களைத்தர்"
நீடு திருக் கழுக்குன்றில் நிருத்தனார் கழல் வணங்கிப்

பாடு தமிழ்த் தோடை புனைந்து பாங்கு பல பதி களிலும்
சூடும் இளம் பிறைமுடியார் தமைத்தொழுது போற்றிப் போய்
மாடு பெருங் கட்கருத்த வான்மியூர் மருங்களைத்தார்"
திருநாவுக்கரசர் கச்சியில் திருவேகம்பரைத் தரிசித்து, வழியில் உள்ள தலங்களைத் தரிசிக்க விருப்பம் உற்று, பருத்த துதிக்கையை யுடைய வலிய யானையில் தோலைப் போர்த்த சிவப் பெருமாள் வீற்றிருந்தருளும் திருக்கழுக்குன்றம் வந்தார்.

உயர்ந்த திருக்கழுக்குன்றத்தில் வீற்றிருந்தருளும் சிவபெரமானுடைய திருவடிகளை வணங்கி, வேண்டுவேர்க்கு வேண்டுவன உவந்து ஈயும் கற்பகத்தரு போன்றவன் கழுக்குன்றத்தே வீற்றிருக்கும் பெருமான் என்று போற்றி துதித்து திருத்தாண்டகம் பாடியருளினார்.

தற்பொழுது இரு தாண்டகங்களே உள்ளன. இறைவனை புனிதன், கற்பகம், காபாளி என்றும் கண்ணுறக் கண்டேன் என்றும் புகழ்ந்துரைக்கின்றார். அவர் இறைவனடி சேர்ந்த போது திருப்புகலூரில் கழுக்குன்றத் துச்சியாம் கடவுளே நின் பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன் என்று பாடியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

சுந்தரர்

சுந்தரர் தண்டக நாடாகிய தொண்டை நாட்டில் சிவபெருமான் மகிழ்ந்துறையும் இடங்கள் தோறும் திருத்தொண்டர் எதிர் கொண்டழைக்கச் சென்று தொழுது வண்டொலிக்கும் முல்லை நிலங்களையும், குறிஞ்சி நிலங்களையும் கடந்து எட்டு திக்குகளிலும் உள்ளவர்கள் வந்து தொழும் கழுக்குன்றினை அடைந்தார்.

தேன் நிரம்பிய மலர்ச்சோலைகள் சூழ்ந்த திருக்கழுக்குன்றத்தில் உள்ள திருத்தொண்டர்கள் மிகுந்த விருப்புடன் மகிழந்து எதிர்கொள்ள எழுந்தருளி, வெண்திங்களை அணிநத் சுடர் கொழுந்தை வேதகிரிப்பெருமானை வணங்கி, துதித்து இனிய இசையினையுடைய திருப்பதிகம் பாடினார். "தண்டக மாந் திருநாட்டுத் தனிவிடையர் மகிழ் இடங்கள் தொண்டர் எதிர்கொண்டணையத் தொழுது போய்த் தூய நதி வண்டறையும் புறவு, மலை, மருதம் பல கடந்தே எண்டிசையோர் பரவு திருக்கழுக்குன்றை எய்தினார், தேனார்ந்த மலர்ச்சோலை திருக்கழுக்குன்றத் தடியார் ஆனாத விருப்பினெடும் எதிர் கொள்ள அடைந்தருளி, தூநாள் வெண் மதியனிந்த சுடர்க் கொழுந்தைக் தொழுநிறைஞ்சி பாநாடும் இன்னிசையின் திருப்பதிகம் பாடினார். சுந்தரர் பதிகத்தில் உலகீர், தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானது இடம், பிடியானைகள் தங்கள் கன்றுகளோடு சூழ்ந்திருக்கும் குளிர்ச்சி பொருந்திய கழுக்குன்றமே அதனை, பிற உயிர்ளை வருத்து மாற்றாற் செய்த கொடுஞ்செயல்களால் பலரும் பல இகழுரைகளை சொல்லுமாறு இழி வெய்த நின்ற பாவமாகிய வினைகள் பலவும் நீங்கதற் பொருட்டுப் பலகாலம் சென்று வணங்கு மின்கள்.

'இனிய இசைபாடி, தலைவணங்கி வழிபடுமின்கள்,
சிறந்த மாணிக்க ஒளியை யுடையவளாகிய நஞ்சனிந்த

கண்டத்தையுடையவன் எழுந்தருளி இருக்கும் இடம் திருக்கழுக்குன்றம். நாள்தோறும் முறைப்படி நீண்ட நேரம் நின்று வழிபடுங்கள் திருநீற்றில் மூழ்கி நின்றவளாகிய அப் பெருமாளை உங்கள் அறியாமை நீங்குதற் பொருட்டு வழிபடுங்கள் என்று பலவாறு வேதகிரிப் பெருமானின் அருள், தோற்றம் முதலியவற்றைத் தெளிவுபட எடுத்துக் கூறி உலகத்தவர் தாங்கள் செய்த பாவங்களைப் போக்கிக் கொண்டு நற்கதி யடைய வழி காட்டுப் பதிகமாகப் பாடியருளினார்.

சுந்தரர் வேதகிரிப் பெருமானிடம் பொன் பெற்றார். இது விபரம் கலம்பகத்திலும், உலா, சிலேடை வெண்பா முதலியவற்றிலும் உலது. வேதகிரீசர் உள்ளங்கையில் பொன் உருண்டை இருக்கிறது. இவ் வீசலுக்குப் பொன்னிட்ட நாதர் என்று பெயருண்டு.

"அண்டர் தொழும் சாழியர்கோன் அப்பர் வன்தொண்டர்
கண்டு தமிழ் பாடும் கழுக்குன்றே."

இப்பாடல் உரையின் உ.சே.சாமிநாத அய்யர் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தமூவரும், கழுக்குன்று சிவலிங்க வடிவமாகத் தொன்றினமையின் மேலேறாமல் கீழே அக்கினி மூலையில் நின்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடினார்கள். அங்ஙனம் நின்று பாடிய இடம் மூவர்பேட்டை என்றும் பெயரால் இக்காலத்து வழங்கப்படுகிறது. அங்கே மூவர் கோயிலுண்டு. மலை சிவபெருமாள் வடிவமென்பதைப் புலப்படுத்த மலையில் சுற்றுப்பக்கத்தில் கீழே மலையை நோக்கிய வண்ணமாகத் திருநந்தி தேவர்களின் வடிவங்கள் அமைக்கப் பட்டுள்ளன என்று எழுதியுள்ளார். சிலர் சுந்தரர் இத்தலத்திற்கு மேற்கில் ஒரு மைல்கல் தொலைவில் உள்ள நாவலூரில் நின்று பாடினார். இப்பதிக்கு வரவில்லை யென்பர். திருஞான சம்பந்தர் வந்த இடம் ஆதலின் தாம் நடந்தல் சரியில்லை என்று வரவில்லை என்பர்". சுந்தரர் இத்தலத்தில் பொன் பெற்று இருக்கிறார். ஒரு விழாவில் சுந்தரர் தனியே உலா வருகிறார். சித்திரைப் பெருவிழாவில் நாலாம் நாள் விழாவில் அவர் பொன் பெற்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது.

திருநாவுக்கரசர் கண்ணாரக் கண்டேன் நானே என்று பாடியிருக்கிறார். திருஞான சம்பந்தர் அம்மை அப்பனாய் தரிசித்திருப்பதாகத் தெரிகிறது. எனவே மூவரும் சிவக்கொழுந்தாகிய வேதகிரிசரின் அருவுருவத் திருமேனியைத் தரிசித்திருக்கிறார்கள். அவர்கள் சன்னதி நேர் உள்ள இந்திரத் தீர்த்தத் தருகில் நின்று பாடி இருக்கலாம் அருளாளர்கள் உள்ளுணர்விற்குரியது.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் குருத்தை மரநிழலில் குருவடிவாய் சிவபெருமான் கட்டளையிட்டருளியபடி, அடியவர்களுடன் ஒரு இடத்தில் சிவபெருமான் திருவடிகளைச் செய்து வைத்து வழிபட்டு வருகையில், பொய்கையில் எழுந்த தீயில் அடியவர்கள் மூழ்கியதும், தான் முழுகாமல், சிவபெருமான் இயம்பியவாறு உத்தர கோச மங்கை சென்று, எண்வகை சித்தியும் பெற்று, தேவர்கள் வரம் வேண்டி இறைஞ்சம் தெய்வீக வளம் பொருந்திய திருக்கழுக்குன்றினை" அடைந்தார்.

சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியவாறு "வழுக்காதிருந்து" அளவிலடங்காத தம் திருவுருவத்தைக் காட்டி அருளினார்.

காணுதற்கரிய அக்காட்சியினைக் கண்டு, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிய நின்று,

"யாவரிடத்திலும் மாறுபாடில்லாத திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே உன்னுடைய திருப்பெயர்களை எடுத்தியம்புகின்றவர்களுக்கு நிகரற்ற சிறந்த பேரின்பம் உண்டாகும். எமது தலைவனாகிய நீ துயரங்களை யொழித்து, காய்ந்து போதல் இல்லாத தனித் தன்மையுடைய பிறவி விதையானது மேலே விளையாதபடி, இருவினை யொப்பு எனக்கு வந்த பிறகு அளவிலடங்காத உனது திருவடிவத்தைத் திருக்கழுக்குன்றத்தே எழுந்தருளி வந்து காண்பித்தருளினை.

(பிறவித் துயரால்) கலங்கின என்னுடைய கண்ணீரைத் துடைத்து பாசம் அறுத்த பெருந்துறை பெருமானை விட்டு நீங்கினேன். நான் தீவினையாகிய கெடுதியையுடையேன். இனிமேல் நிகழக் கூடிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருள்களால் இனி என்னவென்று தெரியாத வனுமானேன். மேலும் மேலும் ஒளி விட்டுத் திகழ்கின்ற திருப் பெருந்துறை குருந்த மர நிழலில் இருந்தடியேன் சிரசில் தரித்து வந்த நின் சிவந்த திருவடிகள் இரண்டினையும் வைத்து வழிபடும் இடம் தெரியாமல் கவலையுற்றேன். அவ்வாறு கலங்காதபடி திருவடி வைத்து வழிபடுதற்குரிய இடம் இதுவே என்று தெளிவுபடுத்தும் முறையில் திருக்கழுக்குன்றத்திலே நின் திருவருட கோலத்தைக் காட்டியருளினாய்.

(உனதன்பர்) "பிறரால் மேற்கொள்ளப் படாத உயர்ந்த பேரன்பு பூண்டு, உன்னையடைந்து தினமும் வழிபடவும், அது செய்ய இயலாமையால், அன்பர் வெட்கப்படக் கூடாத தொரு வெட்கமடைந்து, பிறவியாகிய கடல் நடுவுள் ஆழந்து போக இருந்த யான், அடியேன் பற்றிய போற்று தற்கரிய திருப்பெருந்துறையிற் பரமாசாரியரது திருவடிகளாகிய பெரிய தெப்பத்தை யெய்தி, அதனைச் செலுத்துதலும், எளியேன் காணுதற்கரிய அகண்டமாகிய நின் திருவடிவத்தைத் திருக்கழுக்குன்றத்திலே எனக்கு காண்பித்தருளினை''

(பிறவியாகிய பெருங்கடலைக் கடந்து சிவப்பேறு எய்த திருப் பெருந்துறை குருத்த மர நிழலில் தாம் பெற்ற உபதேசமும் திருவடியும் தெப்பமாகக் கொண்டு, அதன் வழி ஒழுகி, திருக்கழுக்குன்றமாகிய கரையை அடைந்து இறைவன் திருவருள் காட்சியைக் கண்டு பிறவிக் கடலினின்று உயர்ந்ததாகத் துதித்தனர்)

மாணிக்கவாசகர் இத்தலத்தலி சிலநாள் தங்கி இருந்து, தாம் திருப்பெருந்துறையல் ஆடியவர்களுடைய வழிபட்ட திருவடிகளை திருமலையின் மேல் ஏறும் வழி அருகு வைத்து மண்டபம் கட்டி வழிபட்டார். சிலநாள் இங்கு தங்கியமையை வாதவூரார் புராணம் கூறுகிறது.

"தொண்டின் மிகு வாதனூர்த் தோன்றல் குரு வடிவம்
கண்டு களிக்கும் கழுக்குன்றே" என்ற சிலேடை வெண்பா

உரையில் உ.வே. சாமிநாத அய்யர்.

", மாணிக்கவாசகர் வாதவூரடிகள் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் கண்ட குரு வடிவத்தை இத்தலத்தில் கண்டு களித்தமை" கலங்கினேன் கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே (திருவாசகம்)

"கழுக்குன்றத ்தரி பிரமர் காணானைக் கண்டானைக்
கருத்துள் வைப் பாம்" (திருக்கழுக்குன்றம் புராணம்)

"வழுகில் பெருந்துறையில் வாழ்வித்த கோலம் கழுக்குன்றிற் கண்ட கவி" (ஏகாம்பர நாத ருலா) என்பவற்றால் விளங்கும்" இதற்கு அறிகுறியாக திருமலையின் மேல் ஏறும் வழி தொடங்கும் இடத்தில் மேல்புறத்தில் ஒரு மண்டபமும் அதில் சிவபெருமான் திருவடி நிலைகளும் மாணிக்கவாசகர் திருவுருவமும் இருக்கின்றன" என்று எழுதியுள்ளார். மாணிக்கவாசகர் இத்தலத்தை எண்ணற்றவர்கள் (பலர்) வழிபடுகிறார்கள் என்று திருக்கோவையாரில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விண்ணிறந்தார் நிலம் விண்டார் என்று மிக்கார் இருவர்
கண்ணிறத்தார் அம்பலத்தார் கக்குன்றினின்று
தன்னறுந் தாதிவர் சந்தனச் சோலை பந்தாடுகின்றார்ங
எண்ணிறத்தார் அவர் யார் கண்டதோ மன்ன நின்னருளே
என பாடியுள்ளார்.

பட்டினத்தார்

பட்டினத்தார், திருவேகம்பம் உடையார் திருவந்ததாதியில் "நீள் கழுக்குன்றம்" என்று குறித்துள்ளார். அவர் "என் உடல் 'வினை ஒழித்தால்' எங்கு விழும் என்பதனை அறியேன் எங்கு உடல் நீங்கினும் என் உயிர் உமது திருவடிகளில் அடைக்கலமாக அருளுக" என்றிறைஞ்சியுள்ளார்.

"காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமே மிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேன் உடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றிலீசா உயிர்த் துணை நின்பதமே"

அருணகிரிநாதர்

அருணகிரிநாதர், இத்தலத்தில் மலை மீது சிவபெருமானுடன் எழுந்தருளி இருக்கும் முருகபெருமானைத் தொழுது, திருப்புகழ் (நான்கு) பாடியுள்ளார். அவர் இத்தலத்தினை திருக்கழுக்குன்றம்' என்றும், தமிழ் வேதவெற்பென்றும், 'கதலிவனம்' என்றும் குறித்துள்ளார். திருக்கழுக்குன்றம் தேவேந்திரன் உறையும் அமராவதியைக் காட்டிலும் அழகில் சிறந்து விளங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார். போக முனிவர் சென்னசாகரத்தில் 315 ஆம் பாடலில் கழுக்குன்றம் முருகனின் நாலாவது படை வீடாகக் கூறப்பட்டுள்ளது. அப்பாடல் முருகன் கூறுவதாக அமைந்துள்ளது.

"நிரைத்திட்டடேன் யானிருக்கும்மூலம்
சொல்லேன்.
நிலையான வரையாறும் தலங்களாகி,
அரைத்திட்ட 'ஆவினன் குடியும்', 'பரங்
குன்றும்"
அழகான 'திருத்தணிகை', கழுக்குன்றாகும்,
பளாத்திட்ட 'ஏரகமும்', 'செந்தூராகும்",
பரிவான தலமாறும் நர் தாமே"...என்றிருக்கிறது.

அருணகிரிநாதர் "வேதவெற்பிலே" எனத் தொடங்கும் திருப்புகழில் "ஓதுவித்தநாதற்கற்க ஓதுவித்த முனி நாண ஒரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமானே" என்றுரைத்திருப்பதால், சிவபெருமானுக்கு முருகப்பெருமான் பிரணவத்தின் பொருள் உரைத்த செய்தி இவ்வூர் திருப்புகழில் உள்ளதை நோக்குங்கால், போகர் நூலில் கூறுவதை வலியிறுத்துவது போல் திருப்புகழ் அமைந்துள்ளது என உணர நேருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

"செகத்தில் உச்சம் பெற்றமராவதி
யதற்கும் ஒப்பென்றுற்றழகே செறி
திருக கழுக்குன்றத்தினில் மேவிய
பெருமாளே"
"வேலெடுத்து நடந்த திவா கராசல
வேடுவப்பெண் மணந்தபுயா சாலாதமிழ்
வேத வெற்பிலமர்ந்தக்பாகரா சிவ
குமரவேளே"
"எழுகுநிறை நாபி அரிபிரமர் சோதி
இலகு மரன் மூவர்
முதலானோர்-
இறைவி யெனு மாதி பரை முலையில் ஊறி
எழுமமிர்த நாறு
கனிவாயா
புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புனித னென ஏடு
தமிழாலே-
புனலி லெதிரேற சமணர் கழுவேற
பொருத கலி வீர
குருநாதா
மழுவுழைக பால டமாகத்ரி சூல
மணிகரவி நோதர்
அருள்பாலா
மலரயனை நீடு சிறைசெய்தவன் வேலை
வளமை பெறவே செல்
முருகோனே
கழுகுதொழு வேத கிரிசிகரிவீறு
கதிருலவு வாசல்
நிறைவானோர்
கடலொலிய தான் தமிழ் மறைகளோது
கதலிவனமேவு
பெருமாளே."

'அருணகிரிநாதர், தமிழ் வேதவெற்பு என்றும், கழுகு தொழும் (வேதகிரியில் (உள்ள) ஒளிநிலவும் (கோயிலின்) வாயிலில், நிறைந்த தேவர்கள் - மாட்சிமையுடையோராகிய தவத்தினர்கள், கடலொலி போன்று (இடைவிடாது) தமிழ்மறைகள் (ஆகிய தேவராம், திருவாசகப் பாடல்களை) ஓதும் கதலிவனம் என்று புகழ்ந்துள்ளார்.

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

சிதம்பர சுவாமிகள், வேதகிரீசனைப் 'பிறவிப் பிணியைப் போக்கும் வயித்தியன்" என்று போற்றியுள்ளார். சந்தப்பாக்களால் தத்துவஞானத்திணையுணர்த்தியுள்ளார். இவர் தம் குருநாதரின் குருநாதராகிய! இயற்றிய வைராக்கிய சதகம் நூலிற்கு எழுதிய உரையில் சாந்த லிங்க சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தடுத்துமேலும் இவ்வுருவமாயினும்
அடைதல் சற்றல மறைநாகத் (து)
இடத்தின் மாதவரிருவர் கங்கென
அடைந்(து)
இருத்தல் சான்றரிதரகிக்,
கிடைத்த தேகமும் விவேகமும் இருக்
கும் ஞான்றே
கிரீசனை நெஞ்சே,
அடுத்திலாய் பலகவலை மாய்த்
தோருணர்
வாகி நின்றகலாதே"

எனும் பாடலுக்கு எழுதிய உரையில் கழுகு முனிவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"அகிலசராசர மெவையும் நடத்துவை
ஐந்தொழிலால் இவையுள்
ளான சிருட்டியளித்தலமித்தலுமாக மதிற்
சாரும்
புகலு மறப்புந் தெளிவுற்றலுமே பொலியு
யிரிடை சாரும்
போத மகற்று திரோதமெனக்குப் போக்
கிறகுறைபடுமோ
பகரருமறி வானந்தச் சுடரே பரகதியெனை
யுய்க்கும்
பண்பார் துணையே என்பாலமுதே பாகே
மாகடலே
மிகுநெறி தவமார் தெய்வக்கங்கம் விளங்
கியிருந்துதொழும்
வேதகிரிப் பவரோக வயித்திய வேணி
முடிக்கனியே"

இராமலிங்க சுவாமிகள்

இராமலிங்க சுவாமி...........
"நன்னெறியோர் துன்னுநெறிக்கோர் துணையாந் தூய கழுக் குன்றினிடை முன்னும் அறிவானந்த மூர்த்தமே'' என்று சிறப்பித்துள்ளார்.

சிவபோக சாரம்

தில்லைவனம் காசி திருவாரூர் மயூரம்
முல்லைவனம் கூயல் முதுகுன்றம்- நெல்லை களர்
காஞ்சி கழுக்குன்ற மறைக்காடருணை காளத்தி
வாஞ்சியம் என் முத்தி வரும்"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

இடி அபிடேகம்

இத்தலத்தில் இந்திரன் பூசித்தான். தொடர்ந்து பூசித்தும் வருகிறான் என்பதற்கு அறிகுறியாக இம்மலைமீதுள்ள கருவறைக் கோபுரக் கலசத்தின் அருகுள்ள துவாரத்தின் வழியாக இடிவிழுந்து சிவலிங்கத்தைச் சுற்றி பரவி பாய்ந்து விடுகிறது. 10-11-1930. பிரமோதூத ஆண்டு, புரட்டாசித் திங்கள் 25-ஆம் சனிக்கிழமை. கிருத்திகை அன்று காலை ஏழு மணிக்கு இடி விழுந்தது. முறையே இடி அபிடேகம் செய்தனர். ஊரில் உள்ள அனைவரும் கண்டு தரிசித்தோம். இடி விழுந்ததால் சேதம் ஒன்றும் ஏற்படவில்லை. முறையே இவ்விறைவன் ஆலயத்தில் இடி விழுந்து வருகிறது என்பதனை,

"அடிபட்டீர் கல்லானும் எறிப்பட்டீர்.
அத்தனைக்கும் ஆளாயந்தப்
படிபட்டும் போதாமல் உதைப்பட்டீர்
இப்படியும் படுவாருண்டோ?
முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர்
முதற்கோணல் முட்டக்கோணல்
இடிபட்டும் பொறுந்திருந்தீர் சிவ
சிவா உமைத் தெய்வமென்னலாமே"

என வரும் சொக்கநாதப் புலவர் பாடலாலும்,

உதைவயன்ன கல்லெறி யென்னவில்
உடனே பிரம்படி யென்ன மற்(று)
இது வன்றியும் சிவனே யுனக்(கு)
இடியும் தலைப்பொறியோ வையா"

என வரும் கழுகாசச சதகச் செய்யுளும் வலியுறுத்துகிறது."

திருக்கழுக்குன்றம் மாலை

ஓரா யிரமறை யோங்குயி ராக வுடன் மலையாய்
நேரான சோதிக் கொழுந்தாம் பிராற்கிட நீண்டெழுந்து
பேராழி செய்யுங் தவத்தால் இடியெனும் பிள்ளை வந்து
காராழீ நீர் கொண்டு பூசித்து மேவுங் கழுக்குன்றமே.

சங்கு அபிடேகம்

மார்க்கண்ட முனிவர், சங்குதீர்த்தக் கரையில் இருந்து தவம் இயற்றினார். சங்கு தீர்த்தக் கரையில் அவர் வழிபட்ட சிவலிங்கத்திற்கு தீர்த்தகிரீசுவரர், மார்க்கண்டேசுவரர் எனும் பெயர்கள் வழங்குகின்றன. மார்க்கண்டர் பூசை செய்வதற்கு அத்தீர்த்தத்தில் ஓங்கார ஒலியுடன் சங்கு தோன்றியது. தோன்றிய சங்கினால் மார்க்கண்டர் இறைவனைப் பூசித்தார். சங்கு தோன்றியதால்-தோன்றிக்கொண்டிருப்தால் இத்தீர்த்தம் சங்குதீர்த்தம் எனப்பெயர் பெற்றது. 19-5-1894 ஜய. வைகாசி 7 சனிக்கிழமை பகல் 3 மணி, 18-2-1909 கீலக. மாசி 7 வியாழன் காலை 9 மணி. 26-6-1919 சித்தாத்திரி, ஆனி 12 வியாழன் காலை 9 மணி 12.6.1939. பிரமாதி வைகாசி 29

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திங்கள்கிழமை காலை 10 மணி... 16-1-1976 இராட்சசதை 2 வெள்ளிக்கிழமை காலை 11 மணிகளிலும் சங்குகள் தோன்றியுள்ளன. 12.6.1939-ல் தோன்றிய சங்கினை நிழற்படம் எடுத்துள்ளனர். இந்தச் சங்குகளுடன் 1008 சங்குகள் கொண்டு மலை மீது வேதகிரீசருக்கு ஆண்டுதோன்றும் காத்திகைத் திங்கள் கடைசி திங்கள் கிழமையில் சங்கு அபிடேகம் நடைபெற்று வருகிறது.

சங்குதீர்த்த புட்கரமேளாவும் இலட்சதீபமும்

குரு கன்னியாராசியில் (வாக்கியரீதியாக) பிரவேசிக்கும் நாளில், கங்கை முதலிய நதிகள் சங்குதீர்த்தத்தில் வந்து நீராடிய நாளைக்கொண்டாடும் சங்குதீர்த்த புட்கர விழாவும், மறுநாள் மாலை இலட்சதீப விழாவும் நடைபெற்று வருகின்றது. சங்கு தீர்த்தத்தில் மூழ்குவோர் இயமனை வெல்வர்.

பன்னிரு தீர்த்தங்கள்

வேதகிரி மலைக்குக் கிழக்கில் நால்வராயத்திற்குப் பின்புறம் உள்ளது இந்திர தீர்த்தம் இதில் மூழ்குவோர் தேவராவர். மலைக்குத் தென்கிழக்கில் மாமல்லபுரம் சாலையில் உள்ளது சம்பு தீர்த்தம். உருத்திரர் கோயில் அருகுள்ளது உருத்திர தீர்த்தம். வடக்கே காளிக்கோயிலுக்குத் தெற்கில் உள்ளது வசிட்ட தீர்த்தம். இதில் மூழ்குவோர் இட்ட சித்தி மிகவும் பெறுவர். மலைக்குத் தென்மேற்கில் கணக்கர் மண்டபத்தருகிலுள்ள பொன்னிட்ட நாதர்குளம் அக்திய தீர்த்தம், சேரன்குளம் என் வழங்குவது மார்க்கண்ட தீர்த்தம். அதற்குத் தென்மேற்கில் உள்ளது மெய்ஞான தீர்த்தம். இத்தீர்த்தம் மகிவும் சிறந்த பெருமை வாய்ந்தது. தூர்ந்தநிலையில் கேணி அளவில் இருக்கிறது. அண்டரசன் குளம் என வழங்குவது கோசிகதீர்த்தம். பக்தவற்சலேசுவரர் ஆலயத்தில் உள்ளது நந்தி தீர்த்தம். கோடி விநாயகர் கோவில் அருகுள்ள கோடி தீர்த்தம் என்பது வருண தீர்த்தம். வடமேற்கில் வெள்ளைக்குளம் என வழங்குவது அகலிகை தீர்த்தம். மலைமீதுள்ள பட்சி தீர்த்தம் என்ற வழங்குவது சம்பாதி தீர்த்தம். இத்தீர்த்தத்தில் மூழுகுவோர் முக்தியை அடைவர்.

கோயில்கள்

மலையின் மீதுள்ள கோயில் மலைக்கோயில் என வழங்குகிறது. இத்திருமலைக் கோயிலில், சிவபெருமான் வாழைப்பூக் குருத்துப்போல் சுயம்பு மூர்த்தியாகத் தோன்றியுள்ளார். அவ்வுருவம் சிதைவுறாவண்ணம் இறைவனின் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தைக் கவசமாகத் தரித்துள்ளார்கள். இவ்வாலயமூலத்தானம் மூன்று பெரிய பாறைகளால் ஆக்கப்பட்டிருக்கிறது கருவறை உட்பக்கச் சுவர்களில், மேற்கில் சோமாசு கந்தரும், பிரம்மாவும், திருமாலும், வடக்கில் யோக தட்சிணாமூர்த்தியும், மார்க்கண்டேயர் சிவலிங்க பூசையும், தெற்கில் நந்திகேசுவரர், சண்டிகேசுவரர் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. போக சக்தி எழுந்தருளியுள்ளார். உள்சுற்றில் விநாயகர் ஆலயமும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

சொக்கநாயகி ஆலயங்களும் இருக்கின்றன.

சுரகுருமன்னன் தாபித்து வழிபட்ட சிவலிங்கமும் ஆலயமும் பட்சிப்பாறை அருகு இருந்து பழுதுபட்டு ஆலயம் மறைந்து விட்டது. சம்பு, ஆதி முனிவர்கள் உண்டாக்கிய சம்பாதி தீர்த்தம், பட்சி தீர்த்தம் என வழங்கி வருகிறது. இத்தீர்த்தத்தின் பெயராலேயே இத்தலத்தை வடநாட்டவர் பட்சி தீர்த்தம் என்று போற்றி வருகின்றனர். இத்தீர்த்தப் பாறையில் கழுகு முனிவர்களுக்கு உணவளிக்கப்படுகிறது. கழுகு முனிவர்கள் நாள்தோறும் பகல் பதினோரு மணியளவில் உணவருந்த வருகின்றனர். வரும்போது மலையையும் கோயிலையும் வலம் வந்து உணவு உட்கொள்கிறார்கள். அவர்கள் நடந்து வரும்போது தங்களைத் தரிசிக்க வந்துள்ளவர்களை அருட்கண்ணால் நோக்கி அருள் பாலிக்கின்றனர். கூர்ந்து கவனிப்போர்க்கு இவ்வுண்மை தெற்றென விளங்கும். மலையினின்று இறங்கும் பாதையில் மகேந்திரவர்மன் குடைந்த குடைவரைக்கோயில் பெரிய அளவில் உள்ளது. தாழ்வரையில் சித்தாத்திரி விநாயகர் கோயில் அய்யனார் கோயில்கள் உள்ளனு. மலையின் தெற்குப்பக்கம் ஒரு குகையும், கிழக்குப் பக்கம் ஒரு குகையும் உள்ளன.

மலைவலப் பாதையில் அன்னக்காவடி மடத்துப் பிள்ளையார்கோயில், கோடி விநாயகர் கோயில், ஆலடிப் பிள்ளையார் கோயில், முடிகாட்டும் விநாயகர் கோயில்கள் உள்ளன. வடமேற்கு மூலையில் மாணிக்கவாசகர் எழுந்தருளச் செய்த திருவடி கோயில் உளது. இக்கோயிலை தவத்திரு. அழகர் அடிகளார் போற்றி அதன் பெருமையை விளக்கியுள்ளதுடன் அவர் தன் நன் முயற்சியினால் மாணிக்கவாசகர் திருநட்சத்திரமாகிய ஆனிமகத்தன்று திருமுறைப் பெருவிழா நடத்தி, அவ்வாலயத்திற்குச் சிறப்பு செய்து வருகின்றார். இக்கோயில் அருகு மஞ்சள் வேப்பம் மரம் உளது. அதன் அருகு மலையினடியில் உள்ள மண்ணை மருந்தாகப் போற்றுகின்றார்கள். இம்மண் உடற்பிணியையும் உயிர்ப்பிணியையும் போக்க வல்லது. இம்மலைப்பகுதிக்குக் சஞ்சீவி மலை எனும் பெயர் உண்டு. இப்பகுதியில் மலை மீது சிறந்த பச்சிலை மூலிகைகள் உள்ளன. கோடி விநாயகர் கோயில் அருகிலுள்ள கோடி தீர்த்தம் என வழங்கும் வருண தீர்த்தம் தருக்கள சூழ்ந்த அழகிய தடாகமாகும். வடக்குப் பக்கம் சொக்கநாயகிக்குத் தனி கோயில் அமைத்துள்ளார்கள்.

கிழக்குப்பக்கம் வேதகிரீசர் திருமுன்னிலைக்கெதிரில் இந்திர தீர்த்தக் கரையில் நால்வராலயம் உளது. இந்த ஆலயமும் அழகரடிகளார் ஊக்குவிப்பதால் திருப்பணி செய்யப் பெற்று விளங்குகிறது. சிவபெருமான் திருமுன்னிலை எதிரில் இது போன்று நால்வராலயம் தமிழகத்தில் எங்கும் இல்லை.

அடிவார வீதியில் சொக்கப் பிள்ளையார் கோயில் இருக்கிறது. சங்குதீர்த்தத்தின் வடமேற்கு மூலையில் இரட்டைப் பிள்ளையார் கோயில் என வழங்கும் சன்னதி விநாயகர், சண்முக விநாயகர் கோயில் இருக்கிறது. சங்குதீர்த்தக் கிழக்குக் க்ரையில் ஆஞ்சநேயர் ஆலயம் இருக்கிறது. சன்னதி வீதியில் ரேணுகை கோயிலும், ஏழு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மங்கையர் எழுந்தருளியுள்ள செல்லியம்மன் கோயில்களும் உள்ளன. செல்லியம்மன் இத்திருக்கழுக்குன்றத்தின் கிராமதேவதையாக விளங்குகின்றாள். சித்திரைப் பெருவிழாவின் போது செல்லியம்மனுக்குக் காப்புக்கட்டி திருவிழா செய்த பிறகு விழா நடைபெறும். சங்குதீர்த்தம் வான் பொய்ப்பினும் நீர்வற்றாத நீரூற்றினையுடைய தடாகமாகும். இந்தக்குன்றத்தின் மேற்குக் கரையில் தீர்த்தகிரீசர் கோயிலும், குளத்தின் மத்தியில் நீராழி மண்டபமும் இக்குளத்தை அழகு செய்கின்றன. சுரகுரு மன்னன் விழாவெடுத்த தைப்பூச நாளில் இக்குளத்தில் தெப்பல் விழா நடைபெறுகிறது. சங்குதீர்த்தத்தின் தென்கிழக்கு மூலையில் உருத்திரகோடியர் பூசித்த உருத்திரகோடீசுவரர் ஆலயம் இருக்கிறது. இது மிக மிகப் பழமையான ஆலயம். ஆலயத்தருகுள்ளது

உருத்திர தீர்த்தம். இக்கோயிலின் வாயிலின் உள்பக்கம் சூரியர், சந்திரர் கோயில்கள் உள்ளன. (இத்தலத்தில் உள்ளன ஆலயங்களில் நவக்கிரகங்களுக்கு ஆலயம் கிடையாது. உருத்திர கோடீசுவரர் கோயிலில் சூரியர், சந்திரரும், பக்தவற்சலேசுவரர் ஆலயத்தில் சூரியர் கோயிலும்தான் உள்ளன). இறைவர் பெயர் உருத்திரகோடீசுவரர். இறைவி பெயர் பெண்ணினல்லாள் எனும் உருத்திரகோடீசுவரி இவ்வாலயக் கோபுரம் முதலிய திருப்பணிசெய்யப்பட்டிருக்கிறது.

தாழக்கோயில் என வழங்கும் தாழ்வரைக் கோயில் பக்தவற்சலேசுவரர் ஆலயம். இவ்வாலயத்தில் உள்ள சிவலிங்கம் சுரகுருமன்னன் தாபித்தது. இவ்வாலயம் நாற்புறத்திலும் நான்கு பெரிய கோபுரங்களையுடையதாய், வெளிச்சுற்றில் நாற்கால் மண்டபம்,பதினாறு கால் மண்டபம், அறுபது கால் மண்டபமாகிய ஆமை மண்டபம் (இம்மண்டபம் ஆமை மீது பெரிய பீடத்துடன் மிகவும் அழகிய முறையில் அமைக்கப்பட்டது.) நந்தவனம், நந்தி தீர்த்தம், சர்வ வாத்திய பண்டபங்கள் அமைந்துள்ளன. ஆலய வாயிலில் அழகிய கோபுரம் அமைந்துள்ளது. இது இரிஷிகோபுரம் என வழங்கப்படுகிறது.

ஆலயத்தின் உள் சுற்றில் சூரியமூர்த்தி, தட்சணாமூர்த்தி, விநாயகர், முருகர், வயிரவர் ஆலயங்கள் உள்ளன. மற்றும் அறுபத்துமூவர் கேதாரிலிங்கம் முதலிய பல தலங்களின் சிவலிங்கங்களை எழுந்தருளச் செய்துள்ளனர்.

வெளிச்சுற்றில் பரிவார் உற்சவ மூர்த்திகளும், மிகப் பெரிய வீரபத்திரரும் உள்ளார்கள் பக்தவற்சருக்குத் தெற்குப் பக்கம் முறையே சோமசுந்தர், ஏகாம்பரநாதர், ஆத்மநாதர், ஆத்மநாதர் எதிரில் மாணிக்கவாசகர், பின்புறம் முறையே தலவிநாயகராகிய வண்டு வன விநாயகர், சம்புகேசுவரர், ஆறுமுகசாமி, அருணாசலேசுவரர், திரிபுரசுந்தரி, சுந்தரிக்கு காட்சி தரும் வேதகிரீசர், காளத்திநாதர், நடராசர் ஆலயங்கள் உள்ளன. மலைவேதமலையாதலினாலும், இறைவன் பிரணவ சொரூபமாக இருத்தலானும் இறைவி திரிபுரசுந்தரி இவ்வாலயத்தில் தனிக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பக்தவற்சலேசுவரரை வணங்கி, முறையே வலமாக வழியில் உள்ள ஆலயங்களை வணங்கி, திரிபுரசுந்தரியைத் தொழுது காட்சி தரும வேதகிரியை வலமாக வந்து, காளத்திநாதரை வணங்கி திரிபுரசுந்தரி கோயில் உள்ள பலிபீடத்தருகு நின்று திரிபுரசுந்தரியையும் காட்சி தரும் வேதகிரீசரையும் வேதமலையீசரையும் வணங்கித் துதித்து. நடராசப் பெருமானை வணங்கவேண்டும். தலவிருட்சம் வாழைமரம் (கதலி விருட்சம்)

இத்தலம் வேதமலையில் முழு முதற்பொருளாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் உயரிய தலமாதலின் இப்பக்கதவற்சலேசுவரர் ஆலயத்தில் மூர்த்திகளை மிகச் சிறந்த முறையில் எழுந்தருளச் செய்திருக்கின்றனர். பக்தவச்சலரையும் திரிபுரசுந்தரியையும் இவ்வாலயத்தில் வணங்கி வழிபடுவர் அவரை அறியாமலே பஞ்சபூதத் தலங்களையே வணங்குகினறார்கள். சோமசுந்தர் ஆலயத்தை அடுத்திருக்கும் பிருதிவிலிங்கமாகிய ஏகாம்பரநாதரைத் தொடங்கி, அப்புலிங்கமாகிய சம்புகேசுவரர், தேய்வுலிங்கமாகிய அருணாசலேசுவரர், வாய்வு லிங்கமாகிய காளத்தி நாதர் முதலியவர்களை வணங்கி ஆகாய லிங்கமாகிய ஞான நடம் புரியும் நடராசப்பெருமானை வணங்குகிறார்கள். இதனால் இவ்வாலயத்தை தொழுவதால் சிவபெமானின் ஐந்து பெரும் பூதத்தலங்களையும் தொழும் பேறு கிடைக்கிறது.

நடராசர் ஆலயம் அழகிய மண்டபத்துடன் கூடிய பெரிய ஆலயம். இதுபோன்ற ஆலயம் பிற இடங்களில் காண்பதரிது. நடராசர் ஆலயத்துக்கெதிரில் உள்ள கற்றூணில் பெரிய துர்க்கை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது அதற்கு எதிரில் உள்ள கற்றூணில் அடியில் சுரகுரு மன்னனின் உருவம் பெரியதாக பொறிக்கப்பட்டுள்ளது. தூணில் தெற்கு, கிழக்கு, வடக்குப் பகுதிகளில், அடி, நடு, முடி, பகுதிகளில் சுருகுரு வேட்டையாடுதல், அம்பு பன்றி, பசு மீது பாய்தல், பன்றியும் பசுவும் பழைய வடிவம் பெறுதல், சுரகுரு மன்னன் கழுகுமுனிவர்களிடம் போராடுதல், கழுகு முனிவர்கள் தம் மூக்குகளில் ஆயுதங்களுடன் பறந்தவண்ணம் போரிடுதல், சுரகுர கழுகு முனிவரிடம் தலவிசேடம் அறிதல், சுரகுரு ஆலயம் அமைத்தல், வழிபடல், சிவபெருமான் விடைமீது காட்சி தருதல் முதலியவற்றை அத்தூணை மூன்று முறை வலமாகவரின் அறியலாம்.

நடராசர் ஆலயத்தை அடுத்து யாகசாலை மண்டபமும் தியான மண்டபமும் உள்ளன. இவ்வாலய மண்டபத் தூண்களி தலவாறு குறிக்கும் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ன.

வேதகிரீசருக்குச் சித்திரை திங்களில் பெருவிழாவும், திரிபுரசுந்தரிக்கு ஆடித் திங்களில் ஒரு திருவிழாவும் நடைபெறுகிறது. திரிபுரசுந்தரிக்கு ஆடி உத்திர நாளிலும், பங்குனி உத்திர நாளிலும், புரட்டாசி சுக்கிலபட்ச நவமியிலும் மூன்று மகாபிடேகம் நடைபெறுகிறன்றன. ஆடி உத்திரத்திலும், பங்கு உத்திரத்திலும் திருமண விழா சிறப்பாக நடைபெறுகிறது. கார்த்திகைத் திங்கள் கார்த்திகையில் சோதியைக் குறிக்கும் சொக்கப்பனை விழாவும் நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்தில் பக்தவற்சலர் முதலியவர்களுக்கு பூசைத் தொடங்கவதற்கு முன் தேரடியில் உள்ள விநாயகருக்குப் பூசை நடைபெறுகிறது. சித்திரைப் பெருவிழாவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஐந்து தேர்களில் விநாயகர், வேதகிரீசர், திரிபுரசுந்தரி, முருகர் சண்டிகேசுவரர் முதலியவர்கள் உலா வரும் காட்சி எங்கும் காணத காட்சியாகும்.

சேக்கிழார் பெருமான் எண்டிசையோர் பரவும் கழுக்குன்றம் என்றது புனைந்துரையன்று பட்சிதீர்த்தம் என வழங்கம் இத்தலத்தை வழிபடாத யாத்தரீகர்கள் இலர் பாரத நாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறந்து மலைமீது சிவபெருமான் சுயம்புருவில் எழுந்தருளியுள்ள ஒப்புயர்வற்ற தலம் இது ஒன்றேயாகும். தென் கைலாயம் என்பதற்குரிய சிறப்புடன் இம்மலைக்கோயில் விளங்குகிறது.

பாரத நாட்டவரேயன்றி வெளிநாட்டவரும் வந்து கண்டுகளிக்கும் தலம் பட்சி தீர்த்தத்தலம்.

மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் "கழுக்குன்றில் நின்று தண்நறுந்தாதிவர் சந்தனச் சோலைப் பந்தாடுகின்றார் எண்ணிறந்தார்" எண்ணிறந்தவர்கள் இத்தலத்திற்கு வந்து வணங்குகிறார்க்ள என்பதையே கூறியுள்ளார். இன்னும் எண்ணற்றவர்கள் வேதகிரியை காண வருகிறார்கள். இந்த மலையில் ஒன்பது சித்தர்கள்இருந்தனர். அதில் கோரக்கர் ஒருவர். நல்வினையாளர்களுக்கு மட்டும் அருள்பாலிக்கும் மூர்த்தியன்று இம்மூர்த்தி. அல்வினையாளருக்கும் அருள் பாலிக்கும் கருணாமூர்த்தி. இந்தச் சுயம்பு மூர்த்தியாகிய வேதகிரீசர்.

பாண்டிய நாட்டில் திருநெல்வேலியில் பாளையங்கோட்டையில் இருந்த அமைச்சன் ஒருவன், ஏதோ பிழை செய்து இவ்வேதகிரி மலைச்சாரலில் மறைந்துறைந்தான். எதிரிக்ள அவனைத் தேடி இங்கு வந்தனர். எதிரிபாராது அவர்கள் அமைச்சன் இருக்குமிடம் வந்துவிட்டனர். அவர்களைக் கண்டு, பயந்து இறைவனை துதித்தான். எதிரிகள் கண்களுக்கு இவன் தோன்றவில்லை. அவர்கள் ஊர்ந்து வந்த குதிரைகள் இவனைக் கடந்து சென்றுவிட்டன.

எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்த வேதகிரீசனைப் பலவாறு துதித்து, மலையடிவாரத்தில் மிகப்பெரிய சத்திரம் அமைத்து, வைகாசித் திங்களில் வசந்த விழாவும் செய்தனன். இன்றுள்ள அடிவாரச் சத்திரம் அவ்வமைச்சன் கட்டியதாகும்.

இத்தகு அருள்மிகு தலத்தை வழிபட்டு உய்வோமாக.

இத்தல வரலாறு, அந்தகக் கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருக்கழுக்குன்றம் புராணம், உலா மற்றும் கலம்பகம், பிரபந்தங்கள், பெரியபுராணம், வாதவூரார் புராணம், இளமையில் இவ்வூர் சான்றோர்கள் மூலம் அறிந்தவை, சித்தர் நூல்கள், எம் முன்னோர்கள் எழுதி வைத்திருந்து சில குறிப்புகள் முதலியவற்றைக் கொண்டு எழுதப்பட்டது கற்பனையோ, புனைந்துரையோ அன்று.

"அன்று உருத்திரகோடியர் அருசித்த
தானம்
என்று செப்பினும், எவ்வினைக்கேனும்
அங்குறினும்,
நின்றிறப்பினும், பிறப்பினும், நினைப்பினும்
ஒருநாள்
சென்(று) இருப்பினும் சிவபுரத்தடைவது
திண்ணம்

---திருச்சிற்றம்பலம்---

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளிய

திருக்கழுக்குன்றத் திருப்பதிகம்

தோடுடையா னொரு காதில்தூய குழை தாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருள் ஏமநடமாடும்
காடுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (1)

கேண வல்லான் கேழல் வெண் கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடை மேலொர் புனல் கொன்றை
பேணவல்லான் பெண்மகள் தன்னை யொருபாகம்
காணவல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (2)

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்கள் தொழுதேத்தும்
கானகத்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (3)

துணையல் செய்தான் தூயவண் டியாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல் செய்தான் பெண்ணின் நல்லாளை யொரு பாகம்
இணையல் செய்யா இலங்கெயின் மூன்றும் எரி யுண்ணக்
கணையல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (4)

பையுடைய பாம்பொடு நீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணல் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (5)

வெள்ளமெல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை
கொள்ள வல்லான் குரைகழ லேத்தும் சிறுத்தொண்டர்
உள்ளமெல்லாம் உள்கி நின்றாங்கே உடனாடும்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (6-7)

ஆதல் செய்தான் அரக்கர் தங்கோனை யருவரையின்
நோதல் செய்தான் நொடிவரையின்கண் விரலூன்றிப்
போதல் செய்தான் பெண்மகள் தன்னோ டொருபாகம்
காதல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (8)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இடந்த பெம்மான் ஏனமதாயும் அனமாயும்
தொடர்ந்த பெம்மான் துமதி சூடி வரையார் தம்
மடந்தை பெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்த பெம்மான் காதல்செய்கோயில் கழுக்குன்றே (9)

தேயநின்றான் திரிபுரங் கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாம்
சாயநின்றான் வன்சமண் குண்டர் சாக்கீயர்
காயநின்றான் காதல்செய் கோயில் கழுக்குன்றே (10)

கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் தமிழ் மாலை
பண்ணியல்பாற் பாடிய பத்தும் இவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே (11)

திருப்பெரு வேளூர் - திருப்பதிகம்

அண்ணாவுங் கழுக்குன்றும் ஆயமலை யவை வாழ்வார்
விண்ணொரு மண்ணோரும் வியந்தேத்த அருள் செய்வார்
கண்ணாவா ருலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ணாணாம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே (1)

திருஞாவுக்கரசர் அருளிய
திருக்கழுக்குன்றம் - திருத்தாண்டகம்

மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்கா டுடையானை முதலா னானை.
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை
ஆலால முண்டுகந்த ஐயன் தன்னைப்,
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

பல்லாடு தலைசடைமே லுடையான் தன்னைப்
பாய்புலித்தோலுடையானைப் பகவன் தன்னைச்
சொல்லோடு பொருளனைத்தும் ஆனான் தன்னைச்
சுடருருவில் என்பறாக் கோலத் தானை
அல்லாத காலனைமுன் அடர்த்தான் தன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளும் காபா லியைக்
கற்பத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்புகலூர் - திருத்தாண்டகம்

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று.
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. (பா.7)

திருப்புத்தூர்- திருத்தாண்டகம்

பற்றவன்காண் ஏனோர்க்கும் வானோ ருக்கும்
பராபரன்காண் தக்கன்றன் வேள்வி செற்ற,
கொற்றவன்காண் கொடுஞ்சினத்தை யடங்கச்செற்று
ஞானத்தை மேன்மிகுத்தல் கோளாக் கொண்ட
பெற்றியன்காண் பிறங்கருவிக் கழுக்குன்றத்தெம்
பிஞ்ஞகன்காண் பேரெழிலார் காம வேளைச்
செற்றவன்காண் சீர்மருவு திருப்புத் தூரில்
திருத் தளியான் காண் அவனென் சிந்தை யானே, (பா.7)

காப்புத்- திருத்தாண்டகம்

சிறையார் புனற்கெடில வீரட்டமுந்
திருப்பா திரிப்புலியூர் திருவா மாத்தூர்,
துறையார் வனமுனிக ளேத்த நின்ற
சோற்றுத் துறை துருத்தி நெய்த்தானமும்,
அறையார் புனலொழுகு காவிரி சூழ்
ஐயாற் றமுதன் பழனம் நல்ல
கறையார் பொழில்புடை சூழ் கானப்பேரும்
கழுக்குன்றம் தம்முடைய காப்புகளே, (பா.3)

பாவநாசத் திருப்பதிகம்

புறம்ப யத்தெம் முத்தினைப்
புகலூர் இலங்கு பொன்னினை
உறந்தை யோங்கு சிராப்பள்ளி
உலகம் விளக்கு ஞாயிற்றைக்
கறங்கு மருவிக் கழுக்குன்றிற்
காண்பார் காணும் கண்ணானை
அறஞ்சூழ் அதிகை வீரட்டத்
தரிமான் ஏற்றை அடைந்தேனே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிற பதிகங்களில் கழுக்குன்ற ஈசனைக் குறிப்பிடும் பாடல்கள்

திருக்கோடிகா - திருத்தாண்டகம்

உழையாடு கரதலமொன் றுடையான் கண்டாய்
ஒற்றியூர் ஒற்றியா உடையான் கண்டாய்
கழையாடு கழுக்குன்றம் அமர்ந்தான் கண்டாய்
காளத்திக் கற்பகமாய் நின்றான் கண்டாய்
இழையாடும் எண்புயத்த இறைவன் கண்டாய்
என்நெஞ்சத் துள்நீங்கா எம்மான் கண்டாய்
குழையாட நடமாடுங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையும் குழகன் தானே. (பா.7)

ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்

ஆரூர்மூ லட்டனாம் ஆனைக் காவும்
ஆக் கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணும்
கூரார் குறுக்கைவீ ரட்டா னமுங்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமும்
காரார் கழுக்குன்றும் கானப் பேரும்
கயிலாய நாதனையே காண லாமே (பா.2)

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானங் கேதா ரத்தும்
வெஞ்சாமக் கூடல் மீயச்சூர் வைகா
வேதீச்சுரம் விவீச்சுரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும்
கயிலாய நாதனையே காணலாமே (பா.5)

அடைவுத் திருத்தாண்டகம்

கந்தமா தனங்கயிலை மலைகே தாரங்
காளத்தி கழுக்குன்றங் கண்ணார் அண்ணா
மந்தமாம் பொழிற் சாரல் வடபர்ப்பதம்
மகேந்திரமா மலைநீலம் ஏம கூடம்
விந்தமா மலைவேதஞ் சைய மிக்க
வியன் பொதியின் மலைமேரு உதயம் மத்தம்
இந்துசே கரனுறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெடநின் றேத் வோமே (பா.9)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

திருக்கழுக்குன்றத் திருப்பதிகம்

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ நினைகள்தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (1)

இறங்கி சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடைய னெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித் தண்கழுக் குன்றமே. (2)

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம் வினைகள் அல்கி யழிந்திடத்
தோளு மெட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்டனுறையுந் தண்கழுக் குன்றமே. (3)

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடிடை
முளிறிலங்கு முழுவாளன் முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மதம்மூன்றுடைக்
களிறினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (4)

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படைய னெந்தை பிரானிடம்
முலைகளுண்டு தழுவிக் குட்டியொடுமுசுக்
கலைகள் பாயும் புறவில் தண்கழுக் குன்றமே. (5)

மடமு டைய அடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய அரவன் தான்பயி லும்மிடம்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே. (6)

ஊன மில்லா அடியார் தம்மனத்தேயுற
ஞான மூர்த்தி நட்ட மாடி நவிலும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்றமே. (7)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்த மில்லா அடியார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
கந்தம் நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. (8)

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் தானுறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே (9)

பல்லில் வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்
கல்லில் வெள்ளை யருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரண்தோ ளூரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொப மின்களே (10)

திருஇடையாறு திருப்பதிகம்

கச்சையூர் காவங் கழுக்குன்றங் காரோணம்
பிச்சையூர் திரிவான் கடவூர் வடபேறூர்
கச்சியூர் கச்சிசிச்சல் நெய்த் தானம்மிழலை
இச்சையூ ரெய்தமா னிடையா றிடைமருதே. (4)

மாணிக்கவாசகர் அருளிய

திருக்கழுக்குன்றப் பதிகம்

குருதரிசனம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க் (கு)
இணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தவின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டினாய்கழுக் குன்றிலே (1)

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேன் உனைச் சார்ந்திலேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிட்டனேசிவ லோகனே சிறு
நாயி னுங்கடை யாய வெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே (2)

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவ தறிந்திலேன்.
இலங்கு கின்றநின் சேவடிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே (3)

பூணொ ணாததொ ரன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாணம் எய்தி
நடுக்கடலுள் அழுந்தி நான்
பேணொ ணாதபெ ருந்துறைப் பெருந்
தோணி பற்றி யுகைத்லுங்
காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே (4)

கோல மேனிவ ராக மேகுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமேகரி யாக நானுனை
நச்சி நச்சிட வந்திடுங்
கால மேஉனை ஓதநீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே (5)

பேதம் இல்லதொர் கற்ப ளித்த
பெருந்துறைப் பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை
ஏதிலார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லால்உனை ஓத நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே (5)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இயக்கி மாரறு பத்து நால்வரை
எண்குணம் செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்ம லப்பழ
வல்வி னைக்குள் அழுந்தவும்
துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின்
தூய்ம லர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்முன்னே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. (7)

திருக்கோவையார்

விண்ணிறந் தார்நிலம் விண்டவர் என்றுமிக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத் தார்கழுக்குன்றினின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச் சோலைப்பந் தாடுகின்றார்
எண்ணிறந் தாரவர் யார்கண்ண தோமன்ன நின்னருளே - (107)

அருணகிரிநாதர் அருளிய
திருக்கழுக்குன்றம் - திருப்புகழ்

தனத்த னத்தந் தத்தன தானன
தனத்த னத்தந் தத்தன தானன
தனத்த னத்தந் தத்தன தானன தனதான

அகத்தி னைக்கொண் டிப்புவி மேல்சில
தினத்து மற்றொன் றுற்றறி யாதுபின்
அவத்துள் வைக்குஞ் சித்தச னாரடு கணையாலே

அசுத்த மைக்கண் கொப்புறு பாவையர்
புகைத்து ரைக்கும் பொய்க்கடல் மூழ்கியெ
அலக்க ணிற்பொன் றித்தடு மாறியே சிலநாள்போய்

இகத்தை மெய்க்கொண் டிப்புவி பாலர்பொன்
மயக்கி லுற்றம் பற்றைவி டாதுட
விளைப்பி ரைப்பும் பித்தமுமாய் நரை முதிர்வாயே

எமக்க யிற்றின் சிக்கினி லாமுனுன்
மலர்ப்ப தத்தின் பத்தவி டாமன
திருக்கு நன்றொண் டார்கிணை யாகவு னருள்தாராய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

புகழ்ச்சி லைக்கந் தர்ப்பனு மேபொடி
படச்சி ரித்தன் முப்புரம் நீறுசெய்
புகைக்க னற்கண் பெற்றவர் காதலி யருள்பாலா

புவிக்குள் யுத்தம் புத்திரர் சேயர
சனைத்து முற்றுஞ் செற்றிட வேபகை
புகட்டி வைக்குஞ் சக்கர பாணிதன் மருகோனே

திகழ்க்க டப்பம் புட்பம தார்புய
மறைத்து ருக்கொண் டற்புத மாகிய
தினைப்பு னத்தின் புற்றுறை பாவையை யணைசீலா

செகத்தி லுச்சம் பெற்றம ராவதி
யதற்கு மொப்பேன் றுற்றழ கேசெறி
திருக்க முக்குன் றத்தினில் மேவிய பெருமானே

தான தத்த தனந்த தான தனாதன
தான தத்த தனந்த தனாதன
தான தத்த தனந்த தனா தனாதன தனனதான

ஓல மிட்ட சுரும்பு தனா தனாவென
வேசி ரத்தில் விழுங்கை பளீர் பளீரென
வோசை பெற்ற சிலம்பு கலீர் கலீரென விரகல்லை

ஓர்மி டற்றி லெழும்புள் குகூ குகூவென
வேர்வை மெத்த வெழுந்து சலா சலாவென
ரோம குச்சு நிறைந்து சிலீர் சிலீரென அமுதமாரன்

ஆலயத்து ளிருந்து குபீர் குபீரென
வேகு திக்க வுடம்பு விரீர் விரீரென
ஆர முத்த மணிந்து அளா அளாவென மருவுமாதர்

ஆசை யிற்சை கலந் சுமா சுமா பவ
சாக ரத்தி லழுந்தி எழா எழாதுளம்
ஆறெ முத்தை நினைந்து குகா குகாவென
வகைவராதோ

மாலை யிட்ட சிரங்கள் செவேல் செவேலென
வேலெ முச்சி தரும்பல் வெளேல் வெளேலென
வாகை பெற்ற புயங்கள் கறேல் கறேலென
எதிர்கொள்சூரன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மார்பு மொக்க நெரிந்து கரீல் கரீலென
பேய்கு திக்க நிணங்கள் குழூ குழூவென
வாய்பு தைத்து விழுந்து ஐயோ ஐயோவென
உதிரமாறாய்

ே வலை வற்றி வறண்டு கறீல் கறீலென
மாலை வெற்பு மிடிந்து திடீர் திடீரென
மேன்மை பெற்ற கனங்கள் ஐயா ஐயாவென
விசைகள்கூற

வேலெ டுத்து நடந்த திவா கராசல
வேடுவப்பெண் மணந்த புயா சலாதமிழ்
வேத வெற்பி லமர்ந்த க்ருபா கராசிவ குமரவேளே

தனனதன தான தனனதன தான
தனன தன தான தனதான

எழுகுநிறை நாபி அரிபிரமர் சோதி
இலகுமரன் மூவர் முதலானோர்

இறைவியெனு மாதி பரைமுலையி னூறி
யெழுமமிர்தம் நாறு கனிவாயா

புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புநிதனென ஏடு தமிழாலே

புனலிலெதி ரேற அமணர் கழுவேற
அமர்பொருத வீர குருநாதா

மழுவுழைக பால வலியதிரி சூல
மணிகரவிநோத ரருள்பாலா

மலரயனை நீடு சிறைகொடவன் வேலை
வளமைபெற வேசெய் முருகோனை

கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு
கதிருலவு வாசல் நிறைவானோர்

கடலொலிய தான தமிழ்மறைகளோது
கதலிவன மேவு பெருமாளே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

வேத வெற்பி லேபு னத்தில் மேவி நிற்கு மபிராம
வெடுவச்சி பாத பத்ம மீது செச்சை முடிதோய
ஆதரித்து வேளை புக்க ஆறிரட்டி புயநேய
ஆத ரத்தொ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே
காது முக்ர வீரபத்ர காளி வெட்க மகுடாம்
காச முட்ட வீசி விட்ட காலர் பத்தி யிமையோரை
ஓது வித்த நாதர் கற்க வோது வித்த முனிநாண
ஓரே முத்தி லாறே முத்தை யோத வித்த பெருமாளே.

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அருளிய

வேதகிரீசுரர் பதிகம்

மேரு விலாவதின் நாணர வாவொரு
வெங்கணை மாலரியா
விரிதலை யுலகந் தேரா வதிலுறு
மிருசக டிரு சுடரா
ஆரண நாம் பரியா வம்புயன்
அமைவுறு சாரதியா
அவைநீ யுற்றிக லழியமுப்புரம்
அட்டிடு மந்நாளின்
சீருறு மூவர்க ளழியாதுன்னடி
சேரா நின்றனராற்
சிந்தையி லுன்றனை மறவாதவர்தமைத்
தொறுபவ ரெவரே காண்
வேரி நறுந்தொடை மாதொருபங்குறை
வெற்பே கற்பகமே
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே (1)

ஆயு தாந்தனி லேயும் பொழுதும்
ஐம்பே ரிடராகும்
அகிலத் துறுசிறு குழவிப் பருவத்
தறியா மையினிட ராகும்
ஏய குமாரத் திடர்கா மத்தால்
எழின்மனை சுதரெனவே
ஏயும் பொழுது மிடர்பிணி யாலிடர்
இலதா மிடிவந்தால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காயும் பசியா லிடர்பின் நரைதிரை
காணுறு போதுமிடர்,
கால னுதித் திடு போதுறு மிடரைக்
கடவுள் நீயறிவாய்,
மேய விடர்க்கடல் மூழ்கு மெனச்சுக
வேளை யினீ வைப்பாய்,
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே (2)

களபப் படிரப் புளகக் கொங்கைக்
கன்னியர் போகத்தைக்
கருதிக் கருதிச் சுடர் விட்டிலினிற்
கடையேன் மடியாமல்,
இளகு மனத்தோ டுனையே நாடி
யிருந்திங் கென்செயல்போய்
எல்லா நின்செய லாக நினைந்தென்
இருளரு நாளென் றோ,
முளரிநி கர்த்திடு கண்ணற் கரசே
முண்டக னுக் கரசே
முத்திக் கரசே பத்திக் கரசே
மூதறி வோர்க் கரசே,
விளரிய டுத்தளி பாடி முரன்றெழு
வெறியார் பொழில் சூழும்
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே. (3)

அளியுயிர் மேலு நின்மே லன்பும்
ஆகந் தனையமனாய்
அறியு முவர்ப்பும் நின்றிடு ஞானம்
அடியே னுக்கரளிப்
புளிதரு பழமு மோடும் போலப்
புரை தீர் நெஞ்சினர்பாற்
போத விருத்தித் தீதகல் வித்துன்
பொன்னடி யென்றருள்வாய்,
ஒளிதரு மிமயாசல முன்னுதவிய
வொருமயில் களிகூர
வுற்றிடு காரே கற்றவர் சீரே
யோது மறைப் பேறே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

வெளியினில் வெளியே பொளியினி லொளியே
மிகுசுக சாகரமே
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே. (4)

மறையா கமமுத லெவையுந் தரும
மாதிய வோதியிடு
மற்றவை தம்மு ளறமும் பொருளும்
மலிதுன் பத்தனவாம்
நெறியா சூம்பினிரண்டும் சுகமவை
நிகழ்விட யானந்தம்
நீடுறு சொருபா னந்தம் எனவே
நின்றிடு மவைதம்முள்
பொறியா னுகர்விட யானந் தந்துயர்
போதானந்தபு மதே
புகலரு மழியா நிரதி சயமிது
பொருளென வருள் தந்தோய்
வெறியார் பாத சரோருக மென்றலை
மீதுற வருள் புரிவாய்
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே (5)

ஆகா ராதிய நாலு மிளிரும்
அங்கி யினுறு கூறாம்
அவையுட் பயமொன் றகலச் சொலும்
அவையா மின்பென வெண்ணி,
யோகா துறுபய மொன்றுந் துன்பென்
றெணியிச் சுகதுன்பத்
திடையே படிவே னுனையே நினையேன்
என்று னரள்பேறு வேன்,
மோகா திகளுறு பிறவிக் கடலின்
மூழ்கா துன்னருள்
மூரிக் கப்ப லிடத்தே வைத்தெனை
முத்திக் கரையுய்க்கும்
மீகா மனைநிக ராகிய வொருவா
மிகுபூரண சொருபா
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே. (6)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேகம் பூதச் சடமா மதிலே
திகழ் கரணம் பொறியாற்
சிறுவிடயத்தா னுண்டே சுழலுந்
தீமை யினுய்ப் பதுவாம்,
போகம்புவனம் புறமா மிதிலே
பொலிவுறு நீயாரே
புந்தியிலா திவை யானென தென்று
புலம்பித் திரிகின்றாய்,
ஏகம தாய்மிகு சுகமா யெங்கும்
இருந்திடு பூரண மாய்
இலகு முனைத்தொடர் பிறவியிலுய்த்
திடரெய் தாயென்றருளி,
வேக மனப்பரி நிறுவிச் சொரூபம்
விளக்கிடு மாரியனே
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக் கனியே (7)

அகலி சராசர மெவையு நடத்துவை
ஐந்தொழிலாலி வையுள்
ஆன சிருட்டி யளித்த லழித்தலும்
ஆக மதிற் சாரும்
புகலு மறப்புந் தெளிவுற்றலுமே
பொலி யுயிரிடை சாரும்
போக மற்று திரோத மெனக்குப்
போக்கிற் குறைபடுமோ
பகரரு மறிவா னந்தச் சுடரே
பரகதி யெனையுய்க்கும்
பண்பார் துணையே யென்பாலமுதே
பாகே மா கடலே
மிகுநெறி தவமார் தெய்வ கங்கம்
விளங்கி யிருந்து தொழும்
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே (8)

தனதா னியமிட மாடா டாதி
தயங்கு பொருட்சார்புத்
தரு தாய் தந்தைகண் மின்னா ராதி
சாரு முயிர்ச் சார்பும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

இன மார் சார்புக ளிவைமே லாசை
யிகந்தா மையி னைந்தும்
எழில்பெற வுட்கொண்டசையா தென்று
மிருந்து சமாதியிலே,
மனமார் வாதனை யறவே யென்று
மதித்த சுழுத்தியனாய்
மன்னிரு ளற்றுனை யென்றணை கிற்பேன்
மாத வாமா கடலே
மினலார் மேகந் தங்கிப் பொழில்வாய்
வெண்டாரை துளிகால்
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக் கனியே (9)

வீடென் றறைதரு சொற்குப் பொருளோ
விடுதலை யாதலினால்
வீக குண் டோனுங் கட்டும் முன்னர்
விளங்குந் திடமாகப்,
பீடுறு கட்டுத் தானாய் விட்டுப்
பெயரா திதுசடமாம்
பிணி பட்டோன் சுதந்தரனாமிப்
பிணிபெயரச் செய்வோன்,
நீடு சுதந்தர முளனா மொருவன்
நேரு மிவ்வே துவினால்
நிகழ்பதி பசு பாசம்மெனு முப்பொருள்
நித்திய மென்றருளி,
வேடனை வெல்லுங் குருவா யெனையாள்
மெய்ப் பொருள் நீயன்றோ
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே (10)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் குமாரர் தவத்திரு. செந்தினாயக சுவாமிகளின் பாதசேகரரான

திருநெல்வேலி
மாணிக்கவாசக ஐயா அவர்கள் இயற்றிய
திருபுரசுந்தரியம்மை பதிகம்
(இரட்டை ஆசிரிய விருத்தம்)

திருமாது மயன்மகிழு மொருமாது முயர்பணி
தினஞ்செயும் பெருமை பெற்றுச்
சிவனிடப் பாகத்தமைந்துமுனி வரர்தேவர்
சித்தரா தியர் வணங்கிப்
பெருவாழ்வு பெற்றுய வழங்குமுயர் கருணைப்
பிராட்டிநீ யென்றுவல்லோர்
பேசுமொழி வினவியடி யேனுனது திருவடிப்
பிரசமலர் சரண மென்று
வருமார்வ முற்றே னெனக்கான நல்வரம்
வழங்கியுன் னடியர் குழுவில்
வைகிக்க ளித்தினியி வையத்தி னிற்பிறவி
மருவாத கதியில் வைப்பாய்
பொருள்வாழ்வி னிற்செழித் தருள்வாழ்வை நாடுமவர்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரசுந்த ரிக்கவுரியே (1)

சிவஞான போதமொடு விழியால்மெய் மோனநிலை
திகழ் நாலு முனிவர் கொள்ளச்
செறியால மரநிழலி னிடை குரவ னாகியருள்
சிவனான பரமனுனது
தவசால் மணஞ்செய்தன னெனவேமு ழங்குகதை
தனையாவரும் பகர்வதாற்
றமியேனு முன்றனரு ளெனும்வீறு கொண்டுவகை
தருயோக ரும்புகழவே
பவமான நிந்தை மிகு மவமாதர் கொங்கை மயல்
பழுதான தென்ற வுணர்வாற்
பழகார்வ கொங்கணர்சொல் முறையே வணங்குசெயல்
பதிவாக வென்று தருவாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புவனாம்பி கைப்பெணொடு பரலைநீ யெனு மறிஞர்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகமு கவிர்குன்றி லுற்ற திரி (2)
புரசுந்த ரிக்கவுரியே

திரு வாத வூரனுஞ் சீகாழி வள்ளலுந்
திகழ்நாவி னுக் கரசனும்
சிவனன்று தூதுசெல மனமார்வ முற்றவுயர்
திறநாவ லூராளியும்
பெருவாழ்வு பெறவேண்டி யிகவாழ்வ னைத்தையும்
பிழையாமெ னத்தவிர்த்துப்
பேசு தமிழ் மாலைகவி யாசையொடு பாடிநற்
பிரச மலரிணை யடிநிழற்
பிரியாத வீடருள் பிரானேயெ னச்சொலிப்
பெறு பட்டி னத் தடிகளும்
பிரிய முட னன்றுநின் கணவனருள் சேர்ந்தனர்
பிறங்கவெனை நீபுரப்பாய்
பொருள் வீர கெம்பீர வுற்சாக மன்னர்பலர்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகமு கவிர்குன்றி லுற்றதிரி
புரசுந்த ரிக்கவுரியே (3)

செறி மேரு மலைசிலைகொள் சிவனார்மு னந்தழற்
சிலையாம்ப திக்குகை யினிற்
சிவயோக மருவுகுகை நமசிவா யப்பெயர்
திகழ்ந்திடக் கொள்ளுமேலோன்
பிறிதேயி லாதமல ரடிநாடி நற்குருப்
பெயர்நமசி வாயமுனிவன்
பேரம்ப லந்தொழுது வானும்பு கழ்ந்திடும்
பேதம்பொ ருந்தியுறுநாள்
வறிதாகி டாமலுனை வழிபாடு செய்யவெழில்
மதுரையூ ரிற்பசியினால்
மறுகாம லுண்டிதர வருமாடல் போலெனையும்
மலியருள்கொ டாதரிப்பாய்
பொறிவாயி லைந்தவித் தருண்மேவு சட்டமுனி
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகமு கவிர்குன்றி லுற்றதிரி
புரசுந்த ரிக்கவுரியே. (4)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவால வாயினிற் குமரகுரு பரமுனிசொல்
செய்யபிள்ளைக் கவிக்காச்
சிவவேதி யன்றனது மகள்போல மைந்தன்று
திருமலைப் பெயர் மன்னவன்
பெருமாத வத்தகை கொள் மடிமீதி லுறும்நினது
பெருமையைத் துதிசெயுங்காற்
பேசரிய வின்புகொண் டிடுமென்ற னுள்ளநிலை
பிறழாமல் நிற்க வைத்து
வரமேவு குமரகுரு பரனான வுனதிளைய
மைந்நனடி பேணிமாயா
வாதனைக் ளானவினை மோதரிய வத்துவித
வழியாங் கௌ மாரமருள்வாய்
பொருவாத நற்பொதிய வரைமீது முத்தர் பலர்
போற்றச் சிறந்த முதல்வீ
புவி யெங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரசுந்த ரிக்கவுரியே. (5)

இந்துநிகர் வதனமுட னிணைமீனெ னத்திகழ்ந்
தெழிலருள்பெய் கண்ணினழகும்
இசைமேவு குமுதமுறழ் கனிவாயும் நற்குமிழ்
எனக்குலவு மணிநாசியும்
அந்தரமு லாவுமிரு சுடராய குழையணிந்
தாடியவிர் செவியிரண்டும்
அலராத முல்லையென வரனார்மனங் கவரும்
அழகு நிறை பல்லின ணியும்
சிந்துரமு கத்தனுஞ் செவ்வேளும் நுகரவருள்
செறிபால்சு ரந்த தனமும்
சீர் மருவு வித்தையா ரணியனுய்வுறமுனம்
சேர் பதமு மிலக வருவாய்
பொந்த விர்ம ரங்கள் பொலியும் பொழிலிலன்பர் பலர்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரசுந்த ரிக்கவுரியே. (6)

திரமான புகழ்மருவு சிரமாபு ரஞ்செய்தவ
சிவபாத விருதயர் பெறுஞ்
சிசுவாகி வந்தமுனி மலர்வாவி யினிலமுத
தினம் ஞான வமுதளித்தாய்
தெருளான தின்றியபி ராமபட்டன் செய்த
சிறு பூசையிற் களித்துச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செறியிருளுவா நாளின் முழுமதியு தித்திடச்
செய்து புகழ் திகழவைத் தாய்
வரை மீது ருண்டுகுகன ருண்மேவி யன்று பல
மறைவாய்மை நூல்பகர்ந்த
வண்மை யொடு தண்டமணி குருநாத னோதுமுயர்
மகிழ்வான வரமளிப்பாய்
புருகூத னயன் மாயன் மலர்மாரன் முதலோர்கள்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரச்சுந்த ரிக்கவுரியே. (7)

சிறிதான நிம்பமலர் மணிமாலை யொடு கொண்ட
திரடோளில் வேலு மேந்தித்
திகழ் சோதி யுறு மகுட கேயூர மிலகிடத்
திருவாரு மதுரை யதனைப்
பிறிதான வரசர் தொழ வாண்டிடை பெருக்குநற்
பெருமையுறு மரசி யென்றும்
பேசரிய தொண்டர் பணி யாசை கொளு மின்பினால்
பிரியமுறு சீனிவாசன்
பெறலரிய பேறு கொள லொருபொழுது சமையல் செய்
பிராட்டியென் றும்பல் பாவாற்
பேசிக் களிக்கு மொரு பிள்ளையா மேற்குயர்
பெரும் பேற ளித்தருளுவாய்
பொரி யாறு ரைப்பவர்க் கருள் குகனோ டைங்கான்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியொங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரச்சுத்த ரிக்கவுரியே. (8)

திருமாலு டன்பிறந் தருளீச னிடமதிற்
செயமோடமர்ந்து நிதமும்
சிவநேசமுறு தொண்டர் நசையாவையுந்தந்து
செயலாக வைத்தல் பொய்யோ
பெரிதான பிள்ளைதனை மடிமீதி னிற்றினம்
பிரியாது றத்தாங்கியுட்
பிடிவாத முடையவொரு முனியாம்பி ரிங்கிபுரி
பிழையைமிக வும்பொறுத்தாய்
அரிதான மகிமையுறும்அணிமாதி சித்திவகை
அனைவொரு மறிநல்கி
அடியேனுனக் கன்பனெனமாநி லத்தொண்டர்
அறைசீரெ னக்குதவுவாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புரை தீர்த மிழ்ச்சந்தம் நவில்பாவ லத்துங்கர்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரச்சுந்த ரிக்கவுரியே. (9)

திங்கள்பணி கங்கையொடு கொன்றைமலர் முடியின்மிசை
சேரப்புனைந்து மகிழும்
சிவனார்த மக்கினிய மனமார்வமுற்ற குண
சிவையான நீமுன்மகளாம்
மங்கைவடி வாகிநற் கவிரார்ச பண்டிதனை
வாழ்விக்க வெண்ணி இனிதே
மாதமிரு மூன்று வழிநடைகொண்டு வாயிலுண
மலிசுவைகொ ளமுதுமட்டாய்
செங்கையினி லங்குசம்பாசம ரைங்கணை
செழுங்கரும் பொடுபளிங்கின்
செபமாலை யபயவர தங்கொளுன் சேவையிச்
சிறியனேற் குதவியாள்வாய்
பொங்கரவ பூடணச்சிவனான கணவனும்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரச்சுந்த ரிக்கவுரியே (10)

செலவுவர வற்றதவ யோகியர்கள் முன்செய்த
தெளிவான மோனமுறையிற்
சிவபோக நெறியின்ப வடிவான பூமிவகை
திகழா றெனப் பணிடுவார்
சிலைவாண ருங்ககன வாணர்களும் வந்துனது
திருவலமமர்ந்த சிவனைத்
திரமான விஞ்சைமறை மலைநாய காவென்று
செப்பதுதி யேற்று மகிழ்வாய்
பலவாம்வ ளங்களுடன ருணீடு நெல்லைவரு
பாலன்மணி வாசகப்பேர்
பற்றுமடி யேனின்று நுவல்பாடல் கொண்டிணையில்
பதமேவ ழங்கியருள் வாய்,
புலையோடு கொலை வேள்வி தவறு மெனும் பெரியர்
போற்றச் சிறந்த முதல்வீ
புவியெங்கு மெச்சுகழு கவிர்குன்றி லுற்றதிரி
புரச்சுந்த ரிக்கவுரியே. (11)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உங்கள் இல்லத்தின் திருமணம்
மற்றும் சுபநிகழ்ச்சிகள் அனைத்திற்கும்
சிறந்த முறையில் டிஜிட்டல் புகைப்படங்கள்,
டிஜிட்டல் வீடியோ கவரேஜ் மற்றும்
கம்ப்பூட்டர் மிக்ஸிங் வீடியோ கவரேஜ்
ஆகியவற்றை சிறந்த முறையில்
நவீன வசதிகளுடன் எடுத்துத்தர அணுகவும்.

நவீன் போட்டோஸ்

எண்.36/81 தெற்குமாடவீதி
திருக்கழுக்குன்றம்-603109.
போன் : 04114-247928.
காஞ்சிபுரம் மாவட்டம்.

ஸ்ரீ சக்தி அச்சகம் (ஆப்செட்) திருக்கழுக்குன்றம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection